May 2018

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

9ம் ஆண்டில்



# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

அய் தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

May 2018

சுவடி — 8
ஓலை — 3

**வணக்கம் பல**

சில சந்திப்புகள் நிகழ்வதே தெரியாமல் இருந்தாலும், வரலாற்றையே மாற்றிவிடும் நிகழ்வாக அமைந்துவிடுவதும் உண்டு! சில சந்திப்புகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது போலத் தோன்றினாலும், வெறும் ஏட்டளவில் மட்டுமே நின்றுபோய் விடுவதும் உண்டு!

கடந்த மாதத்தில் நிகழ்ந்த இரண்டு சந்திப்புகள் உலகத்தின் பார்வையில் அதிக கவனத்தை ஈர்த்திருக்கின்றன. இவை இரண்டும், சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு நன்மை பயப்பதைத் தாண்டியும், உலக சமாதானத்தை விரும்பும் நாடுகளின் பார்வையில் வரவேற்கத்தக்க நிகழ்வாக அமைந்திருக்கின்றன.

வட—தென் கொரிய அதிபர்களுக்குள் சமீபத்தில் நிகழ்ந்த சந்திப்பானது, அவ்விரு நாடுகளுக்கு மட்டுமல்லாது, வல்லரசு நாடுகளும் கூட வரவேற்று மகிழும் சந்திப்பாக அமைந்தது. அணு ஆயுத ஒழிப்பு, போர்ச் சூழல் தவிர்த்து சமாதானத்தை நாடுவது போன்ற ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை முன்வைத்ததால், வரலாற்று முக்கியத்துவம் பெற்றிருக்கிறது அச்சந்திப்பு!

இன்னொருபுறம் வழக்கமாக நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டுச் சந்திப்பானது, சில பல மாயத்தோற்றங்களைக் காட்டியிருக்கிறது. இந்தியப் பிரதமருக்கு எதிராக காமன்வெல்த்தின்போது, எழுந்த மக்களின் எதிர்ப்புக் குரலை யாரும் எளிதாகப் புறந்தள்ள முடியாது.

தமிழகத்தைப் பொருத்தவரை காவிரி விவகாரத்தில் இந்திய நடுவணரசு செய்யும் அரசியல், கீழ்த்தரமானது மட்டுமல்ல, தேசம், தேசியம் என்ற உணர்வுகளுக்கு எதிரானதாக இருக்கிறது. மாநிலப் பிரிவினைகளைத் தூண்டும் விதமாக நடந்துக் கொள்கிற நடுவண் அரசு ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை அசைத்துப் பார்க்கிறது. தமிழினத்தின் மீதும், தமிழகத்தின்மீதும் விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கிற செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

உழைக்கும் வர்க்கத்தினரை உயர்த்திப் பிடிக்கும் மாதமாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது இம்மாதம். கல்லைக் கனியாக்கும் வித்தை அறிந்தவர்கள் என்று உழைப்பாளர்கள். அவர்கள் வாழ்வும் கனிந்திட வேண்டும் என்கிற வேண்டுதலோடு மலர்கின்ற நமது 'அய் தமிழ்' இதழ், உலகத் தொழிலாளர் அனைவருக்கும் உழைப்பாளர் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

நேசப்பகிர்தலுடன்

**ஆசிரியர் குழு**

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

## உள்ளே...



மீண்டும் கூடிக் கலைந்தது நிஜந்தானா? நடக்குமா?

திராவிடம் காட்டிய சமத்துவம்

வாய்மையே இணையத்தை வெல்லும்!

என்றும் நடவாய் வாழி காவேரி!

அறிவோம் தமிழர் பெருமை

மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

சிவகாமியின் சபதம்

தலைமுறை மறந்த சூழல் மருத்துவ தமிழ்

பிள்ளையைத் தோழராய் வளர்ப்போம்

**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar
Vijayarajah

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
editor@ithamil.com

# மீண்டும்

## புத்துயிர் பெறும் காமன்வெல்த்

சூரியன் அஸ்தமிக்காத பேரரசு என்ற பெயரோடு நூற்றாண்டுகளை வியாபித்திருந்த பிரிட்டிஷ் அரசு ஒரு காலகட்டத்தில் கிட்டத்தட்ட இந்த பூமியின் நான்கில் ஒரு பகுதியை (24%) தன்னுடைய கைகளில் வைத்திருந்தது. உலகின் 23% மக்கள் அதன் வசம் இருந்தனர். நவீன வரலாற்றில் உலகின் முதல் பெரும் சக்தியாக இருந்த பிரிட்டனின் ஆதிக்கத்துக்கு உலகப் போர்களுக்குப் பிந்தைய ஜனநாயக யுகம் முடிவு கட்டியது.

காலனிய காலத்துக்குப் பின்னரும் தன்னுடைய காலனி நாடுகளுடன் நல்லுறவுகளைத் தொடரும் நோக்கிலும், சர்வதேச அளவில் தனக்கென ஒரு வலைப்பின்னலோடு முன்னகரும் நோக்கிலும் பிரிட்டன் உருவாக்கியதே காமன்வெல்த் அமைப்பு. அரசியல்,ஜனநாயகம், கலை, கலாச்சாரப் பரிவர்த்தனைகள் என்று இலக்குகள் விரிந்தாலும், அதன் மையம் வர்த்தக உறவு. தொடக்க நாட்களில் அது அழைக்கப்பட்டபடி 'பிரிட்டிஷ் காமன்வெல்த்' என்பதே அதன் மைய நோக்கமாகவும் இருந்தது.



இன்று 'காமன்வெல்த் ஆஃப் நேஷன்ஸ்' என்று அழைக்கப்படும் காமன்வெல்த் அமைப்பில் 53 நாடுகள் உறுப்பு நாடுகளாக இடம்பெற்றிருக்கின்றன. உலகின் நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பங்கையும் உலக மக்கள்தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கையும் வகிக்கும் இந்த நாடுகள் வர்த்தகத்திலும் முக்கியமான பங்கை வகிக்கின்றன. இந்த நாடுகளின் மொத்த உற்பத்தி மதிப்பு14,623 லட்சம் கோடி டாலர்கள். உலக வருமானத்தில் இது 14%.

விரிந்த தாராளப் பார்வையைக் கொண்டதாகவே காமன்வெல்த் கட்டமைக்கப்பட்டது. 'காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த எந்த ஒரு குடிமகனும் பிரிட்டன் பிரதமராக முடியும்' என்ற

# கூடிக் கலைந்தது

சட்ட வழிவகையை ஓர் உதாரணமாக இங்கு குறிப்பிடலாம். வணிகத்தைத் தாண்டியும் சர்வதேச அளவில் பெரிய அரசியல் — கலாச்சாரப் பரிவர்த்தனை சக்தியாக காமன்வெல்த்தை வளர்த்தெடுத்திருக்க முடியும். ஆனால்,பெரிய நோக்கங்களுடன் தொடங்கப்பட்ட காமன்வெல்த்




எல்லா வகைகளிலுமே தூங்கும் ராட்சதனாகவே முடங்கிக் கிடந்தது.

உலகப் போருக்குப் பிந்தைய சூழல் பிரிட்டனை சர்வதேச அளவில் பின்னுக்குத் தள்ளியது. உலகப் போரில் ஏற்பட்ட பெரும் செலவு,கடன்கள் போன்ற இழப்புகளோடு, அடுத்தடுத்து நிகழ்ந்த காலனிய நாடுகளின் விடுதலையும் சேர்ந்து அதன் வருமானத்துக்கு பேரடி கொடுத்தது. கூடவே அந்நாடுகளிலிருந்து வெகு மலிவாகவும், தொடர்ந்தும் கிடைத்துவந்த கச்சாப்பொருட்களின் நீரோட்டமும் அடி வாங்கியது. பொருளாதாரரீதியாக பிரிட்டன் ஓரடி கீழே இறங்கிய இதே காலகட்டத்தில்தான், உலகம் அமெரிக்கா தலைமையில் ஓரணியாகவும் சோவியத் ஒன்றியத்தின் தலைமையில் ஓரணியாகவும் பிரிந்தது. இரண்டிலும் சேர விரும்பாத இந்தியா உள்ளிட்ட நாடுகள் ‘அணி சாரா இயக்கம்’ கண்டன.

இந்த மூன்று பிரிவுகளில் மூன்றாவது அணியின் செயல்பாடு பிந்தியிருக்க முதலாவது அணியின் செயல்பாடு பாய்ச்சல் கண்டது. ஒரே சமயத்தில் மிகப் பெரிய வேளாண்மை நாடாகவும் தொழில்வள நாடாகவும் தொழில்நுட்பங்களைக் கையாளும் நாடாகவும்

உருவெடுத்தது அமெரிக்கா. இணை சக்தியாக வளர்ந்தது சோவியத் ஒன்றியம். இவை இரண்டும் சார்ந்து இடையில் பொருளாதாரரீதியாகவும் — ராஜீயரீதியாகவும் 'நேட்டோ', 'வார்சா' போன்று பல்வேறு அமைப்புகள் உருவான நிலையில், அவற்றுக்கு இடையில் பிரிட்டனும் கூடவே அதன் காமன்வெல்த் கனவும் மூடுண்டது.

நாடுகளில் ஒன்றாக இருந்தது பிரிட்டன்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகுவது என்ற முடிவு இரு தரப்புக்குமே பல பாதிப்புகளையும் தரக் கூடியது என்றாலும்,தன்னுடைய மக்களின் முடிவைச் செயல்படுத்த பிரிட்டன் முழு அளவில்



சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி ஆசியாவிலிருந்து ஒரு வலுவான சக்தியாக சீனா கிளர்ந்தெழ வழிவகுத்ததே தவிர, பிரிட்டன் தன்னுடைய மீட்சியை அடைய எந்த வகையிலும் உதவவில்லை. தெற்காசியாவில் ஜப்பான் தொடக்கிவைத்த புதிய தொழில் கலாச்சாரம் சீனா, கொரியா, இந்தியா என்று பரவ இதே காலகட்டத்தில் பிரிட்டன் தன்னுடைய பொருளாதாரத்தைப் படிப்படியாக உற்பத்தி மையத்திலிருந்து சேவை மையத்துக்கு மாற்றிக்கொண்டது. ஐரோப்பாவில் பிரிட்டனைவிட ஜெர்மனி பெரும் சக்தியாக உருவெடுத்தது.

அமெரிக்காவுக்கும் ஆசியாவில் ஜப்பான், சீனா, இந்தியா, கொரியாவுக்கும் இடையில் தங்களுடைய பொருளாதார முன்னிலையைத் தக்க வைத்துக்கொள்ள ஐரோப்பிய நாடுகள் முன்னெடுத்த ஐரோப்பிய ஒன்றியம் அமைப்பானது, பிரிட்டனின் பொருளாதார முன்னிலைக்கும் வலு சேர்த்தது. உலக மக்கள்தொகையில் வெறும் 7.3% என்றாலும், உலகின் உற்பத்தி மதிப்பில் 22.2% பங்குடன் வலுவான நிலையில் உள்ளது ஐரோப்பிய ஒன்றியம். அதன் நான்கு முன்னிலை

ஆயத்தமாகிவருகிறது. வெறுமனே ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதன் வாயிலாக ஏற்படும் இழப்புகளை ஈடுகட்டுவதோடு விட்டுவிடாமல், ராஜீயரீதியிலும் பொருளாதாரரீதியிலும் தனக்கென ஒரு அணி, பாதையை வகுத்துக்கொள்ளும் வியூகத்தையும் கையில் அது எடுத்திருக்கிறது. அதன் முக்கியமான ஒரு அம்சம் காமன்வெல்த் மீட்டுருவாக்கம்.

ஐரோப்பிய ஒன்றியமும் காமன்வெல்த் அமைப்பும் இணையானவை அல்ல. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்தும் ஐரோப்பியக் கண்டத்திலேயே இருப்பவை. பொதுவான சந்தையை அவை பகிர்ந்துகொள்கின்றன. பொதுச் செலாவணியை — ஈரோ டாலர் —பயன்படுத்துகின்றன. வர்த்தகச் சட்டங்களும் இவற்றுக்கிடையில் பொதுவானவை. ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் பரஸ்பரம் பிற நாடுகளில் சென்று வேலை செய்யவும் தொழில் செய்யவும் தடையில்லை.

இதோடு காமன்வெல்த் நாடுகளை ஒப்பிட முடியாது. பல வகைகளில் அவை வேறுபட்டவை. இந்தியா — பாகிஸ்தானை ஓர் உதாரணமாகச்

சொல்லலாம். ஐக்கிய நாடுகள் சபையிலோ, பிற சர்வதேச அமைப்புகளிலோ இந்த நாடுகள் ஒரு குழுவாக வாக்களித்ததே கிடையாது. ராஜீய நடவடிக்கைகளிலும் சேர்ந்து செயல்படுவது கிடையாது. பொருளாதார அணிகளிலும் ராணுவ



அணிகளிலும் இவை ஒன்று போல சேர்ந்தது கிடையாது.

ஆனால், உலகின் மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்ட பெரிய சந்தை இது என்பது மிக முக்கியமான வாய்ப்பு.அமெரிக்கா, சீனா இரு வல்லரசுகளுக்கும் வெளியே ஒரு மாற்று அமைப்பாக வளர்த்தெடுக்க வாய்ப்புள்ள ஊடகம் என்பது வியூகரீதியாக முக்கியத்துவம் பெறுகிறது. 1950—களில் ஐரோப்பிய நாடுகளுடனான வர்த்தக உறவைப் போல நான்கு மடங்கு மதிப்புக்கு வர்த்தக உறவை காமன்வெல்த் நாடுகளுடன் கொண்டிருந்தது பிரிட்டன். எல்லோர்க்கும் வாய்ப்பளிக்கும் கூட்டமைப்பாகப் புத்துயிர் கொடுப்பதன் வாயிலாக தன்னையும் பலப்படுத்திக்கொள்ள முடியும்; தன் கூட்டாளிகளும் பலமடைய முடியும் என்று அது நம்புகிறது.

காமன்வெல்த்தின் மையம் நோக்கி இந்தியா நகர்ந்தால்தான் இந்தப் புதிய வியூகம் எடுபடும் என்ற முடிவை நோக்கி பிரிட்டன் நகர்ந்திருப்பதுதான் இந்தச் சூழலின் வரலாற்று முக்கியத்துவம். காமன்வெல்த் நாடுகளின் மக்கள்தொகையில் சரிபாதிக்கும் மேலதிக மக்கள்தொகையையும் காமன்வெல்த் நாடுகளிடையேயான வர்த்தகத்தில் கால் பகுதியையும் கொண்ட இந்தியாவை அந்த அமைப்பின் மையத்துக்குக் கொண்டுவருவதன் வாயிலாகவே காமன்வெல்த்தை வளர்த்தெடுக்க முடியும் என்று பிரிட்டன் கருதுகிறது.

வேல்ஸ் இளவரசரான சார்லஸ் காமன்வெல்த் அமைப்பின் அடுத்த தலைவராவார் என்று அதன் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

முன்னதாக, தனக்கு அடுத்ததாக காமன்வெல்த் அமைப்பின் தலைவராக இளவரசர் சார்லஸ் 'எப்போதாவது ஒரு நாள்' நியமிக்கப்படுவது தனது "மனமார்ந்த விருப்பம்" என்று பிரிட்டிஷ் அரசி இரண்டாம் எலிசபெத் தெரிவித்திருந்தார்.

பிரிட்டன் பிரதமர் தெரீசா மே மற்றும் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆகியோர் முன்னதாக இளவரசர் சார்லஸ் தலைமைப் பதவிக்கு வருவதற்கு ஆதரவு கொடுத்திருந்தனர்.

இந்த செய்தி அரசிக்கு பெரும் திருப்தியைத் தருவதாக இருக்கும் என்று பிபிசியின் அரச குடும்ப செய்தியாளரான டயமான்ட் தெரிவித்துள்ளார்.

காமன்வெல்த் நாடுகள் இடையேயான கடல் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட அம்சங்கள் இந்த இரண்டு நாள் காமன்வெல்த் உச்சிமாநாட்டில் விவாதிக்கப்பட்டு வருகிற பிற விஷயங்கள்.

இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் சந்திப்பானது

இந்த ஆண்டு பத்தோடு ஒன்று பதினொன்றாக அமையப்போவதில்லை. லண்டனில் இந்த மாத இறுதியில் நடக்கும் கூட்டத்தில் மோடி பெரும் முக்கியத்துவம் பெறுவார்.

இந்தியாவுக்கும் இது ஒரு நல்ல வாய்ப்புதான். வர்த்தகரீதியாக மட்டும் அல்லாமல்




ராஜீயரீதியாகவும் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள இது ஒரு புதிய வாகனம். மிக அனுகூலமான வாய்ப்பு, ஏனைய சர்வதேச அமைப்புகளைப் போலன்றி காமன்வெல்த்தில் சீனா கிடையாது. 'ஒரே சாலை — ஒரே பிரதேசம்' கோஷத்துடன் பழைய பட்டுப் பாதையில் உள்ள நாடுகளை இணைத்துக்கொண்டு வலுவான பொருளாதார— ராஜீய உறவுகளை ஆசியாவிலிருந்து ஐரோப்பா வரை வளைத்துச்செல்லும் சீனாவுக்குச் சின்ன அளவில் இந்தியாவாலும் இதன் மூலம் ஒரு பதிலைத் தர முடியும். ஆனால், காமன்வெல்த் நாடுகளிடமிருந்து நாம் எதைப் பெறப்போகிறோம் அவர்களுக்கு எதைத் தரப்போகிறோம் என்பதிலேயே இருக்கிறது!

காமன்வெல்த் அமைப்பில் 53 நாடுகள் உறுப்பு நாடுகளாக இருக்கும் சூழலில், அதை மீட்டுருவாக்க இந்தியாவை ஏன் அதன் மையத்துக்குக் கொண்டுவர பிரிட்டன் திட்டமிடுகிறது? இந்தியா — பிரிட்டன் உறவு ஏன் முக்கியமானதாகிறது? இந்தக் கேள்விக்கான பதில் முதலீட்டிலிருந்து தொடங்குகிறது.

இன்று பிரிட்டனின் சக்தி வாய்ந்த குடியேறிகளில் முக்கியமானவர்கள் இந்திய சமூகத்தினர். கிட்டத்தட்ட 14 லட்சத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள் — வம்சாவழியினர் இங்கே வாழ்கின்றனர். இவர்களில் 5 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தலைநகர் லண்டனில் வசிக்கின்றனர். பிரிட்டனில் வாழும் இனக் குழுக்களில் இந்தியர்கள் ஆறாவது இடத்தில் உள்ளனர். அதிகமானோர் பஞ்சாபியர். மொத்த இந்தியச் சமூகத்தில் பஞ்சாபியரின் பங்கு மட்டும் 45%.

இந்தியர்கள் பெருமளவில் பொருளாதாரரீதியாக மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும், பெரும் பணக்காரர்களின் பட்டியலில் இந்தியர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துவருகிறது. பிரிட்டன் செல்வந்தர்களில் முதல் மூன்று இடங்களிலும் இன்று இந்திய வம்சாவளியினரே இருக்கிறார்கள்.

முதலிடத்தில் இருப்பவர்கள் ஸ்ரீசந்த் இந்துஜா — கோபிசந்த் இந்துஜா சகோதரர்கள். எண்ணெய், எரிவாயு, மோட்டார் வாகனம், தகவல் தொழில்நுட்பம், மின்சாரம், ஊடகம், வங்கி, சொத்துகள், சுகாதார நலன் என்று பல துறைகளிலும் கால் பதித்திருப்பவர்கள் இவர்கள். அடுத்த இரு இடங்களில் டேவிட் ரூபன் சைமன் ரூபன், லட்சுமி என். மிட்டல் இருவரும் இருக்கின்றனர். தவிர, 38 பேர், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் — மிக செல்வாக்கு மிக்கவர்கள் என்று வரிசைப்படுத்துகிறது 'சண்டே

டைம்ஸ்'. கடந்த பத்தாண்டுகளில் மட்டும் 'தங்க விசா' திட்டத்தின் உதவியுடன் 74 இந்திய பெரும் கோடீஸ்வரர்கள் தங்கள் குடும்பத்தாருடன் பிரிட்டனில் குடியேறியிருக்கின்றனர்.




குஜராத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் இவர்கள். "இன்று ஐரோப்பாவிலேயே பெரியது இவர்களுடைய 'ஈரோ கேரேஜஸ்' மோட்டார் வாகன எரிபொருள் சில்லறை விற்பனையகம்தான்" என்றார்கள். இவர்களைப் போலவே ராஜ், டோனி, ஹர்பால் மதாரு சகோதரர்களும் இந்திய கோடீஸ்வரர்கள். 'கிராங்கி ஹோட்டல்' சங்கிலித்தொடர் விடுதிகள் இவர்களுடையது. முட்டை வியாபாரம் முதல் கழிப்பறை உபகரணங்கள் தயாரிப்பு வரை இந்தியர்களின் கைகள் நீண்டிருக்கின்றன. பிரிட்டனில் உள்ள கோடீஸ்வரர்களில் இந்திய வம்சாவழியினர்தான், வெளிநாட்டவர் பிரிவில் அதிகமானவர்கள். லண்டனில் கால் பதித்தே ஐரோப்பாவில் வேர் பரப்புக்கின்றனர் இந்திய தொழிலதிபர்கள்.

பிரிட்டனில் அதிகம் முதலீடு செய்யும் நாடுகளில் அமெரிக்கா, சீனா, பிரான்ஸுக்கு அடுத்த நிலையில் இந்தியா இருக்கிறது. பிரிட்டனில் இப்போது இந்தியர்களுக்குச் சொந்தமாக 800+ தொழில் நிறுவனங்கள் இருக்கின்றன. 1.1 லட்சம் பேர் இவற்றில் வேலை செய்கின்றனர். 13 பெரிய இந்திய நிறுவனங்கள் தலா 1,000 பேருக்கும் மேல் வேலை அளிப்பவை இங்கே இருக்கின்றன. ஜாகுவார் லேண்ட் ரோவர் உள்ளிட்ட டாடாவின் ஐந்து நிறுவனங்களில் மட்டும் 65,000 பேர் வேலை செய்கின்றனர். கடந்த நிதியாண்டில் அமெரிக்கா 577 பெரும் திட்டங்களிலும், சீனா 160 பெரும் திட்டங்களிலும் பிரான்ஸ் 131 பெரும் திட்டங்களிலும் இந்தியா 127 பெரும் திட்டங்களிலும் புதிதாக முதலீடு செய்திருக்கின்றன.

இரு தரப்பு முதலீடுகளுமே போதுமானவை அல்ல என்கிறார்கள் பிரிட்டிஷார்.

பிரிட்டன் தன்னுடைய பொருளாதாரத்தைச் சேவைத் துறையை மையமாகக் கொண்டதாகவும் இந்தியா உற்பத்தித் துறையை மையமாகக் கொண்டதாகவும் அமைத்துக்கொண்டிருப்பது இரு தரப்பு உறவுகளின் மையப் புள்ளி. இந்தியா பின்தங்கியிருக்கும் ஆராய்ச்சி கண்டுபிடிப்புத் துறைகளில் பிரிட்டன் பல மடங்கு முன்னேறியிருப்பதும், இந்தியாவின் கை மேலோங்கும் உற்பத்தித் துறையில் இந்தப் புதிய தொழில்நுட்பங்கள் இணைந்தால் நிகழவிருக்கும் சாத்தியங்களும் அவர்கள் சுட்டிக்காட்டும் முக்கியமான வாய்ப்புகள். ஓர் உதாரணம், பசுமைப் பொருளாதாரம். சம காலத்தின் முக்கியமான சவால்களில் ஒன்று என்றால், அது தகவல் திரட்டு பாதுகாப்பு!

பொருளாதாரத்தோடு சேர்ந்து புவியரசியல் கணக்குகளும் இதன் பின்னணியில் முக்கியப் பங்காற்றுகின்றன. சீனாவின் பாய்ச்சல் எல்லோரையுமே சங்கடப்படுத்துகிறது. பிரிட்டனின் சாமானியர்களிடம் பேசுகையில்கூட

இதை உணர முடிந்தது. குறிப்பாக லண்டனில் குவியும் சீன, ரஷ்ய முதலீட்டை அவர்கள் ஒரு அச்சுறுத்தலாகவே குறிப்பிட்டனர். உற்பத்தி, ஆராய்ச்சி இரண்டிலும் சமமாக முன்னகரும் சீனா பொருளாதாரரீதியாக மட்டும் அல்லாமல் அரசியல்ரீதியாகவும் விரிக்கும் கரங்களை இந்தியாவின் வளர்ச்சி மட்டுமே ஆசியாவில் கட்டுப்படுத்த முடியும் என்று மேற்கு நம்புவது தீர்க்கமாகத் தெரிகிறது.




இந்தியாவுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமையலாம். தன்னை நோக்கி காமன்வெல்த் அமைப்பின் மையம் நகர்வதை இந்திய ஆட்சியாளர்கள் ரசிப்பதைப் பார்க்க முடிகிறது. இந்தியாவின் புவியரசியல் கணக்குகளுக்கு காமன்வெல்த் ஒரு நல்ல வாகனமாக அமையக்கூடிய வாய்ப்புள்ளதுதான். ஆனால், ராஜீயரீதியிலான கணக்குகள், பெருவர்த்தகரீதியிலான கணக்குகளைத் தாண்டி இந்தியா கவனம் செலுத்த வேண்டிய மேலான விஷயம் ஒன்றுண்டு. அது பிரிட்டனின் குடிமைக் கலாச்சாரத்தோடு சேர்த்து தொழில்நுட்பக் கலாச்சாரத்தைக் கையகப்படுத்திக்கொள்வது.

இந்தியாவில் தொழில்துறை வளர உயர் நவீன தொழில்நுட்பங்கள் அவசியம். இன்று நம்முடைய உற்பத்தி துறையின் லாபங்களுக்காக பெரிய அளவில் சுற்றுச்சூழலைப் பறிகொடுத்துக்கொண்டிருக்கிறோம். நாட்டின் அறிவியல் முன்னேற்றத்துக்கும் சாமானிய மக்களின் வாழ்க்கைக்கும் பெரிய தொடர்புகள் இல்லை.

இந்தச் சவால்களுக்கு எப்படி பதில் தேடப்போகிறோம் என்பது முக்கியமானது. கடந்த காலங்களில் இதே சவாலை எதிர்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக அதிலிருந்து வெளியே வந்துகொண்டிருக்கும் பிரிட்டனிடமிருந்து நாம் உதவியைப் பெற முடியும்.

இந்திய மாநிலங்களில் அந்தந்த மாநிலங்களின் சூழலுக்கேற்ப முதலீடு செய்வதில் இருக்கும் ஆர்வத்தை பிரிட்டன் ஆட்சியாளர்கள் வெளிப்படுத்தினார்கள். மாநிலங்களில் அதற்கான சாத்தியங்களை இந்திய அரசு உருவாக்க வேண்டும். வேலைவாய்ப்புகள் இரு தரப்புகளிலுமே தலைவலியாக உருவெடுத்துவரும் நிலையில் புதிய தொழில் முயற்சிகள் கூடுதல் வேலைவாய்ப்புகள், கண்ணியமான பணிச் சூழலுக்கு உத்தரவாதம் அளிப்பதற்கும் கவனம் அளிக்க வேண்டும்.

காமன்வெல்த்தின் தலைமை லண்டனிலிருந்து டெல்லி நோக்கி நகரும் சூழலில், நாடுகள் — தலைவர்கள் — செல்வந்தர்களின் மேன்மைக்கானதாக மட்டும் அந்த மாற்றம் இல்லாமல் அனைத்து நாடுகளின் சாமானிய மக்கள் மேன்மைக்கானதாகவும் அமைய வேண்டும்!

# கருத்துப் ப(ா)டம்

**கருத்துச் சித்திரம்** கருத்து: ஏந்தல் இளங்கோ, சென்னை




# சொல்றாங்க... சொல்றாங்க...



"மோடி தமிழகம் வந்திருப்பது ஆணவப்போக்கு!"

**பழ.நெடுமாறன்**

(உண்மைதான்! அந்த ஆணவத்துக்கு தக்க பதிலடி கிடைக்கும் நாள் விரைவில் வரும்!)



"தேர்தலின்போது ஆகாயத்திலேயே பறந்து ஓட்டு கேட்பாரா? கருப்புக் கொடி காட்டும் போராட்டத்தை எதிர்கொள்ளும் ஆற்றல் மோடிக்கு இருக்க வேண்டும்!"

**ஸ்டாலின்**

(அப்பாடா! இப்பத்தான் தடுமாற்றம் இல்லாம ஒரு வாக்கியத்தை தெளிவா, சரியா சொல்லிட்டீங்க செயலு!)



"ஜெயலலிதா இருந்திருந்தால் தில்லியே கலங்கி போய் இருக்கும்!"

**அமைச்சர் செங்கோட்டையன்**

(உண்மைதான்! இந்த லேடியா அந்த மோடியான்னு கேட்டாங்க! அவங்க இந்நேரம் இருந்திருந்தா மோடி மஸ்தான் வேலையெல்லாம் இங்கே நடந்தே இருக்காது!)



"தமிழகத்தில் பாஜக ஆட்சியை தடுக்கவே திமுக, காங்கிரஸ் போராட்டம்!"

**பொன்.ராதாகிருஷ்ணன்**

(இந்தக் கொசுத் தொல்லைகள் தாங்கலடா சாமி!)

# நிஜந்தானா?

## வடகொரிய – தென்கொரிய அதிபர்கள் சந்திப்பு: யாருக்கு என்ன வேண்டும்?

வடகொரிய அதிபர் கிம் ஜாங்—உன் மற்றும் தென்கொரிய அதிபர் முன் ஜே—இன் ஆகியோர் சந்தித்துள்ளனர். இரு நாட்டுத் தலைவர்களும் நேரில் சந்தித்து 10 ஆண்டுகளுக்கும் மேலாகிறது.

கொரிய தீபகற்பத்தில் அமைதியை நிலை நாட்டுவதுமே இந்தச் சந்திப்பில் முக்கியமானது.

வடகொரியா மீதான பொருளாதாரத் தடைகள் மற்றும் இரு நாடுகளிலும் பிரிந்து சிதறிக் கிடக்கும் குடும்பங்கள் ஆகியவை குறித்தும் இரு தலைவர்களின் சந்திப்பின்போது விவாதிக்கப்படும்.



தென்கொரியாவில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் வடகொரியா கலந்துகொண்டபின் இரு நாடுகளுக்கும் இடையே இணக்கம் தொடங்கியது

இரு கொரிய நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் முன்னேறி வரும் நிலையில் நடக்கும் இந்தப் பேச்சுவார்த்தை, அமெரிக்காவுடன் வடகொரியா நடத்தவுள்ள பேச்சுவார்த்தைக்கும் வழிவகுக்கும்.

வடகொரியா அணு ஆயுதத்தைக் கை விடுவதும்

இந்த சந்திப்பு எவ்வளவு முக்கியமானது?

சீன அதிபர் ஷி ஜின்பின் உடனான கிம் ஜாங்—உன்னின் சந்திப்பு போல இந்த சந்திப்பு ரகசியமானதாக இல்லை. கிம் மற்றும் ஷி ஆகியோரின் சந்திப்புக்கு பின்னரே அது குறித்த தகவல் வெளியிடப்பட்டது. ஆனால், இந்த சந்திப்பின் ஒரு பகுதி தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

கிம் ஜாங்—உன்னின் தந்தை கிம் ஜாங்—இல் வடகொரிய அதிபராக இருந்தபோது அப்போதைய தென்கொரிய அதிபர்களான கிம் டே—ஜங் மற்றும்



# நடக்குமா?

ரூ மூ—ஹியூன் ஆகியோரை முறையே 2000 மற்றும் 2007 ஆகிய ஆண்டுகளில் சந்தித்தார்.

அந்த சந்திப்புகளில் அணு ஆயுதத் தடுப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியன விவாதிக்கப்பட்டன. தனது முயற்சிகளுக்காக கிம் டே—ஜங் 2000இல் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.



அதன்பின் 2004இல் இரு நாடுகளும் இணைந்து இயக்கும், வடகொரியாவில் அமைந்துள்ள கேசாங் தொழில் வளாகம் நிறுவப்பட்டது. கொரியப் போரால் பிரிந்த பல குடும்பங்கள் மீண்டும் இணைந்தன.

எனினும், வடகொரியாவின் அணு ஆயுத சோதனைகள் நிற்கவில்லை. தென்கொரியாவில் அமைந்த பழமைவாத அரசுகளால் அமைதி முயற்சிகள் பின்னடைவைச் சந்தித்தன.

## வர்ஜீனியா ஹரிஸ்ஸன்

வடகொரியாவை தனிமைப் படுத்துவதைத் தவிர்த்து, தென்கொரியாவைச் சார்ந்து இயங்கச் செய்யும் முயற்சிகள் அப்போது முதல் விமர்சனத்துக்கு உள்ளாகி வருகின்றன.

பத்தாண்டுகளுக்கும் மேலான பதற்றநிலை மற்றும் அச்சுறுத்தல்களுக்கு பிறகு வடகொரியாவை பேச்சுவார்த்தைக்கு உடன்பட வைத்துள்ளது தென்கொரிய அரசு. அதிபர் பதவிக்கு வரும் முன்பே முன் ஜே—இன் அமைதி நடவடிக்கைகளில் பங்காற்றியுள்ளார்.

கடந்த ஆண்டு பதவியேற்ற தற்போதைய



அதிபர் முன் ஜே—இன், முன்னாள் அதிபர் ரூ பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபோது அவரது நெருங்கிய சகாவாக இருந்தார்.

தென்கொரியாவின் பன்முஞ்சோம் எல்லை கிராமத்தில் நடக்கும் இந்தச் சந்திப்பில், இரு கொரிய நாடுகளும் 1953இல் மேற்கொண்ட போரை அதிகாரபூர்வமாக முடிவுக்கு கொண்டு வரும் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட வேண்டும் என்று முன் கூறியுள்ளார்.

அணு ஆயுதத் தடுப்பு மற்றும் ராணுவ ரீதியிலான பதற்றங்களைத் தணிப்பது ஆகியன தங்கள் முக்கிய நோக்கம் என்று ஒருங்கிணைப்புக்கான தென்கொரிய அமைச்சகம் தெரிவித்துள்ளது. பொருளாதார மற்றும் சமூக ஒத்துழைப்பு ஆகியவையும் முக்கியத்துவம் பெறுகின்றன. 2016 முதல் மூடப்பட்டுள்ள கேசாங் தொழில் வளாகம் மீண்டும் திறக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த வளாகத்தில் தென்கொரியார்களுக்கு சொந்தமான நிறுவனங்களில் சுமார் 55,000 வடகொரியர்கள் பணிபுரிந்து வந்தனர்.

கொரியப் போரால் பிரிந்த சுமார் 60,000 குடும்ப உறுப்பினர்கள் குறித்தும் விவாதிக்கப்படுகிறது. வடகொரிய சிறைகளில் உள்ள வெளிநாட்டவர்களை விடுவிப்பது குறித்தும் தென்கொரியா கோரிக்கை எழுப்பும்.

தங்கள் நாடு மீதான பொருளாதார தடைகளை நீக்குவதற்காகவே வடகொரிய அதிபர் கிம் இந்தப் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக்கொண்டார் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

வடகொரியா அணு ஆயுத சோதனைகளை அதிகரித்தபின், அமெரிக்கா மற்றும் ஐ.நா அவை அந்நாடு மீதான தடைகளை அதிகரித்தன.

எனினும், தங்களின் தன்னம்பிக்கையால்தான் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக்கொண்டுள்ளோமே தவிர, தங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளால் அல்ல என்று வடகொரியா கூறியுள்ளது.

கடந்த வாரம் தங்களின் அணு ஆயுத சோதனை நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்திக்கொள்வதாக வடகொரியா அறிவித்தது. இதை தென்கொரிய அதிபர் முன் மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் ஆகியோர் வரவேற்றனர்.

“சர்வாதிகாரிகள் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று நாம் நினைக்கிறோம். ஆனால், அவர்களுக்கான அழுத்தம் இருக்கும். வடகொரியாவில் தனது நிலையைத் தக்கவைத்துக்கொள்ளவே கிம் கவலைப்பட வேண்டியுள்ளது,” என்கிறார் அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் லீ.

அடிக்கடி அணுஆயுத சோதனைகளை நடத்தியும், அணுஆயுத போரை ஆரம்பிக்கப்போவதாக அச்சுறுத்தியும் வரும் வட கொரியா தனது நிலைப்பாட்டில் மிகப் பெரிய மாற்றங்களை செய்வதற்கு ஒப்புக்கொண்டுள்ளது. இந்நிலையில், பல ஆண்டுகாலமாக நிலவி வரும் இந்த பிரச்சனை குறித்த அடிப்படை விடயங்களை காணலாம்.

இரண்டாம் உலகப்போருக்கு பின்பு கொரிய

தீபகற்பம் இரண்டாக பிரிந்தது. கம்யூனிச நாடான வட கொரியா ஸ்டாலின் உருவாக்கிய சர்வாதிகார அமைப்பை ஏற்றுக்கொண்டு கட்டமைக்கப்பட்டது.

உலக மேடையில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் தனது நாட்டை அழிக்க நினைக்கும் மற்ற உலக நாடுகளிலிருந்து தன்னை தற்காத்து கொள்வதற்கான




ஒரே வழி அணுஆயுதங்கள்தான் என்று அந்நாடு கூறுகிறது. அணு ஆயுதத் தாக்குதலை வட கொரியாவால் நடத்த முடியுமா? ஒருவேளை நடத்தலாம், ஆனால் வாய்ப்பு இல்லை.

வட கொரியா இதுவரை ஆறு அணுசக்தி தாக்குதல்களை நடத்தியுள்ளது. அதில் ஒன்று ஹைட்ரஜன் குண்டு சோதனை என்று அது கூறுகிறது. தொலைதூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணையில் பொருத்தக்கூடிய அளவுக்கு சிறிய ரக அணுகுண்டை உருவாக்கியுள்ளதாக வட கொரியா கூறினாலும் அது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.வட கொரியாவிலிருந்து அமெரிக்காவை தாக்கும் பாலிஸ்டிக் ரக ஏவுகணையையும் அந்நாடு கொண்டுள்ளதாக வல்லுநர்கள் நம்புகின்றனர்.

வட கொரியாவின் இந்த நடவடிக்கைகளை கண்டித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் போன்றவை பலவிதமான தடைகளை விதித்துள்ளன.

தென் கொரியா மற்றும் ஜப்பானை குறிவைத்தே வட கொரியா தனது ஏவுகணைகளை தயாரிக்கிறது. வட கொரியாவின் தற்காப்பு தாக்குதல் பேரழிவை உருவாக்கும் பதிலடியை உண்டாக்கலாம். அதன் காரணமாக எண்ணற்ற வட கொரியர்கள் உயிரிழக்க நேரிடலாம்.

ஆசிய கண்டத்தின் மிகப் பெரிய சக்தியாக விளங்கும் சீனா கொரிய நாடுகளுக்கு இடையே நிலவும் சூழ்நிலையை எண்ணி கவலையடைந்துள்ளது. அதாவது, கொரிய நாடுகளில் ஆட்சி மாற்றம் ஏதாவது ஏற்பட்டு இரு கொரிய நாடுகளும் இணையும் பட்சத்தில், தற்போது தென் கொரியாவில் இருக்கும் அமெரிக்க படைகள் தனது எல்லைப்பகுதியை நோக்கி வரக்கூடும் என்று சீனா நினைக்கிறது.

இதற்கு முன்பு நடந்த ஆயுத குறைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் தோல்வியையே சந்தித்துள்ளன. இந்நிலையில், கடந்த ஜனவரி மாதம் தென் கொரியாவுடன் பேச்சுவார்த்தையை நடத்திய வட கொரியா, அதன் பிறகு தென் கொரியாவில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியிலும் பங்கேற்றது.

தென் கொரிய மண்ணிற்கு சென்று அந்நாட்டு அதிபர் முன் ஜே— இன்னுடன் பேச்சுவார்த்தை நடத்த சென்ற வட கொரிய அதிபர் கிம் ஜாங்—உன், சிறப்பு பிரதிநிதிக் குழுவையும் தன்னுடன் அழைத்துச் சென்றுள்ளார்.

இந்த சிறப்புக்குழுவில் இடம்பெற்றிருப்பவர்கள், கிம் ஜாங்—உன்னின் நம்பிக்கைக்கு உரியவர்கள்





என்று கூறப்படுகிறது. வட கொரியாவின் இதுபோன்ற ஒரு மூத்த பிரதிநிதிக் குழுவை தங்கள் நாட்டில் இதுவரை வரவேற்றதில்லை என தென் கொரியா கூறுகிறது.

1987ம் ஆண்டு பிறந்ததாக நம்பப்படும் கிம் யோ—ஜாங், மறைந்த தலைவர் கிம் ஜாங்—இல்லின் இளைய மகளும், கிம் ஜாங்—உன்னின் சகோதரியும் ஆவார்.

கிம் ஜாங்—உன்னை விட 4 ஆண்டுகள் இளையவரான கிம் யோ—ஜாங், சகோதருடன் சேர்ந்து சுவிட்சர்லாந்தில் கல்வி பயின்றவர். சகோதரருக்கு மிகவும் நெருங்கியவர் என்றும் கூறப்படுகிறது.

இவர், வட கொரியாவை ஆளும் தொழிலாளர் கட்சியின் சக்தி வாய்ந்த செயலரின் மகனான சேயே ரொங்—ஹெ—வை திருமணம் செய்திருப்பதாக கூறப்படுகிறது.

கட்சியின் பரப்புரைத் துறையில் மேற்கொள்ளும் பணிகளின் வழியாக தன்னுடைய சகோதரரின் பிம்பத்தை பாதுகாக்கும் முக்கிய பணிகளால், அண்மை ஆண்டுகளில் கிம் யோ—ஜாங் பொது மக்களின் கவனத்தை பெற்று வருகிறார்.

வட கொரியாவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களில் இவருக்கு தொடர்புகள் இருப்பதாக இவரும் அமெரிக்காவின் கறுப்புப்பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

தென்கொரியாவின் யோங்சாங்கில் பிப்ரவரி மாதம் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் கிம் யோ—ஜாங் கலந்துக் கொண்டார்.

தனது சகோதரர் கிம் ஜாங்—உன்னின் கடுமையான முடிவுகளில் பலவற்றில் கிம் யோ—ஜாங்கின் பங்களிப்பு இருப்பதாக நிபுணர்கள் கருதுகின்றனர். வட கொரியாவின் மிக முக்கியமான தலைவர்களில் ஒருவராக கிம் யோ—ஜாங் கருதப்படுகிறார்.



கிம் யோங்—நம்

90 வயதான கிம் யோங்—நம் நாட்டில் தனது நீண்ட பணிக்காலத்தில் மூன்று ஆட்சியாளர்களைக் கண்டிருக்கிறார். அரசுமுறை பயணமாக பல முறை வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுளார்.

கடந்த ஆண்டு இரான் அதிபர் ஹாசன் ரூஹானி இரண்டாவது முறையாக பதவி ஏற்றுக் கொண்டபோது அந்த விழாவில் பங்கேற்றார். வட கொரியாவின் உயர் தலைமை மீதான அவரது விசுவாசம் ஒருபோதும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டதில்லை.

தென் கொரியாவின் யோன்ஹப் செய்தி நிறுவனம், கிம் யோங்—நம் பற்றி ஒரு வட கொரிய நபர் கூறியதாக வெளியிட்ட செய்தி இது: “அவர் ஒருபோதும் எந்தவித தவறையும் செய்ததில்லை, அதனால்தான் வட கொரியா போன்ற ஒரு நாட்டில் நிர்வாகம் மாறியபோதும், தனது இடத்தை தக்க வைத்து கொள்வதில் அவர் வெற்றி பெற்றிருக்கிறார்.”

சோய் ஹவி

வட கொரிய விளையாட்டு துறை அமைச்சர் சோய் ஹவி அரசு தொலைக்காட்சியில் இயல்பான தோன்றுவதற்காக அறியப்படுபவர்.

வட கொரியாவின் தலைமை கண்காணிப்பு வலைப்பதிவின்படி, 1980களில் மத்தியில் ‘ஷிமீணீ ஷீயீ ங்ிரீஷீஷீபீ’ என்ற நிகழ்ச்சியின் மேலாளராக முக்கியமான பங்கு வகித்தார் சோய் ஹவி.

தனது வாழ்க்கையில் பெரும்பாலான பகுதியை நாட்டின் கலைத்துறைக்காக பங்களித்திருக்கும் சோய் ஹவி, நாட்டின் முதல் பெண் பாப் இசைக்குழுவான மோரன்பாங்க் என்ற குழுவை நிறுவுவதில் ஒரு முக்கிய பங்கு வகித்ததாக நம்பப்படுகிறது.

கிம் யோங்—சோல்



வடகொரியாவின் சர்ச்சைக்குரியத்தலைவர்களில் ஒருவராக கருதப்படும் கிம் யோங் சோல், நாட்டின் ராணுவ புலனாய்வு துறைத் தலைவராகவும் பதவி வகித்தவர். 2010ஆம் ஆண்டு யோன்பியோங் தீவில் தாக்குதல் நடத்தப்பட்டபோதும், தென் கொரிய போர்க்கப்பல் ராக்ஸ் சேனன் (ஸிளிரிஷி சிலீமீஷீஸீணீஸீ) மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னணியிலும் இவரது வியூகம் இருந்ததாக கூறப்படுகிறது.

கிம் மிகவும் நையாண்டி செய்பவர், அவருடன் வேலை செய்வது எளிதானது அல்ல என்று லீடர்ஷிப் வாட்ச் அறிக்கை கூறுகிறது.

2007இல் தென்கொரியாவுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் போது, தென்



கொரியாவின் ஒரு திட்டத்தை நிராகரித்த அவர், “முன்மொழிவுகளால் நிரம்பிய ஒரு பெட்டி உங்களிடம் இருப்பதுபோல் தோன்றுகிறது” என்று தெரிவித்தார்.

ரீ சூ—யோங்

ரீ சோல் என்றும் அழைக்கப்படும் ரீ சூ—யோங், கிம் ஜாங்—உன் குடும்பத்துடன் நீண்டகால தொடர்பு கொண்டவர். கிம் ஜோங்—இல்லுடன் ஒன்றாக கல்வி பயின்றவர் ரீ சூ—யோங். சுவிட்சர்லாந்தில் கிம் ஜாங்—உன் படிக்கும்போது, ரீ சூ—யோங்கின் பிள்ளைகளும் அவருடன் ஒன்றாக படித்தனர்.

கிம் ஜோங்—உன் தனது தந்தையைப் போல ரீ சூ—யோங்கை மதிப்பதாக வட கொரியா லீடர்ஷிப் வாட்ச் அறிக்கை கூறுகிறது.



வட கொரியாவின் பிரதிநிதியாக பல முறை அவர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளார். 2014இல் வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்ட அவர், தற்போது சர்வதேச விவகாரத் துறைத் தலைவராகவும் வெளிநாட்டு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் பொறுப்பையும் வகிக்கிறார்; ஐ.நா தூதராகவும் மதிக்கப்படுகிறார்.

ரீ மியோங்—சூ

2016ஆம் ஆண்டில் நாட்டின் ராணுவத் தலைவராக பொறுப்பேற்றார் ரீ மியோங்—சூ. இவருக்கு முன்னர் கிம் ஜாங்—உன்னிடம் பணிபுரிந்த இரண்டு ராணுவத் தலைவர்களில் ஒருவர் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது; மற்றொருவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

கொரியப் போரில் கலந்து கொண்ட ரீ மியோங்—சூ, ராணுவ வியூகங்களை வகுப்பதில் தலைசிறந்தவர் என கருதப்படுகிறார். வட கொரியாவின் லீடர்ஷிப் வாட்ச் அறிக்கையின் கூற்றுப்படி, கிம் ஜாங்—உன்னை நாட்டின் தலைமை பொறுப்பை ஏற்க தயார்படுத்தியவர் ரீ மியோங்—சூ.

கிம் ஜோங்—இல் மறைந்த சில ஆண்டுகள் வரை காணாமல் போயிருந்த அவர், தற்போது மீண்டும் நாட்டின் உயர் தலைவர்களில் ஒருவராக இருக்கிறார்.

பாக் யோங்—சிக்

2015ஆம் ஆண்டு முதல் வட கொரியாவின் பாதுகாப்பு அமைச்சராக (மக்கள் ஆயுதப்படையின் அமைச்சகம்) பதவியில் இருக்கிறார் பாக் யோங்—சிக். இந்த அமைச்சகம் ராணுவ நிர்வாகம், மற்றும் பிற நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், வெளிநாட்டு ராணுவங்கள் மற்றும் தூதர்களுடன் இணைந்து செயல்படுகிறது.

பாக் யோங்—சிக்கின் மேற்பார்வையில்தான் வடகொரிய ராணுவ மறுசீரமைப்பு நடைபெற்றது.

ரீ யோங்—ஹோ

வட கொரியாவின் அணுசக்தி திட்டத்தின் பிரதான ஆலோசகராகவும், பிரிட்டன் உட்பட பல நாடுகளின் தூதராகவும் பணியாற்றியவர் ரீ யோங்—ஹோ.



2016 ல் அவர் வெளியுறவு அமைச்சர் பதவிக்கு வந்த ரீ யோங்—ஹோ, வட கொரிய தலைவர்களிலேயே அதிகம் பேசுபவர்களில் ஒருவராக கருதப்படுகிறார்.



வட கொரியாவிற்கு எதிராக அமெரிக்கா "போரை தூண்டுவதாக" குற்றம் சாட்டியதுடன், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் அச்சுறுத்தல்கள் "நாய் குரைப்பதை போன்றவை" என்றும் விமர்சித்தார் ரீ யோங்—ஹோ.

ரீ சோன்—க்வோன்

கொரிய மறு ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கும் வட கொரிய அமைப்பான, 'கொரியாவின் சமாதான மறு ஒருங்கிணைப்பு குழு'வின் (சிறிஸிரி) தலைவர் ரீ சோன்—க்வோன்.

அண்மையில் நடந்துமுடிந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் வட கொரியா பங்கேற்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்காற்றியவர் ரீ சோன்—க்வோன்.

தென் கொரியா ராணுவப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு எதிராக எச்சரிக்கை விடுத்தவர் ரீ சோன்—க்வோன். 2010இல் தென் கொரிய போர்க்கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு வட கொரிய அரசு மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை ரீ சோன்—க்வோன் நிராகரித்தார்.

அதன் பின்னர், அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைக்கு தாங்கள் தயார் என்று வட கொரியா விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்ட அமெரிக்க அதிபர் டிரம்ப், தாங்கள் அணுஆயுத குறைப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளை ஆதரிப்பதாக தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் வட கொரிய தலைவர் கிம் ஜோங்—உன் இடையிலான சந்திப்பு குறித்த தகவல்கள், திட்டம் மற்றும் காலநேரம் இதுவரை உறுதிசெய்யப்படவில்லை.




# திராவிடம்

## திராவிட இயக்கம் – நாடு முழுமைக்கும் பங்களிக்க வேண்டிய சித்தாந்தம்

இந்தியாவின் முதல் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு மறைந்த பிறகு நடந்த முதல் தேர்தலாக 1967ஆம் ஆண்டில் நடந்த தேர்தல் அமைந்தது. மிக முக்கியமான ஒரு தேர்தலும்கூட.

அந்தத் தேர்தலில் காங்கிரஸ் அல்லாத கட்சிகளுக்கு பெரும் வெற்றி கிடைத்தது.

சுதந்திரா கட்சி, 8.7 சதவீத வாக்குகளைப்




பெற்று நான்காவது மக்களவையில் தனிப்பெரும் எதிர்க்கட்சியாக அமர்ந்தது. மொத்தமிருந்த 520 இடங்களில் 44 இடங்கள் அந்தக் கட்சிக்குக் கிடைத்தன.

தமிழகத்தில் அதன் கூட்டணிக் கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் தேசிய அளவில் 3.79 சதவீத வாக்குகளைப் பெற்று 25 நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்களவைக்கு அனுப்பியது. இந்த இரு கட்சிகளும் இணைந்து மக்களவை 69 இடங்களை வைத்திருந்ததால், இந்திய அரசியலில் ஒரு புதிய காலகட்டம் துவங்கியது.

### திகைக்க வைத்த புதிய தொடக்கம்

மக்களவைத் தேர்தலுடன் இணைந்து நடைபெற்ற மெட்ராஸ் சட்டமன்றத் தேர்தலிலும் தி.மு.க. வெற்றிபெற்றதால் மாநிலத்திலும் ஒரு புதிய அத்தியாயம் துவங்கியது.

காமராஜர் இந்தத் தேர்தலில் தோற்றுப்போனார். முதலமைச்சரான பக்தவத்சலமும் அவரது அமைச்சரவையைச் சேர்ந்த அனைவரும் (ஒருவரைத் தவிர) தோற்றுப்போனார்கள்.

இந்த தேர்தலின் முடிவும் அதன் உள்ளடக்கமாக அமைந்த செய்தியும் அரசியல் பார்வையாளர்களைத் திகைக்கவைத்தது.

ஒரே இரவில், சட்டமன்றத்தில் கதர் ஆடைக்காரர்களின் ஆதிக்கம் மறைந்து, அவர்கள் இடத்தில் மில்லில் நெய்த கறுப்பு — சிவப்பு துண்டு அணிந்த தி.மு.கவினர் வந்து அமர்ந்தார்கள்.

இருபது ஆண்டுகளாக "தலைமை அலுவலகத்திற்கும் கிளை அலுவலகத்திற்கும்" இடையிலான உறவைப் போல நிலவிய மத்திய —

காட்டிய


# சமத்துவம்

மாநில உறவும் அதோடு முடிவுக்கு வந்தது.

அண்ணாதுரை ஒரு புதிய முதல்வராக மட்டும் இருக்கவில்லை. ஒரு புதிய போக்கின் சின்னமாக இருந்தார். பல தசாப்தங்களுக்கு முன்பாக நீதிக் கட்சியும் பிறகு திராவிடர் கழகமும் முன்வைத்த திராவிட சித்தாந்தம், 1967 தேர்தலுக்குப் பிறகு லட்சியம் என்ற நிலையிலிருந்து செய்துகாட்ட வேண்டிய ஒரு நிலையை அடைந்தது.

**கோபால கிருஷ்ண காந்தி**

சென்னை அண்ணா சாலையில் கையை உயர்த்தி ஒரு விரலைக் காட்டியபடி நிற்கும் அண்ணாவின் சிலை, "நான் உங்களோடு ஒரு வருடம்தான் இருப்பேன்" என்று சொல்கிறது என மக்கள் பேசிக்கொண்டார்கள்.




`அண்ணா மறைவு ஏற்படுத்திய நிழல்`

இந்திய சுதந்திரத்திற்கு இருபதாண்டுகளுக்குப் பிறகு நிகழ்ந்த இந்த மாற்றம், தமிழ்நாட்டிற்குக் கிடைத்த இரண்டாவது சுதந்திரமாகப் பார்க்கப்பட்டது.

அதற்குப் பிறகு, தமிழகத்தின் மீது நிழல் படர்ந்தது. அண்ணா என்று மக்களால் அன்போடு அழைக்கப்பட்டவர் மறைந்தார்.

பேரறிஞர் அண்ணா இன்னும் ஒரு பத்து — பதினைந்து ஆண்டுகள் உயிரோடு இருந்திருப்பாரானால் — 1980கள் வரை — கூட்டாட்சிப் பார்வையில் அகில இந்திய அரசியலில் தமிழகத்தின் செல்வாக்கும் பங்களிப்பும் பலமடங்கு அதிகமாக இருந்திருக்கும்.

'திராவிட இயக்கங்களின் வரலாற்றுத் தேவை முடியவில்லை'

பிராமணர், ஆரியர் போன்ற விஷயங்களிருந்து முன்னகர்ந்து நதி நீர் பங்கீட்டில் தேசிய அளவிலான கொள்கையை வடிவமைப்பது, பஞ்சாயத்து மட்டம் வரையில் நிதி அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது, சட்டம் இயற்றுதலில் மாநிலங்களின் பங்களிப்பைப் பொறுத்தவரையில் ஆரோக்கியமான முன்னுதாரணங்களை ஏற்படுத்துவது, மாநிலங்களுக்கு இடையிலான குழுவை செயல்படுத்துவது போன்ற சமகால முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளில் கவனம் செலுத்தியிருக்கக்கூடும்.




இடஒதுக்கீடு என்ற தத்துவத்திற்கு தேவைக்கு ஏற்றபடி மாறும் ஒரு வடிவத்தைக் கொடுத்து, தேசிய அளவிலான ஒரு பரிகாரமாக நாடு முழுவதும் பார்க்க வைத்திருக்க முடியும்.

அரசியல் நீதி, சமூக சமத்துவம்

நாடு முழுவதுமுள்ள தலித்துகளும் பிற்படுத்தப்பட்டவர்களும் வெறும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக மட்டுமில்லாமல், ஒரு அறிவுசார், தொழில்சார் சக்தியாக, பெண்களையும் முன்னிறுத்தி உருவானால், இந்தியா ஒரு புதிய சாதனை யுகத்திற்குள் நுழைந்திருக்கும்.

ஒரு புதிய தென் ஆப்பிரிக்கா இந்தியா முழுவதும் உருவாகி, பரவியிருக்கும்.

எல்லாவற்றையும்விட, தமிழகத்தை இன்னும் பத்தாண்டுகள் அண்ணா ஆட்சி செய்திருந்தால் சிறுபான்மையினரின் அபிலாஷைகளுக்கு ஒரு அடையாளத்தை வழங்குவதில் தமிழகத்தின் திறமை தேசம் முழுமைக்கும் பயன்பட்டிருக்கும். நம்முடைய வட கிழக்கு மாநிலங்களிலும் ஜம்மு காஷ்மீரிலும் அடையாளம் சார்ந்த சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதில் ஒரு முக்கியமான பங்கை ஆற்றியிருக்கும்.

திராவிட இயக்கத்தின் தர்க்க ரீதியான அடிப்படை என்பது அரசியல் நீதி மற்றும் சமூக சமத்துவம் என்பவற்றின் மீது அதற்கிருக்கும் ஆழமான நம்பிக்கைதான் என்பது என் கருத்து.

எனவே அந்த அடிப்படையான சித்தாந்தம் திராவிட இயக்கத்தை தமிழ்நாட்டையும், ஏன், தென்னிந்தியாவையும் தாண்டி, நாடு முழுவதும் தனது பங்களிப்பை செலுத்த இட்டுச் செல்கிறது

இந்த ஐம்பதாவது ஆண்டில், தமிழ்நாடு குறித்து நம்பிக்கையிழந்தவனாக இருக்க மாட்டேன்.

ராஜாஜி, பெரியார், அண்ணா ஆகியோருக்கு சிறப்பு செய்வதாக அது அமையாது. 1967 தேர்தலில் தோற்றவராக இருந்தாலும் பெருந்தலைவர் காமராஜருக்கும் அது சிறப்புச் செய்வதாக அமையாது. அவருடைய கண்ணியம் தோற்கடிக்கப்பட முடியாதது.


இன்று, நேர்மை என்ற மேடையில் மூதறிஞர், பெரியார், பேரறிஞர், பெருந்தலைவர் ஆகியோர் ஒன்றாகக் காட்சியளிக்கின்றனர்.


தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37

# வாய்மையே

## இணையம் எனும் அதிகாரம் மக்களின் கையில்தான் இருக்க வேண்டும்!

எல்லாவற்றுக்கும் காரணம் அவர்கள் அணியும் டீ—ஷர்ட்டுகள்தான். தொழில்நுட்பத் துறையில் சாதித்த இளம் சாதனையாளர்கள் பலரும் சகஜமான இந்த உடையை அணிந்துகொண்டுதான் நம்மை வசீகரித்திருக்கிறார்கள்; அதன் மூலம் ஒருவிதப் தணிக்கையிலிருந்து விடுதலை, செய்திகளைப் பெறுவதற்கு அளிக்கும் கட்டணத்திலிருந்து விடுதலை சாத்தியம் ஆகிவிட்டதாக ஆரம்பத்தில் தோன்றியது. புதிய தொழில்நுட்பப் பொன்னுலகம் நம் கைகளில் எட்டிவிட்டதுபோல் தோன்றியது. ஜக்கர்பெர்க்கும்கூட தனது நிறுவனத்தின் நோக்கத்தைப் பற்றிச் சொல்லும்போது, "இந்த உலகை மேலும் வெளிப்படையாக ஆக்குவதற்கும் ஒருவரையொருவர் எளிதில் தொடர்புகொள்வதற்குமான அதிகாரத்தை




போலி நம்பகத்தன்மையை/நெருக்கத்தை நமக்குத் தந்திருக்கிறார்கள். மார்க் ஜக்கர்பெர்க் (ஃபேஸ்புக்), ஸ்டீவ் ஜாப்ஸ் (ஆப்பிள்), செர்கெய் பிரின், லாரி பேஜ் (கூகுள் நிறுவனர்கள்) போன்றவர்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

இணையம் ஒரு மழலைபோல தவழ ஆரம்பித்த காலத்தில் அதை சமத்துவத்தின், சுதந்திரத்தின் ரட்சகராக எல்லோரும் கொண்டாடினார்கள். "எல்லாரையும்போல தகவல் பகிர்தலும், தகவலைப் பெறுதலும் எல்லோருக்கும் உரிய உரிமையாக விடுதலை பெற விரும்புகிறது" என்பது புதுயுகத்தின் முழக்கம்; எதை, எப்படி மக்களுக்குத் தருவது என்ற ஃபேஸ்புக் மக்களுக்கு அளிக்கிறது" என்றார்.

அதிகாரம் மிக்கவர்களை ஒடுக்கி, பலவீனமானவர்களாக இருக்கும் சாதாரண மக்களை வலுப்படுத்தும் சக்திகளாக இணையமும், குறிப்பாக சமூக ஊடகங்களும் கொஞ்சநாளுக்கு முன்புவரை பார்க்கப்பட்டன. கேம்பிரிட்ஜ் அனலிட்டிக்கா நிறுவனத்துக்கு 50 கோடி பயனர்களின் தகவல்களை ஃபேஸ்புக் ஒப்படைத்ததை கேரல் காட்வாலட்ர் என்ற பெண் பத்திரிகையாளர் அம்பலப்படுத்திய பிறகுதான், ஃபேஸ்புக்கின் நோக்கமாக ஜக்கர்பர்க் கூறிய வார்த்தைகள் நமக்குக் கசக்க ஆரம்பித்திருக்கின்றன.

# இணையத்தை வெல்லும்!

## தாமஸ்.எல்.ஃப்ரீட்மேன்

டேவிட் பேட்ரிக்கரகோஸ் '140 எழுத்துக்களில் போர் குறித்த சித்தரிப்பு...' என்ற புத்தகம் எழுதி இருக்கிறார். 'ஹோமோ டிஜிட்டலிஸ்' என்று ஒரு தனி இனமே உருவாகி, எழுச்சி கொண்டிருப்பதாக அதில் அதிசயித்துப்போயிருக்கிறார். 'ஹோமோ டிஜிட்டலிஸ்' என்பது தனிநபரைக் குறிக்கும் புதுச்சொல்; ஸ்மார்ட் போன்தான் அவர்களின் ஆயுதம். பாலஸ்தீனத்தின் காசாவைச் சேர்ந்த 16 வயது இளம் பெண் ஃபாரா பேக்கரை இந்தப் புத்தகத்தில் உதாரணமாகக் காட்டுகிறார் டேவிட். 2014—ல் காசாமீது தினமும் குண்டுவீசப்பட்டதை நேரடிக் களச்செய்திகளாக தினமும் தனது ட்விட்டரில் வெளியிட்டு, சர்வதேசக் கவனத்தை ஈர்த்தார் ஃபாரா. அவரைப் 'பின்தொடர்பவர்'களின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் அதிகரித்தது. இதன் மூலம் சர்வவல்லமை மிக்க இஸ்ரேல் கண்ணிலேயே ஃபாரா எப்படி விரலை விட்டு ஆட்டினார் என்பதைப் பற்றி டேவிட் எழுதியிருக்கிறார். இதேபோல், எகிப்தின் இளைஞர்கள் ஃபேஸ்புக்கைப் பயன்படுத்தி முபாரக்கின் அரசையே அகற்றினார்கள். இப்படிப் பல உதாரணங்கள்!



சமூக ஊடகங்களின் வரவால் இணையத்தின் அதிகாரம் பரவலாக்கப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் தகவல் என்பது மேலிருந்து வழங்கப்பட்டுக் கீழே மக்களை நோக்கி வரும்; அதாவது, தகவல் என்பது அரசாங்கம் வழங்குவதாகவோ செய்தி நிறுவனங்கள் வழங்குவதாகவோ இருக்கும். இப்போதோ, மக்கள் கூட்டமே தங்களுக்குள்ளேயே செய்திகளைப் பரிமாறிக்கொள்ள முடிகிறது. 'தொழில்நுட்பப் பொன்னுலகம்' என்ற நம்பிக்கை அதன்மூலம்தான் உருவானது.

அந்த நம்பிக்கையைத்தான் தற்போது கேம்பிரிட்ஜ் அனலிட்டிக்கா சுக்குநூறாக ஆக்கியிருக்கிறது. சமூகத்தில் அதிகாரத்தின் உச்சத்தில் இருப்பவர்கள் அதிகாரத்தை மறுபடியும் மையத்தில் குவிக்கும் செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றுதான்

இதைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. சமூக ஊடகங்கள் தனிநபர்களுக்கு அதிகாரம் அளிப்பதை அவர்கள் பார்த்தார்கள்; ஆகவே, அந்த ஆயுதங்களைத் திருடி தங்கள் சுயநலத்துக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் வேலையில் இறங்கிவிட்டார்கள். “டிஜிட்டல்ரீதியாகச் சொல்வதென்றால் 21—ம் நூற்றாண்டு என்பது சுதந்திரச் சிந்தனை உள்ளவர்களுக்குக் கேடானது” என்கிறார் டேவிட் பேட்ரிக்கரகோஸ்.

இணையத்தில் நாம் விட்டுச்செல்லும் கால்தடங்கள் ஏராளமான விஷயங்களைச் சொல்லக்கூடியவை. ஃபேஸ்புக்கில் நீங்கள் போடும் ‘லைக்’குகளைப் பார்த்தே உங்களைப் பற்றித் துல்லியமாக மதிப்பிட முடியும். உங்களின் 10 ‘லைக்’குகளைப் பார்த்தால் போதும், உங்கள் சக ஊழியர்களுக்கு உங்களைப் பற்றி என்ன தெரியுமோ... அதைவிட அதிகமாக உங்களைப் பற்றி ஒரு கணினி அறிந்துகொண்டுவிடும். உங்கள் பெற்றோர் உங்களைப் பற்றி அறிந்துவைத்திருப்பதைவிட அதிகமாக ஒரு கணினி உங்களைப் பற்றி அறிந்துகொள்வதற்கு உங்களின் 150 ‘லைக்’குகள் போதும், இதுவே 300 லைக் என்றால் உங்கள் மனைவியைவிட அதிகமாக உங்களைப் பற்றி யாரோ, எங்கேயோ உட்கார்ந்து தெரிந்துகொண்டுவிட முடியும். கேம்பிரிட்ஜ் அனலிட்டிக்காவுக்கு ட்ரம்ப்பும், அவரைப் போல பலரும் பெருந்தொகையை ஏன் கொடுத்தார்கள், கொடுக்கிறார்கள் என்பது இப்போது புரிகிறதா?

‘ஈரானின் வலைப் பிதாமகன்’ என்று அழைக்கப்படுபவர் ஹொஸைன் தரக்ஷான்... அவரை சமீபத்தில் சந்தித்தேன். அவரது இணையச் செயல்பாடுகளால் ஆறு ஆண்டுகள் சிறையில் இருந்தார். “ஒருவரது செயல்பாடுகளையும் எதிர்வினைகளையும் பற்றி உங்களால் கணிக்க முடியும் என்றால் அவர்களை எளிதில் நீங்கள் உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியும்” என்று விளக்கமாகச் சொன்னார் அவர்.

கேம்பிரிட்ஜ் அனலிட்டிக்கா/ஃபேஸ்புக் செயல்பாடுகள் இன்னும் எதையெல்லாம் உணர்த்துகின்றன? இணையம் வருவதற்கு முன்பு செய்தி வழங்கும் முறை மேலிருந்து கீழாக என்று மட்டும் இருந்தது அல்லவா? அந்த நிலையை நோக்கி மறுபடியும் அழைத்துச்செல்லும் முயற்சி இது. இனி நடக்கப் போவதில் ஒரு வித்தியாசம் என்னவென்றால்... தகவலானது மேலிருந்து வழங்கப்பட்டாலும்... அது கீழிருந்து, அதாவது மக்களிடமிருந்தே உருவானதுபோல் ஒரு பிரமை இருக்கும். ஒரு தகவல், ஒரு கருத்து, ஒரு கோஷம் மக்களிடையே பரப்பப்பட்டு... அது மக்களின் குரல் என்றே தவறாகக் கருதப்பட்டு... காட்டுத்தீயாகப் பரவும். மேலிருந்து இந்தத் தகவலை உள்நோக்கத்துடன் பரப்பியவரின் தடமே எங்கும் இருக்காது.

கேம்பிரிட்ஜ் அனலிட்டிக்காவின் செயல் அதிகாரி ஒருவர் இப்படிக் கூறினார்: “இணையத்தின் ரத்த ஓட்டத்தில் நாங்கள் தகவலை சர்வசாதாரணமாகக் கலந்துவிடுவோம், அதற்குப் பிறகு அது பூதாகரமாக உருவெடுப்பதைப்




பார்த்துக்கொண்டே இருப்போம்... அந்தத் தகவல் எங்கிருந்து புறப்பட்டது, யார் காரணம் என்பதையெல்லாம் கண்டுபிடிக்கவே முடியாது."

இந்த விஷயம் ஒரு அதிபரின் வெற்றியோடு, அரசியல் லாபத்தோடு முடிந்துவிடாது; இணையத்தில் நாம் வெளிப்படுத்தும் நம்பிக்கைகள், அச்சங்கள் போன்ற உணர்வுகளைப் பல்வேறு பெருநிறுவனங்களும் தங்களுடைய பொருட்களை நம்மிடம் விற்பதற்காகப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றன. இதையும் கூடிய சீக்கிரம் நாம் தெரிந்துகொள்ளப்போகிறோம்.

அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக




வருவதற்கு முன்பு, நாம் செயலில் இறங்க வேண்டும். அரசு சில கட்டுப்பாடுகளை விதிக்கலாம்; இணைய உலகில் ஏகாதிபத்தியம் செலுத்தும் தொழில்நுட்ப அரக்கர்களை முடக்குவதற்கு 'நம்பிக்கை இழப்பு' சட்டம் கொண்டுவரலாம். நான் சந்தித்த ஹொஸைன் தரக்ஷான் ஒரு யோசனையைச் சொல்கிறார்.

பல்வேறு வகையான அல்காரிதங்கள் கிடைக்கக் கூடிய ஒரு இணையச் சந்தையைத் திறக்க வேண்டும் என்று ஃபேஸ்புக் போன்ற நிறுவனங்களுக்கு நாம் நெருக்கடி கொடுத்து இணங்கச்செய்யலாம். அதாவது, ஒரு சமூக ஊடகத்தில் 'பிரபலம்' (ரீட்வீட்ஸ் போன்ற அடிப்படையில்), புதியது (லேட்டஸ்ட்) போன்ற தெரிவுகளை நாம் விரும்பவில்லையென்றால், வேறு வகையான மதிப்பீடுகளைக் கொண்டு இயங்கும் விதமான அல்காரிதத்தை நாம் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் நிலை வர வேண்டும்.

நடப்பவற்றைப் பார்த்துவிட்டு முழுவதுமாக நம்பிக்கை இழந்துபோகவும் தேவையில்லை. ஏராளமான வெற்றிக் கதைகளும் இணைய உலகில் நிறையவே இருக்கின்றன. கூட்டுப் பங்களிப்பாக நடத்தப்படும் விக்கிப்பீடியா இதற்குச் சிறந்த உதாரணம். அவற்றின் முதலாளிகள் தங்கள் அலுவலகத்துக்கு 'ஸ்கேட்டிங்' பலகையில் வந்து நம்மைக் கவர்ந்தாலும் சரி... 'உங்களில் ஒருவன்' என்று ஏமாற்றும் டீ—ஷர்ட்டை அணிந்திருந்தாலும் சரி! நாம் புரிந்துகொள்ள வேண்டியதெல்லாம் ஒன்றுதான்...

தொழில்நுட்ப நிறுவனங்கள் யாவும் பேராசை பிடித்தவை, அவற்றை நாம் கவனத்தோடு இருந்து அடக்கியே ஆக வேண்டும்.

தமிழில்: ஆசை

# தமிழே

## தகைமை காக்கத் தவறிய தலைமை

**ச**ந்தமிழ் அகராதியில் 'தகைமை' என்ற சொல்லுக்கு தகுதி, பெருமை, மதிப்பு, ஒழுக்கம் என பல பொருள்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால், மேற்கண்ட பொருள்களில் எது ஒன்றுக்காவது தங்களைத் தகுதி உள்ளவர்களாக ஆக்கிக் கொள்ளாத தலைவர்கள் ஆளும் பொறுப்பில் அமர்ந்திருக்கிறார்கள் என்பதை மிக்க துயரத்துடனும், அளவில்லாத துன்பத்துடனும் சுட்டிக்காட்ட வேண்டிய நிலையில் தமிழ் மக்கள் உள்ளனர்.



காவிரிச் சிக்கலில் உச்ச நீதிமன்றம் அளித்த இறுதியான தீர்ப்பின்படி செயல்பட வேண்டிய தலைமையமைச்சர் மோடியின் அரசு குறிப்பிட்ட காலத்திற்குள் அவ்வாறு செய்யத் தவறியதோடு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் வேலையைச் செய்தது.

உச்சநீதிமன்றத்தின் ஆணையில் குறிப்பிடப்பட்ட சொல்லுக்குப் பொருள் விளங்கவில்லை என குறித்த காலம் கடந்து முறையிட்டபோது, இது திட்டமிட்ட காலங்கடத்தும் வேலை என்பதைப் புரிந்துகொண்ட உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, தான் அடைந்த வியப்பையும், ஏமாற்றத்தையும் வெளிப்படையாகத் தெரிவித்ததோடு, தனது ஆணையின் வண்ணம் அமைக்கப்படவேண்டிய காவிரி மேலாண்மை வாரியத்திற்கான திட்டத்தை அளிக்காமல் ஒன்றிய அரசு தனது பொறுப்பையும், கடமையையும் தட்டிக்கழிப்பதாகக் கடிந்துகொண்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, மேலும் 3 மாத கால நீட்டிப்பு வழங்கவேண்டும் எனக் கேட்டபோது, அதன் பின்னணியையும் உச்ச நீதிமன்றம் புரிந்துகொண்டது. மே—12ஆம் தேதி நடைபெறவிருக்கும் கர்நாடகத் தேர்தல் முடியும் வரை காலங்கடத்துவதே அரசின் நோக்கம் என்பதை உணர்ந்த உச்ச நீதிமன்றம், மே 3—ஆம் தேதி வரை மட்டுமே கால நீட்டிப்பு கொடுத்தது. காவிரி சமவெளிப் பகுதியில் வேளாண்மை வேலைகளைத் தொடங்குவதற்கு ஏற்றபடி ஆண்டுதோறும் சூன் 12—ஆம் தேதி

# தமிழ் தேடி

மேட்டூர் அணை திறக்கப்படுவது வழக்கம். எனவே, மே 3—ஆம் தேதிக்குள் தனது தீர்ப்புக்கு ஏற்ற திட்ட வடிவத்தை அளிக்கவேண்டுமென ஆணை பிறப்பித்துள்ளது.

விளக்கம் கேட்டு ஒன்றிய அரசு அளித்த முறையீட்டு மனுவினை முன்னதாகவே அளிக்காமல், 6 வார காலம் கடந்த பிறகு அளிப்பதன் நோக்கம் என்ன என்ற தலைமை

## பழ. நெடுமாறன்

அமைவுற்ற இந்திய அரசமைப்பின்பால் உண்மையான நம்பிக்கையும் பற்றும் பூண்டிருப்பேன் என்றும், இந்தியாவின் இறையாண்மையும் ஒருமைப்பாடும் நிலைபெறுமாறு செய்வேன்



நீதிபதியின் கேள்விக்கு அரசின் வழக்கறிஞர் பதில் கூற முடியாமல் தலைகவிழ்ந்து நின்றார். அவருக்கு இத்தகைய தலைக்குனிவு ஏற்படவில்லை. மாறாக, தலைமையமைச்சர் மோடிதான் அவமதிக்கப்பட்டு தலை குனிந்து நிற்கிறார்.

தலைமையமைச்சர் பதவியை மோடி அவர்கள் ஏற்கும்போது இந்திய அரசியல் சட்டத்தின் மூன்றாம் இணைப்புப் பட்டியலில் பிரிவு 75—இன் கீழ் பின்வரும் உறுதிமொழியை கூறி பதவி ஏற்றார்: ‘நரேந்திர மோடி ஆகிய நான், சட்டமுறையில் என்றும், ஒன்றியத்து அமைச்சர் என்னும் முறையில் என்னுடைய கடமைகளை அகத்தூய்மையுடனும், மனச்சான்றின்படியும் ஆற்றுவேன் என்றும், அரசமைப்பு முறைக்கும், சட்ட நெறிக்கும் இணங்க அச்சம், கண்ணோட்டம் இன்றியும், விருப்பு, வெறுப்பு இன்றியும், பல்திற மக்களுக்கும் தகுவன புரிவேன் என்றும் கடவுளை முன்னிறுத்தி ஆணை மொழிகிறேன்’ எனக் கூறி அவர் ஏற்ற பதவியின் தகைமையை அவர் காக்கத் தவறிவிட்டார்.

அவர் மட்டுமல்ல, அவருக்கு முன்னதாக

தலைமையமைச்சர் நாற்காலியில் அமர்ந்திருந்த பலரும் காவிரிப் பிரச்னையில் தங்களின் தகைமையைக் காக்கத் தவறிவிட்டனர். 1968—ஆம் ஆண்டு முதல் 1971—ஆம் ஆண்டுவரை ஒன்றிய அரசின் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எந்த முடிவும் ஏற்படாத நிலையில், நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென தமிழக அரசு வேண்டுகோள் விடுத்தபோது அப்போதைய தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவ்வாறு செய்ய முன்வரவில்லை. உச்ச நீதிமன்றத்தில் தமிழகம் தொடுத்துள்ள வழக்கினைத் திரும்பப் பெற்றுக்கொண்டால் இரு மாநிலங்களுக்கிடையே பேச்சுவார்த்தையின் மூலம் நல்ல முடிவு காண உதவுவதாக அவர் அளித்த வாக்குறுதியை நம்பி தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் தனது வழக்கினைத் திரும்பப்பெற்றது.

1972—ஆம் ஆண்டில் தமிழகம், கர்நாடகம், கேரளம் ஆகிய மூன்று மாநில முதலமைச்சர்களின் பேச்சு மீண்டும் தொடங்கியது. காவிரிப் பிரச்னை தொடர்பான புள்ளிவிவரங்களைத் தொகுத்துத் தருவதற்கு உண்மை அறியும் குழு ஒன்றினை அமைப்பதென முடிவு செய்யப்பட்டது. பேச்சுவார்த்தை முடிக்கும்வரை எந்த மாநிலமும் புதிய பயன்முறைகளை ஏற்படுத்தக் கூடாது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தக் கூட்டறிக்கையில் மூன்று மாநில முதல்வர்களும் இந்திய அமைச்சரும் கையெழுத்திட்டார்கள். ஆனால், கர்நாடகம் இந்த உடன்பாட்டையும் மீறி புதிய பாசனத் திட்டங்களை வேகமாக நிறைவேற்றத் தொடங்கியது. ஆனால் இதைத் தடுத்து நிறுத்தவேண்டிய தலைமையமைச்சர் இந்திரா காந்தி தனது தகைமையைக் காக்கத் தவறினார்.

1973 இறுதியில் புதுதில்லியில் மூன்று மாநிலங்களின் முதல்வர்களும் இந்திய பாசன அமைச்சரும் கூடி காவிரி உண்மையறியும் குழுவின் அறிக்கையை ஆராய்ந்து அந்தப் புள்ளிவிவரங்கள் சரியானவை என ஒப்புக்கொண்டனர். அதனடிப்படையில், மேலும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று, 1974 நவம்பர் இறுதியில், காவிரி சமவெளி அதிகார அமைப்பு ஏற்படுத்தும் திட்டத்தை மூன்று மாநில முதல்வர்களும் ஒப்புக்கொண்டனர். ஆனால், அதன்படி அந்த அமைப்பினை ஏற்படுத்த இந்திய அரசு தவறியதோடு தனது தகைமையையும் இழந்தது.

1976 ஆகஸ்டில் இந்திய அரசு ஒரு நகல் உடன்பாட்டினை உருவாக்கியது. அதற்கிணங்க, தமிழகம் பெற்றுவந்த 489 டி.எம்.சி. நீரில் 100டி.எம்.சி.யை குறைத்துக் கொள்ளவேண்டும். கர்நாடகம் பெற்றுவந்த 177டி.எம்.சி. நீரில் 25டி.எம்.சியை குறைத்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு குறைத்துக்கொள்ளப்படும் 125 டி.எம்.சி. நீரில் தமிழ்நாட்டிற்கு 4 டி.எம்.சி. நீர் அளிக்கப்பட்டு, மொத்தம் 393டி.எம்.சி. நீர் அளிக்கப்படும். கர்நாடகத்திற்கு கூடுதலாக 87டி.எம்.சி. நீர் அளிக்கப்பட்டு மொத்தம் 239 டி.எம்.சி. நீர் பெறும். கேரளத்திற்கு 39டி.எம்.சி. நீர் அளிக்கப்படும். முதலில் இதை ஏற்றுக்கொண்ட கர்நாடகம், பின்னர் அதை ஏற்க மறுத்துவிட்டது.

எனவே, 1990ஆம் ஆண்டில் காவிரி நடுவர்மன்றம் அமைக்கவேண்டும் என ஒன்றிய அரசை தமிழகம் வற்புறுத்தியது. ஆனாலும், சட்டப்படி அவ்வாறு செய்ய வேண்டிய ஒன்றிய அரசு காலம் கடத்தியது. அப்போது தலைமையமைச்சராக இருந்த வி.பி. சிங் தனது தகைமையைக் காக்கத் தவறினார். உச்ச நீதிமன்றத்தின் முடிவுக்கு இந்தப் பிரச்னையை விட்டுவிடுவதாக அரசு வழக்கறிஞர் உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்தார். எனவே, உச்ச நீதிமன்றம் 1990 ஏப்ரல் 24—ஆம் தேதி நடுவர்மன்றத்தை அமைத்து அரசிதழிலும் வெளியிடவேண்டுமென ஆணை பிறப்பித்தது. அவ்வாறே சித்ததோஷ் முகர்ஜி தலைவராகக் கொண்ட நடுவர்மன்றம் அமைக்கப்பட்டது.

1991சூன் 21—ஆம் தேதி நடுவர்மன்றம் தமிழகத்திற்கு 205டி.எம்.சி. நீர் அளிக்கவேண்டும் என இடைக்கால ஆணை பிறப்பித்தது. ஆனால், இந்த ஆணையை ஏற்க மறுத்து கர்நாடக சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. இச்சட்டமன்றத்தில் அங்கம் வகித்த அகில இந்தியக் கட்சிகள் அனைத்தும் இத்தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்து தங்களது தகைமையைக் காக்கத் தவறின.

நடுவர்மன்றத்தின் இடைக்கால ஆணையை அரசிதழில் வெளியிடாமல் ஒன்றிய அரசு காலம் கடத்தியது. மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் தமிழகம் முறையிட்டு அரசிதழில் வெளியிடுமாறு ஆணை பிறப்பித்த பிறகே அந்த ஆணை வெளியிடப்பட்டது. அப்போது தலைமையமைச்சராக இருந்த பி.வி.நரசிம்மராவ் தனது தகைமையைக் காக்கத் தவறினார்.

1993 சூலை வரை நடுவர்மன்றம் அளித்த தீர்ப்பை மதிக்கவோ, அதற்கிணங்க தண்ணீர் தரவோ கர்நாடகம் பிடிவாதமாக மறுத்துவிட்டது. ஒன்றிய அரசு பாராமுகமாக இருந்தது. அப்போதைய முதல்வர் ஜெயலலிதா உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினார். இதன் விளைவாக ஒன்றிய அரசு தலையிட்டு, தண்ணீர் அளவைக் கண்காணிக்க குழு அமைப்பதாக உறுதி கூறியது. ஆனால், அதை ஏற்க கர்நாடகம் பிடிவாதமாக மறுத்துவிட்டது. எனவே மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் தமிழகம் முறையிட்டது. அதன் விளைவாக, இப்பிரச்னையில் 11டி.எம்.சி. நீரை

தமிழகத்திற்கு அளிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு தலைமையமைச்சருக்கு நடுவர்மன்றம் ஆணை பிறப்பித்தது. தலைமையமைச்சர் பி.வி.நரசிம்மராவ் இரு மாநில முதல்வர்களையும் அழைத்துப் பேசி, 6டி.எம்.சி. நீரை தமிழகத்திற்கு



வழங்கவேண்டுமென ஆணையிட்டார்.

காவிரி நடுவர்மன்றம் அமைக்கப்பட்ட நாளிலிருந்து அதனுடன் ஒத்துழைக்கவோ, அதனுடைய ஆணைகளை நிறைவேற்றவோ கர்நாடகம் தவறியது. அதுமட்டுமல்ல, அப்போது கர்நாடக மாநில எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தேவே கௌடா, காவிரி நடுவர்மன்றத் தலைவர் சித்ததோஷ் முகர்ஜி தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்தபோது விலையுயர்ந்த பரிசுகளைப் பெற்றிருப்பதாகக் குற்றம்சாட்டி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். தமிழகக் கோயில்களுக்கு நடுவர்மன்ற நீதிபதிகள் சென்றபோது அவர்களுக்குப் பரிவட்டம் போன்ற மரியாதைகள் செய்யப்பட்டன.

இதையே பரிசுகள் என திசைதிருப்ப தேவேகௌடா முயன்றார். அவர் கர்நாடக முதலமைச்சரான பிறகும் இந்த வழக்கைத் திரும்பப் பெறவில்லை. பிறகு இந்தியாவின் தலைமையமைச்சர் பொறுப்பையும் அவர் ஏற்றார். தலைமையமைச்சராக உள்ளவர் தன்மீது வழக்குத் தொடர்ந்திருப்பதால் நடுவர்மன்றத் தலைவருக்கு இக்கட்டான நிலைமை ஏற்பட்டது. காவிரி நடுவர்மன்ற விசாரணையில் 75% முடிவடைந்துவிட்ட நிலையில் அதன் தலைவர் பதவி விலக வேண்டிய நிலையை ஏற்படுத்தியதன் மூலம், தலைமையமைச்சர் தேவேகௌடா தனது தகைமையை முற்றிலுமாக இழந்துவிட்டார்.

காவிரிப் பிரச்னை தொடங்கிய 1968—ஆம் ஆண்டிலிருந்து 2018—ஆம் ஆண்டு வரை, ஐம்பதாண்டு காலமாக பல தலைமையமைச்சர்கள் பதவி வகித்துள்ளார்கள். இவர்கள் யாருமே நடுவர்மன்றத் தீர்ப்பையோ, உச்ச நீதிமன்றங்களின் தீர்ப்பையோ மதிக்காத கர்நாடக அரசின் மீது எத்தகைய நடவடிக்கையும் எடுக்க முன்வராமலும், தமிழகத்திற்கு நீதி வழங்காமலும் தங்களின் தகைமையை அடியோடு சிதைத்துவிட்டனர்.

இவர்கள் மட்டுமல்ல, தேசிய ஒருமைப்பாடு பற்றிப் பேசும் அகில இந்தியக் கட்சித் தலைவர்களில் ஒருவர்கூட கர்நாடகத்தின் போக்கு தேசிய ஒருமைப்பாட்டிற்கு உலை வைக்கும் போக்கு என ஒருபோதும் கண்டிக்க முன்வரவில்லை. தங்கள் தகைமையைக் காப்பாற்றுவதைவிட கர்நாடகத் தேர்தலில் தாங்கள் சார்ந்திருக்கும் கட்சி ஆட்சி அமைக்கவேண்டும் என்பது மட்டுமே இவர்களின் நோக்கமாக இருந்து வருகிறது. தங்களின் தகைமையைக் காக்க தலைமையமைச்சர்களும், அகில இந்தியத் தலைவர்களும் தவறும்போது, மக்கள் அரசியல் சட்டத்தின் மாண்பை மதிக்கவேண்டும் என எதிர்பார்ப்பதும், தேசிய ஒருமைப்பாட்டினைக் காக்கவேண்டும் என முழங்குவதும் வீண்! வீண்! வீணே.

# என்றும் நடவாய்

## காவிரி என்பது வெறும் நீரல்ல!

காவிரிப் படுகைக்கு என்று ஒரு ரசனை. அங்கே சிருங்காரம் சற்றுத் தூக்கலாக இருக்கும். சங்க காலத்திலிருந்து மருத நிலத்தின் அடையாளமே அதுதானே! பேசும்போது சங்கதிகளை அசட்டுத்தனமாகப் பிட்டுவைக்காமல் தொட்டுத்தான் காட்டுவார்கள். தன்னையே



குறியாக வைத்ததுபோல் பிறரையும் பேசும் கேலிப்பேச்சு உண்டு. முழுத் தத்துவமாக அது முற்றாவிட்டாலும் அங்கு ஒரு தத்துவமும் உண்டு. சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டும் எளிமையில் உடம்பை உதறிவிட்டுப் போவார்கள். “இந்த ஆக்கையைச் சுட்டுப்போட்டால் என்ன?” என்று தன் உடம்பிலிருந்தே விலகி நின்று அதைச் சபித்துக்கொள்வார்கள்.

வயிற்றுக்கு மட்டுமே சோறிட்டு வளர்க்கவில்லை காவிரி. இப்படி ஒரு சிந்தனைக் கலாச்சாரத்தையும் வளர்த்திருந்தது. அது பண்பாட்டுப் படைப்புகளான இலக்கியத்துக்கும், கலைக்கும் ஊற்று. காவிரி சென்றுகொண்டிருக்கும் வறட்சிப் பாதையைப் பார்க்கையில் ஒரு அச்சம் ஏற்படுகிறது. தண்ணீரோடு சேர்த்து இவையெல்லாமும் காணாமல் போய்விடும்?

கலாச்சாரப் பிளவு

பேச்சுவாக்கில், “ஆற்றங்கரை மரமும் அரச வாழ்வும்” என்று சொன்னேன். கேட்டுக்கொண்டிருந்தவருக்குப் புரியவில்லை. ஆற்றுப் படுகையை ஆறு அரித்து ஓடும்போது அங்கே இருப்பது அரச மரமானாலும் விழுந்துவிடும். இன்று அரசனாக இருப்பவன் நாளையே அடிமையாகக்கூடும். சொற்கள் புரிந்திருந்தாலும் அவரால் விளங்கிக்கொள்ள முடியாததற்குக் காரணம், சிந்தனைக் கலாச்சாரத்தில் வந்த இடைவெளி. ஆற்றங்கரை அரச மரம் அவர் பிரக்ஞைக்கு அந்நியம்.

# வாழி காவேரி!

**தங்க. ஜெயராமன்**

சங்க இலக்கியமான நற்றிணைப் பாடல் ஒன்று மருதத்தின் வளத்தைப் பற்றியது. அறுவடை முடிந்தது. தாளை மடக்கி உழுது மறுபடியும் விதைக்க விதை கொண்டுசென்றார்கள். விதைத்துவிட்டு கூடைகளில் மீனைப் பிடித்துக்கொண்டு மீண்டார்கள் என்று பாடல். வழியிலிருந்த குட்டைகளில் மீன் பிடித்தார்கள் என்றுதான் இதைப் புரிந்துகொள்கிறார்கள். வயலிலேயே மீன் கிடப்பதை அன்றைய காவிரிக்



காலத்தில் பார்த்திருக்கிறேன். வயலில் மீன் கிடப்பது இன்றைய பிரக்ஞைக்கு எட்டாது. இது கால இடைவெளி அல்ல. தலைமுறை இடைவெளி அல்ல. காவிரி காலத்துத் தலைமுறை, காவிரிக்குப் பிந்தைய காலத்துத் தலைமுறை என்று ஒரு பிரக்ஞைப் பிளவு உருவாகும்.

காவிரிக் கரையில் நகரங்கள் அமைந்தன என்பது பெரிதல்ல. நகரமைப்புக்குள்ளேயே, கட்டிடக் கலைக்குள்ளேயே காவிரி வந்திருந்தது. மதிலைக் காவிரி வருடிக்கொண்டு ஓட கரையில் கட்டுமலையாக இருக்கும் கோயிலடி ரெங்கநாதர் கோயிலைப் போல் இங்கு பல மாடக்கோயில்கள் உண்டு. பெருகிவரும் இடங்களிலும் காவிரியை விட்டு விலகாமலிருக்கும் ஒரு வாஞ்சை.

அங்கங்கே பரந்து நிறைத்துக்கொண்டு இந்தச் சீமையைப் புனல் நாடாக்கிக்கொண்டிருந்தது



காவிரி. திராவிட நகரமைப்பின் மையமான கோயில்களில் இருந்து திருமஞ்சன வீதி ஒன்று காவிரிக்குச் செல்லும். இறைவனின் அன்றாட அபிஷேகத்துக்கு காவிரியிலிருந்து தண்ணீர் எடுத்துவருவார்கள்.

துலாக் காவிரி

ஆடிப்பெருக்கில் தீர்த்தவாரிக்கு எங்கள் ஊர் பெருமாள் ஆற்றுக்குச் செல்வார். காவிரி வறண்டுவிட்டதால் அண்டாவில் தண்ணீரை வைத்துக்கொண்டு ஆற்றில் தீர்த்தவாரி நடக்கிறது. ஐப்பசியில் காவிரி துலாக் காவிரியாகும். மயிலாடுதுறையில் பெருமாளுக்கும் சிவனுக்கும் துலாக் காவிரி தீர்த்தவாரி பெரிய விழா. இந்த ஆண்டு காவிரியில் வரத்து இல்லாமல் ஆழ்துளைக் கிணற்று தண்ணீரில் ஐப்பசி கடை முழுக்கு நடந்தது. ஸ்ரீரங்கம் பெருமாளுக்கு இந்த மாதத்தில் காவிரியின் அம்மா மண்டப படித்துறையிலிருந்துதான் தீர்த்தம். மற்ற மாதங்களில் அவருக்குத் தீர்த்தம் கொள்ளிடத்திலிருந்து வரும். துலாக் காவிரி என்று ஒரு காவிரி இனி வருமா?

மாசி மகத்தன்று எல்லாக் கோயில்களிலிருந்தும் சுவாமி குளத்துக்கோ காவிரிக்கோ சென்று தீர்த்தவாரி நடக்கும். கெட்டி மேளம் கொட்ட காளை வாகனத்தில் சுவாமி ஆற்றில் இறங்கும்போது மக்கள் காவிரி நீரை வாரி வாரி இரைத்துக்கொள்வார்கள். கங்கையைத் தலையில் மறைத்த சிவன் காவிரியைக் காட்டிக்கொண்டு நிற்பார். இப்போது காவிரியும் மறைந்ததே!

மன்னார்குடி ராஜகோபாலனுக்கு ஆண்டுத் திருவிழாவின் இரண்டாம் நாள் புன்னை மர வாகனம். கோபிகைகளின் ஆடைகளைக் கவர்ந்துகொண்டு வேணுகோபாலனாக சுவாமி புன்னை மரத்தில் இருப்பார். விழா பங்குனி மாதம் நடக்கும். அக்கரையிலிருந்து பாமனி ஆற்றில் இறங்கி சுவாமி இக்கரைக்கு ஏறுவார்.

அவர் ஆற்றில் இறங்கி வரும்போது, “யமுனையில் நடந்த ஜலக்கிரீடையாகவே அது தோன்றும்” என்பார் எங்கள் ஊர் பிரசன்னா பாட்டாச்சாரியார். கோயில் விழாக்களில் காளை வாகனமும் புன்னை மரமும் நிஜமல்ல. காவிரி நீர் நிஜம். காவிரியின் நிஜம் மற்றவற்றையும் அப்போது பற்றிக்கொள்ளும். இனி எல்லாமே கற்பனைதானோ!

தியாகராஜரின் இசை நாடகம் ‘நௌகா சரித்திரம்’. அதில் வரும் கிருஷ்ண லீலை யமுனையில் நடப்பதாகக் கற்பனை. நாடகத்தை இயற்றியவர் காவிரிக் கரையில்தான் வாழ்ந்தார். அதற்கும் மேற்கே வரகூர் நாராயண தீர்த்தரின் கிருஷ்ண லீலா தரங்கிணியில் துவங்கி, மெலட்டூர் பாகவத மேளா, ஊத்துக்காடு வேங்கட கவியின் பாடல்கள், மாயவரம் கோபால கிருஷ்ண பாரதியின் ‘நந்தனார் சரித்திரம்’ வரை காவிரிக் கரையில் பிறந்தவை. காவிரிக் கரையில் இனி கற்பனை பிறக்குமா?

ஆடிப்பெருக்கில் புதுத் தம்பதிகள் மண மாலைகளைக் காவிரியில் விடுவதற்கு நீரில்லை. தமிழ் இலக்கியத்தின் புதுநீராடல் பின்னணியில் இதைப் பார்க்க வேண்டும். அப்போது காஞ்சியிலிருந்து, நெல்லையிலிருந்து ராமநாதபுரத்திலிருந்து மக்களைக் காவிரிக் கரை ஈர்த்துக்கொண்டது. இங்கிருப்பவர்களே இன்று வெளியிடங்களுக்குச் சென்றால்தான் பிழைக்கலாமோ?

காவிரியில் நீர்வரத்து குறைந்ததால் இங்கு

இயற்கைச் சூழலின் வலைப்பின்னல் குலைந்துபோன கோலமாயிற்று. குளம், குட்டைகளில் ஏற்றிவைத்த விளக்காகப் பூக்கும் அல்லி, தாமரை, நீலோத்பலத்தைக் காணவில்லை. சேறே இல்லாதபோது சேற்றில் நடக்கும் உம்பளச்சேரி மாடும் இல்லை என்றானது.

பாசன அமைப்பை அந்தந்தக் கிராமமே பராமரிக்கும் அக்கறையும் இப்போது மறைந்துவிட்டது. வரத்து குறைந்து முறைப்பாசனம் வந்தது. இதனால், ஒவ்வொரு கிராமத்திலும் கடைமடைப் பகுதி ஒன்று உருவாகி அது இளைத்துக்கொண்டிருக்கிறது. நீரின் அளவு



வண்டலை விட்டுவிட்டோமே!

அப்போது காவிரியில் வந்தது நீர்மட்டுமல்ல. வளத்தைக் கொடுக்கும் வண்டலும் வந்தது. உச்ச நீதிமன்றம் வழங்கும் நீர் வந்தாலும் வண்டல் வராது. வழியில் வண்டலைத் தடுத்துக்கொள்ளும் அத்தனை அணைகள், தடுப்பணைகள். யாரும் இதைக் கணக்கில்கொள்வதில்லை. டெல்டாவை உருவாக்கியது இந்த வண்டல். இங்கு ஓடும் 36 நதிகளில் 18 கடலை அடையும். மற்றவை வண்டலின் விசிறிப் பரப்பில் சுவர்ந்துவிடும். 26 ஆயிரம் கி.மீ. நீளமுள்ள வாய்க்கால்கள் வண்டலைக் கடத்திக் கடத்தி காவிரிக் கரையை உயிர்ப்போடு வைத்திருந்தன.

வண்டல் படிவதால் படுகை உருவாகும், குறைந்து காணாமலும் போகும். படுகையை இடித்தும் சேர்த்தும் இடம் வலமாகப் புரண்டு காவிரி தன் போக்கை மாற்றிக்கொள்ளும். ஆறு புரண்டுவிடுவதால் ஒரே கிராமம் ஆற்றுக்கு இக்கரையிலும் அக்கரையிலுமாக இருப்பதுண்டு. இந்த வண்டல் காவிரிக் கரைக்கு வாலிபத்தின் வனப்பைக் கொடுத்தது. நீருக்கு மேல் வண்டலை வைத்துக்கொண்டால் நம் உரிமையைச் சரியாக வடிவமைக்கிறோம். ஆனால் நாம் நீரை மட்டும்தானே கேட்கிறோம்!

குறைந்தது என்பதைவிட உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் நாம் அதிகம் அஞ்ச வேண்டியவை இரண்டு உண்டு. ஒரு பெருநகரின் குடிநீர்த் தேவை நதிநீர்ப் பங்கீட்டுக்கு ஒரு அடிப்படையானது ஒன்று. இங்கு நாம் எதிர்பாராத வகையில் ஒரு நியாயவியல் கோட்பாடு உருவாகி அழுத்தமாகியுள்ளது. அந்த நகரின் தேவை அதிகரிக்கும்போதும் இதே கோட்பாடு பின்பற்றப்படுமானால் விளைவு என்ன என்பதை நாம் ஊகிக்கலாம். இரண்டாவது, மனித நாகரிகத்தைப் பற்றியது. ஒரு நீராதாரத்துக்குப் பெருநகரின் குடிநீர்த் தேவையும் விவசாயத் தேவையும் போட்டி. மனித நாகரிகத்தின் வளர்ச்சி பெரு நகரங்களைப் பெருக்கும். இதை நிறுத்தித் திருப்ப முடியாது.

நாகரிக வளர்ச்சி என்பது விவசாயத்துக்குப் பகைதானா? விவசாய வளர்ச்சி என்றால் ஒரு போகத்தை இரண்டு போகமாக்குவது, அதை மூன்றாக்குவது, ஆண்டுக்கு ஆண்டு உற்பத்தி அதிகமாவது என்ற வளர்ச்சி தொடர்பான நமது மன வரைவு ஒரு உட்பகை. வருமானம் பெருக வேண்டும். ஆனால், விவசாயம் ஆதாயத்துக்காகத்தானா? காவிரி என்பது நீர் மட்டும்தானா!

# சிதறிய வார்த்தைகள் !

## மரணம்

தடியூனி நடக்கும் கனவு அது
இடையே மரணம் வந்து வந்து
காலிடறிச் சிரிக்கிறது..

காதுகளில் அழுபவர்கள்
ஆயிரமாயிரம் பேர் — சற்று
காதுபொத்திக் கேட்கிறேன்; என்
மகள் அழுகிறாள்,

எட்டி உதைத்தேன் அந்தக் கனவை
ஐயோ என்று
எமன் கத்திய சப்தம்;

எவனானால் என்ன
என் மகளினி அழமாட்டாள்...

**வித்யாசாகர்**

புல் வெளியில் இடைவெளியுடன்
அமர்ந்திருக்கிறோம்,
புற்கள் யாவிலும் வார்த்தைகள் பூத்துக்கிடக்கின்றன
எடுக்கவா...கோர்க்கவா என்பது போல்
என்னைப்பார்க்கிறாய்
வேண்டாம்!
புதுப்பூக்கள் உன் பார்வைக்கு தெரிவதில்லை ,
வாடி வதங்கிய பழைய நினைவுகளை
வார்த்தைப்பூக்களாய் தேர்வு செய்கிறாய்,
நீ அவ்வப்போது போட்ட
இப்பூக்கள் மாலையாகக் கழுத்தில் கனக்கின்றன

பார்...
என் தலை கூடக் குனிந்தே தான் போய்விட்டது,
பாரத்தால்...
இருக்கட்டும்...
நீ இவற்றை மனதில் சுமந்து வேதனைப்பட்டிருப்பாய் ,
ஆனால் என்ன செய்வது ...
மீண்டும் கஷ்டப்பட்டுத் தேடி ,
பொறுக்கி எடுத்து
மனதில் பொறுத்தியபடிதான் இருக்கிறாய்...

சிதறிய வார்த்தைகளை
விட்டுவிடு
வார்த்தைகள் கீழேயே கிடக்கட்டும்
வாடியபடி.

**லதா ரகுநாதன்**

# ஆசிரியர் போற்றுதும்...

அஞ்சில் எமைவளைத்து
அமுதனைய கல்வியினை
நெஞ்சில் நிறைக்கின்ற
நேர்த்தியெலாம் கற்றவரே!

பேசரிய மாண்பெல்லாம்
பிள்ளைகள் எமைச்சேர
ஆசிரிய பணிசெய்யும்
அன்பின் தெய்வங்காள்!

பொற்போடு எமைநடத்திப்
புகழ்மணக்கும் கல்வியினைக்
கற்போடு கற்பிக்கும்
கடமையிற் பெரியோரே!

குன்றளவு கொடுத்தாலும்
குறையாத செல்வத்தை
இன்றளவும் எமக்களித்து
இன்புறும் வள்ளல்காள்!

ஈன்றோரின் மேலாக
எம்நெஞ்சில் நிறைபவரே!
சான்றோராய் எமைமாற்றும்
சாதனைகள் புரிபவரே!

எச்செல்வம் அளித்தாலும்
எச்சமின்றித் தீர்வதுண்டு
மெச்சிநீங்கள் அளித்தசெல்வம்
விளிவின்றி வளருமன்றோ!

அன்னையே தெய்வமென்றும்
அன்பே தெய்வமென்றும்
கன்னின்றோர் தெய்வமென்றும்
கதைகள்பல உண்டெனினும்
பள்ளிக் கூடமெனும்
பண்பட்ட கோயிலின்
உள்ளே எழுந்தருளும்
உயர்தெய்வம் நீங்களன்றோ!

தாய்சொல்ல முதன்முதலிற்
சேய்பேசும் அம்மொழியே
தாய்மொழியாம் என்றெவரும்
சாற்றும் மொழியினையும்
சேய்நாங்கள் தப்பின்றிச்
செப்புதற்குக் கருத்துடனே
ஆய்ந்தறிந்து ஊட்டுகின்ற
அன்னையரும் நீங்களன்றோ!

தரிசை சீர்செய்து
தக்கபடி ஏர்நடத்தி
வரிசை பிடித்துவிதை
வார்த்திடுவர் வேளாலர்
அறிவு நீர்பாய்ச்சி
அகந்தைக் களையகற்றி
செறிவுடையோ ராய்எம்மைச்
செய்உழவர் நீங்களன்றோ!

சிலையின் இறுதிநிலை
சீர்மிகு கண்திறப்பாம்ஞ்
விளையும் பயிரெமக்கோ
விழிதிறப்பே முதல்நிலையாம்...
எண்ணோடு எழுத்தென்னும்
இருகண்கள் திறக்கின்ற
திண்ணிய பணிசெய்யும்
சிற்பியரும் நீங்களன்றோ!

அன்றாடம் எமைநாடி
அறிவு புகட்டுமுமை
இன்றிந்நாள் எம்நெஞ்சில்
இருத்திப் புகழ்கின்றோம்!

வாழ்நாள் முழுவதையும்
மாணவர் எமக்களித்து
வீழ்நாள் இலாக்கல்வி
விளைக்கும்நீர் வாழியவே!

**அகரம் அமுதா**

நடிகர் விஜய் சேதுபதி சில படங்களை ‘விஜய் சேதுபதி புரொடக்ஷன்ஸ்’ மூலம் சொந்தமாக தயாரித்தும் வருகிறார். முதன்முதலாக ‘ஆரஞ்சு மிட்டாய்’ என்ற படத்தை அடுத்து, ‘மேற்குத் தொடர்ச்சி மலை’ என்ற படத்தை தயாரித்தார். படத்தின் அனைத்து பணிகளும் முடிவடைந்து ரிலீசுக்கு தயாராகி இருக்கும் நிலையில், துளுவில் நடைபெற்ற இந்திய திரைப்பட விழாவில், சிறந்த படத்திற்கான விருதைப் பெற்றுள்ளது. இப்படம் விஜய் சேதுபதிக்கு ஒரு நல்ல தயாரிப்பாளர் என்ற சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுத் தந்துள்ளது.





## கலக்கட்டும் காஜல்!

## தயாரிப்பாளர் விஜய் சேதுபதி!

## தரமான தயாரிப்பாளர்!

## கலைச்செல்வியாக காஜல்!

‘அதிகாரம் ஒன்று’ திரைப்படத்திற்குப் பிறகு, கார்த்தி நடிக்கும் படம் “கடைக்குட்டி சிங்கம்”. இப்படத்தை இயக்குநர் பாண்டிராஜ் டைரக்ட் செய்கிறார். முதல்முறையாக தம்பி நடிக்கும் திரைப்படத்தை தன்னுடைய 2டி நிறுவனம் மூலமாக தயாரிக்கிறார் சூர்யா. விவசாயத்தை மையமாக வைத்து உருவாகியிருக்கும் இந்தப் படம் பலரை விவசாயத்தின் பக்கமாக ஈர்க்கும் என்கிறார்கள் படக்குழுவினர். இந்தப் படத்தில் கார்த்தியின் அப்பாவாக சத்யராஜூம் கதாநாயகிகளாக சாய்ஷா, பிரியா பவானி சங்கர் ஆகியோரும் நடிக்கின்றனர்.

# மீண்டும் இணையும் ஜோடி!



## வெற்றி இணை வெற்றி நினை!

நடிகர் சிவகார்த்திகேயனுடன் தற்போது சீமராஜா படத்தில் நடித்து வருகிறார். இதனையடுத்து ராஜேஷ் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க உள்ளார். இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக சாய் பல்லவி நடிக்க உள்ளதாக செய்திகள் வெளியானது. ஆனால் தற்போது நயன்தாரா நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. ஏற்கனவே வேலைக்காரன் படத்தில் இருவரும் ஜோடியாக நடித்துள்ளனர்.

## வாள் ஏந்தும் தேவதை!

## சங்கமித்ரா சரித்திர வெற்றியடையட்டும்!

சுந்தர்.சி இயக்கத்தில், ‘சங்கமித்ரா’ படத்தில் டைட்டில் வேடத்தில் தற்போது திஷா பதானி நடிக்கிறார். இவர் இந்தியில் டோனி வாழ்க்கை படமான, ‘எம்.எஸ்.டோனி தி அன்டோல்ட் ஸ்டோரி’ படத்தில் நடித்தவர். ‘வேலை செய்யாமலிருந்தால் எனக்கு வாழ்க்கை போரடிக்க ஆரம்பித்துவிடும். கடந்த ஆண்டு ஜாக்கிசான் நடித்த ‘குங்ஃபு யோகா’ படத்தில் நடித்தேன். தற்போது இந்தியில், ‘பாகி 2’ம் பாகத்தில் நடிக்கிறேன்.” எனும் திஷா பதானி ‘சங்கமித்ரா’வாக வாழ்ந்து கொண்டிருக்கிறாராம்!



# மங்காத தமிழென்று

## தமிழ்தேசியம்: சாதி, மத அடிப்படையில் கூறுபோடும் தமிழ் பாசிசமா?

“தேசம் ஒரு கற்பிதம். கற்பிதம் செய்யப்பட்ட சமூகம்’ என்றுதான் பெனெடிக்ட் ஆன்டர்சன் சொல்கிறார். அவர் ஒன்றும் தேசியத்தைக் குறைவுபடுத்தியோ, அது ஒரு பொய் அல்லது மாயை என்றோ சொல்லவில்லை. தேசத்தின் பெயரால் அரசியல் செயல்பாடுகள் அமைகின்றன. மக்கள் திரள்கிறார்கள். உயிரைத் தத்தம் செய்கிறார்கள், மக்கள் கொல்லப்படுகிறார்கள், இடம் பெயர்கிறார்கள். எனவே தேசம் ஒரு மாயை என்றெல்லாம் நான் சொல்லவில்லை.

அதே நேரத்தில் குடும்பம், தனிச் சொத்து, அரசு என்பவை போலவே தேசமும் இயற்கையானதல்ல. அது வரலாற்று ரீதியானது. தேசிய அரசியலுக்கு அப்பாற்பட்ட புறநிலை எதார்த்தமாக தேசத்தைப் பார்க்க வேண்டியதில்லை. நூறாண்டுகளுக்கு முன்னால் எர்னஸ்ட் ரெனான் குறிப்பிட்டதுபோல நவீன தேசங்களுக்கிடையே பொதுக் காரணி ஏதும் இல்லை. ஒவ்வொரு தேசமும் வெவ்வேறு கூறுகள் சிலவற்றின் தொகு புள்ளியாக வரலாற்றுப் போக்கில் உருவாக்கப்படுகிறது.

பிரிவினையின் போது மத அடிப்படையில் பாகிஸ்தான் உருவானது. ஆனால் மதம் ஒன்றானாலும் அது ஒரே தேசமாகப் பரிணமிக்கவில்லை. இன்று மொழி அடிப்படையில் பாகிஸ்தான் எனவும் வங்கதேசம் எனவும் ஒன்றுக்கொன்று பகையான இரண்டு நாடுகளாகிவிட்டன. ஒரே மொழி அடிப்படையில் பஞ்சாப் ஒரு தேசமாகப் பரிணமிக்க முடியவில்லை. மத அடிப்படையில் சீக்கியர்கள் காலிஸ்தான் கேட்கின்றனர்.

மொழி அல்லது இன அடிப்படையில் விசால ஆந்திரம் ஒரே தேசமாக உருப்பெற இயலவில்லை. இன்று ஒரே மொழி, ஒரே மாதிரியான மத அடையாளங்கள் உள்ள ஆந்திரமும், தெலங்கானாவும் தனித்தனியாகப் போகத் துடிக்கின்றன. இங்கே ‘வளர்ச்சி’ என்பது பிரிவினையின் முக்கிய காரணியாக அமைகிறது. இந்தியத் துணைக் கண்ட வரலாற்றில் இவை சில எடுத்துக்காட்டுகள். உலக அளவில் இன்னும் ஏராளமான எடுத்துக்காட்டுகளைச் சொல்லலாம்.

“எனில் தேசத்தின் ஆதிமூலம் எது? நதிமூலம் ரிஷிமூலம் போலவே தேசத்தின் மூலத்தையும் சொல்ல முடியாது. தேசத்தின் மூலத்தைத் தேடிப் போனீர்களானால் கடைசியாக உங்களுக்கு ஒரு கதைதான் பரிசாகக் கிடைக்கும். இமயத்தில் கொடி பொறித்த கதை. கனக விசயர் தலையில் கல்லேற்றிய கதை. கலிங்கத்தை வீழ்த்திப் பரணி பாடிய கதை. அனுராதபுரத்தையும் பொலனருவையையும் தீக்கிரையாக்கிய கதை...”

— இது நான் இருபதாண்டுகளுக்கு முன் எழுதியது. அப்போதுதான் இதற்கு எத்தனை எதிர்ப்புகள்; எத்தனை வசவுகள்.

ஆனால் அப்படி ஆத்திரப்பட்டவர்கள் எல்லோரும் இன்று சாதியின் அடிப்படையில் தமிழர்களை வரையறுக்கக் கிளம்பியுள்ளனர். சாதியைச் சொல், நீ தமிழனா இல்லையா எனச் சொல்கிறேன் என்கிறார் சீமான். மணியரசன் முதல் இன்னும் பலரும் இன்று அப்படித் தமிழ்ச் சாதிகள் பற்றிப் பேசுகின்றனர்.

சில மாதங்களுக்கு முன் மலேசியாவில் நடைபெற்ற இந்தக் கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் கூட்டத்தில் துண்டுச் சீட்டு கொடுத்து அதில் வந்திருந்தவர்களின் முகவரிகளோடு சாதிகளையும் எழுதச் சொல்லி வாங்கியுள்ளார்கள்.

2. ஒரு ஒப்பீட்டுக்காக இந்திய தேசிய உருவாக்கத்தின் கதையை மிகச் சுருக்கமாகப் பார்ப்போம். இந்தியா, பாரதம் என்கிற கருத்தாக்கங்கள் எல்லாம் வரலாற்றில் மிகச் சமீபமாக உருவானவை. “தேசப் போராட்டங்கள்தான் தேசத்தை உருவாக்குகின்றனவே ஒழிய தேசம் தேசப் போராட்டங்களை உருவாக்குவதில்லை” — என ரெனான் சொன்னதற்கு ஒரு சரியான

சங்கே

# முழங்கு!

**அ.மார்க்ஸ்**

எடுத்துக்காட்டு 'இந்தியா' என்கிற கற்பிதம்தான்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன் இந்தியா என ஒன்று கிடையாது என்பதை எல்லோரும் சொல்லிவிட்டார்கள். உண்மை. பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பின் முதல் சுதந்திரப்போர் எனச் சொல்லப்படும் சிப்பாய்க் கலகத்தின்போது கூட 'இந்தியா' என்கிற கருத்தாக்கம் உருவாகவில்லை.




'இந்திய தேசியக் காங்கிரஸ்' என இங்கு ஒன்று உருவாக்கப்பட்டபோது கூட அதை உருவாக்கியது ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் எனும் ஆங்கிலேயர்தான். பின் எப்போது இந்தியா என்கிற கருத்தாக்கம் உருவாகியது?

1905 ல் கர்சான் பிரபு வங்கத்தை இந்து வங்கம் (மேற்கு) எனவும் முஸ்லிம் வங்கம் (கிழக்கு) எனப் பிரித்தபோது இங்கு ஒரு எழுச்சியும் போராட்டமும் கிளர்ந்ததே அப்போதுதான் இந்தியா என்கிற கருத்து உருவானது. மகாகவி பாரதி அதை இப்படிச் சொல்கிறார்: வங்கப் பிரிவினையை ஒட்டி "தேசபக்தி என்கிற நவீன மார்க்கம்" தோன்றி, "நல்லோர்கள் சிந்தையை எல்லாம் புளகிக்கச் செய்தது" என 1908ல் அவர் எழுதினார்.

இந்த எழுச்சி இந்தியாவுக்குள் மத அடிப்படையில் முஸ்லிம்களுக்குத் தனி மாநிலம் என்கிற கருத்துக்கு எதிராக உருவானது. அந்த அடிப்படையில் ஆரிய

சம்பத்து, பாரதம் முதலான அடையாளங்களுடன் இந்தியா என்பதைக் கற்பிப்பது தொடங்கியது. ஒரு பத்தாண்டுகளுக்குப் பின் காந்தி என்றொரு மனிதன் இந்திய அரசியலில் தோன்றினான்.

அவன் இந்த மத அடிப்படையிலான தேசக் கற்பிதத்தை இயன்ற வரையில் எல்லோருக்குமான தேசியம் என்பதாகக் கட்டமைக்க உயிரைக் கொடுத்துப் போராடினான். ஆமாம் உயிரைக் கொடுத்துத்தான் போராடினான். அவனும் போனான். அடுத்த சில மாதங்களில் பாபர் மசூதிக்குள் இராமர் சிலைகள் வைக்கப்பட்டன. வட மாநிலங்களில் பசுவதைத் தடைச்சட்டங்கள் இயற்றப்பட்டன. இந்தியாவிற்குள் முஸ்லிம்களை விலக்கிய தேசியம் ஒன்று வேகமாக வளர்ந்தது.

3. தமிழகம் தொன்மை வாய்ந்த ஒரு வரலாறு மற்றும் பண்பாட்டுப் பின்னணி கொண்ட ஒரு நாடு. இனக்குழுச் சமூகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு விவசாயமயமாக்கம், முதற்கட்ட அரசுருவாக்கம் எல்லாம் உருவாக்கப்பட்டபோதுதான் மொழி உணர்வு, நில எல்லை குறித்த உணர்வு எல்லாம் உருவாகின்றன. மொழியையும் நில எல்லையையும் இணைத்துப் பேசும், “வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல் உலகத்து” என்கிற தொல்காப்பியப் பாயிரம் இந்தச் சூழலின் வெளிப்பாடுதான்.

இந்த மொழி — எல்லை உணர்வு தேசிய இன உணர்வின் ஒரு தொன்ம மாதிரி. “துடியன், பாணன், கடம்பன், பறையன் என இந் நான்கல்லது குடியும் இலவே” (புறநானூறு 335: 7—8) என்கிறது ஒரு புறநானூற்றுப் பாடல். இவ்வகையில், பல்வேறு இனக் குழுக்களின் தனித்துவங்கள், தலமொழி, பண்பாட்டு வேறுபாடுகள் எல்லாவற்றையும் உள்ளிணைத்த ‘தமிழ் கூறும் நல்லுலகம்‘ எனும் ஒரு கருத்தாக்கம் இங்கு மேலெழுகிறது.

எனினும் அப்போது கூட ஒற்றை அரசு என்கிற ஒருங்கிணைப்பு முன் வைக்கப்படவில்லை என்பதற்கு “தமிழ்கெழு மூவர்” (அகம் 31:14) என்கிற கூற்று சான்றாகிறது.

தமிழ்நாட்டின் `தனித்தன்மையைக் காட்டும் திராவிட ஆட்சி சாதனைகள்`

அடுத்த 2500 ஆண்டுகளில் இங்கு என்னென்னவோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. புதிய படை எடுப்புகள், புதிய சிந்தனைகள், மதங்கள், அரசுகள், குடியேற்றங்கள் என என்னென்னவோ நடந்துவிட்டன. தமிழக மன்னர்களும் படை எடுத்துச் சென்று நாடுகளைக் கைப்பற்றினார்கள், தமிழகத்தின் மீதும் படை எடுப்புகள் நடந்தன.

தமிழர்கள் இன்று இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிஷியஸ் எனப் பல நாடுகளில் பாரம்பரியமாக வாழ்கின்றனர். தமிழகத்திற்குள்ளும் பலர் வந்து குடியேறித் தம் வேர்களை மறந்து, மொழியையும், மண்ணையும், அவற்றுக்குரிய அடையாளங்களையும் கைவிட்டு வாழ்கின்றனர்.

இன்று தமிழகத்தில் சுமார் 30 சதவீதம் இப்படியான மொழிச் சிறுபான்மையர் வாழ்கின்றனர். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, வாக்ரிபோலி இப்படிப் பல மொழிகள் பேசுபவர்கள் இவர்கள். இவர்களுள் நில உடமையாளர்களும் உண்டு. நரிக்குறவர் போன்ற நாடோடிகளும் உண்டு. ஒட்டர்கள் போன்ற மண்வெட்டிக் கூலி தின்னும் மக்களும் உண்டு. மலம் அள்ள நிர்ப்பந்திக்கப்பட்ட அருந்ததியர்களும் உண்டு. முஸ்லிம்கள் உண்டு. கிறிஸ்தவர்கள் உண்டு.

திராவிட மொழி குடும்பத்திலேயே பழமை வாய்ந்த ‘தமிழ்’ மொழி: ஆய்வு சொல்லும் உண்மை என்ன ?

‘திராவிட இயக்கங்களின் வரலாற்றுத் தேவை முடியவில்லை’

இந்தப் பின்னணியில்தான் இங்கு பிரிட்டிஷ் ஆட்சி, சுதந்திர இந்தியா, மொழிவாரி மாநிலம் அதை ஒட்டிய போராட்டங்கள் எல்லாம் நடந்தேறின.

இன்று தமிழ்த் தேசியம் இங்கு வரையறுக்கப் படுவதில் இந்தச் சமகால வரலாறு முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக 19, 20ம் நூற்றாண்டு அரசியல் போக்குகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்தப் பின்னணியில் உருவான தமிழ் தேசியத்தை நாம் இரண்டாகப் பிரித்து அணுகலாம். அவை:

அ. திராவிட இயக்கம் முன்னெடுத்த தமிழ்த் தேசியம், ஆ. ம.பொ.சி வழிவந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்வைக்கும் தமிழ்த் தேசியம்.

அ. திராவிட இயக்கம் முன்னெடுத்த தமிழ்த் தேசியம்

தமிழ்நாட்டில் 30 சதவீதம் மொழிச் சிறுபான்மையர் உள்ளனர்; ஒ 12 சதவீதம் மதச் சிறுபான்மையர் உள்ளனர்; 18 சத வீதம் பட்டியல் சாதியினர் உள்ளனர். இவர்கள் யாரையும் ஒதுக்கிவிடாமல் உள்ளடக்கியது திராவிட தேசியம். இரண்டரை சதவீத அளவு உள்ள பார்ப்பனர்களைத்தான் அது வெளியில் நிறுத்தியது.

திராவிட இயக்கத்தின் முன்னோடியான நீதிக் கட்சிக்கும், பெரியார் முன்வைத்த திராவிடக் கருத்தாக்கத்துக்கும் சில முக்கிய வேறுபாடுகள் உண்டு. நீதிக் கட்சியினர் பார்ப்பனர்களின் சமூக மேலாண்மையை மட்டுமே எதிர்த்தார்கள்.




பிரிட்டிஷ் ஆட்சியின் ஊடாக உருவான கல்வி வளர்ச்சி, அரசியல் நிர்வாகம், பதவிகள் ஆகிய எல்லாவற்றையும் அளவில் மிக மிகக் குறைவான பார்ப்பனர்களே கைப்பற்றிக் கொள்கிறார்களே என்கிற அடிப்படையிலேயே நீதிக்கட்சியின் அரசியல் இருந்தது.

ஆனால் பெரியார் இந்தச் சமூக மேலாண்மையோடு பார்ப்பனர்களின் சடங்கு மேலாண்மையையும் கேள்விக்குட்படுத்தினார். பிறப்பு முதல் இறப்பு வறையிலான அனைத்துச் சடங்குகளிலும் அவர்களுக்கு இருந்த பூசாரி நிலையையும் ஒழிக்க வேண்டும் என்றார்.

இந்து மதம், கடவுள் மறுப்பு ஆகியவை குறித்த கடும் விமர்சனங்களையும் இந்தப் பின்னணியிலிருந்தே முன் வைத்தார். சுயமரியதைத் திருமணம் போன்ற மாற்றுக்களையும் அவர் இதனூடாகவே நடைமுறைக்குக் கொண்டுவந்தார்.

அப்போது கூட அவர்கள் மீது வன்முறையையோ, அவர்களை முற்றாக ஒதுக்க வேண்டும் என்றோ, அவர்களை வெளியேற்ற வேண்டும் என்றோ, பெரியாரோ, வேறு எந்த திராவிட இயக்கத்தினரோ சொன்னதே இல்லை.

'50 ஆண்டுகளில் மாயமான திராவிட லட்சியங்கள்'

பார்ப்பனர்களுக்கும் கூட அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப 2 சத ஒதுக்கீடு கொடுத்துவிடலாம், வரலாறு பூராவும் இருந்ததுபோல அனைத்துப் பதவிகளையும் அவர்களே ஆக்ரமிப்பது என்பதற்குத்தான் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றுதான் பெரியார் சொன்னார். சரியாகச் சொல்வதானால் அவர் பார்ப்பன ஆதிக்கத்தைத்தான் எதிர்த்தார். பார்ப்பனரை எதிர்க்கவில்லை. பின்னால் வந்த திமுகவோ இந்த பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பையும் கைவிட்டது.

மொத்தத்தில் திராவிட தேசியம் என்பது தமிழர்கள் எல்லோரையும் உள்ளடக்குவதாக இருந்தது. எல்லாவகைச் சிறுபான்மை மக்களுடனும் அது மிகவும் நெருக்கமாக இருந்தது. தாழ்த்தப்பட்டவர்கள் தீண்டாமையிலிருந்து விடுபட அவர்கள் இஸ்லாத்துக்கு மாற வேண்டும் என்றார் பெரியார். திராவிட சமயமும் இஸ்லாமும் ஒன்று என்றார்.

அண்ணாவோ தனது 'ஆரிய மாயை' நூலில் "முஸ்லிம்கள் திராவிட இனம்" என்றதோடு ஆரியத்திற்கெதிரான "திராவிட —இஸ்லாமிய கூட்டுப்படை" என்றெல்லாம் முழங்கினார். எனினும் தமிழகத்தை விட்டு ஆரியர்களை (அதாவது பார்ப்பனர்களை) வெளியேற்றுவது தம் நோக்கம் அல்ல என்றார். "திராவிடநாட்டிலிருந்து ஆரியரை ஓட்டுவதல்ல, ஆரிய பயத்தை ஓட்டுவதுதான் எங்கள் நோக்கம்" என்றார்.

மொத்தத்தில் எல்லோரையும் உள்ளடக்கியதற்குப் பெரியார் வழி வந்த திராவிட இயக்கத்தினர் ஓர் எடுத்துக்காட்டாக இருந்தனர்.

திராவிட தேசியத்தின் இன்னும் இரண்டு அடிப்படைகளையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். திராவிடப் பிரிவினை பேசியபோதெல்லாம் பெரியார் கேரளம், கன்னடம், ஆந்திரம் ஆகியவற்றை உள்ளடக்கிப் பேசினார் என்பதில்லை. இதை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

பெரியாரின் நோக்கம் பார்ப்பன ஆதிக்கத்தை அரசியல், அரசுப் பணிகள், அன்றாட வாழ்விற்குரிய சடங்குகள் ஆகியவற்றில் ஒழிப்பதுதான். அதற்குத் தடையாக இருப்பது இந்தியக் கூட்டாட்சி. இந்தக்

கூட்டாட்சிக்குள் இருக்கும் வரை பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிப்பது சாத்தியமில்லை.

எனவேதான் கூட்டாட்சியிலிருந்து பிரிய வேண்டும் எனக் கோருவதாக வெளிப்படையாகச் சொன்னார். சென்னை மாகாணம் தனித்தனி மாநிலங்களாகப் பிரிந்த பின்னர் அவர் தமிழ்நாடு பிரிவினையத்தான் பேசினார். அதை வெளிப்படையாகவும் சொன்னர்.1956 ஆகஸ்ட் 29 விடுதலை இதழில் இதை அவர் எழுதவும் செய்தார். 1938 தொடங்கியே பெரியார் 'திராவிடமே தமிழ்', 'தமிழே திராவிடம்' என எழுதியும் பேசியும் வந்ததும் இங்கே குறிப்பிடத் தக்கது (விடுதலை, செப் 11, 1938).

இருந்தும் அரசியல் சொல்லாடல்களில் அவர் ஏன் தொடர்ந்து திராவிடநாடு எனச் சொல்லி வந்தார். அதற்கும் அவர் ஒரு விளக்கத்தைச் சொன்னார். தமிழன் என்று சொன்னால் பார்ப்பானும் வந்து ஒட்டிக் கொள்வானே, அதனால்தான் திராவிடன் எனச் சொல்ல வேண்டியதாகிறது என்றார்.

வாழும்போது எதிர்ப்புகளை எப்படி எதிர்கொண்டார் பெரியார்?

யார் இந்தப் பெரியார்: அவர் விட்டுச் சென்ற செல்வம் என்ன?

சுருக்கமாகச் சொல்வதானால் திராவிட இயக்கங்கள் பார்ப்பன ஆதிக்கம் ஒழிக்கப்பட்ட எல்லோரையும் உள்ளடக்கிய ஒரு தமிழ்த் தேசியத்தை முன் வைத்தன.

ஆ. ம.பொ.சி வழிவந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்வைக்கும் தமிழ்த் தேசியம்

ம.பொ.சி எனப்பட்ட ம.பொ. சிவஞானம் இங்குள்ள மொழிச் சிறுபான்மையரை வெளியே நிறுத்த என ஒன்றை முன்வைத்தார். பதிலாக அவர் பார்ப்பனர்களை உள்ளடக்கினார். இந்து என்கிற அடையாளத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்தார்.

தமிழுணர்வு என்பது நாலரை கோடி தமிழ் மக்களுடன் மட்டுமே தன்னை இணைக்கிறது எனவும் இந்து என்கிற அடையாளம் தன்னை ஐம்பது கோடி மக்களுடன் இணைக்கிறது எனவும் காஞ்சி சங்கராசாரியார் ஏற்பாடு செய்த உலக இந்து மாநாட்டில் அவர் முழங்கியது குறிப்பிடத் தக்கது (மார்ச் 3,1976). மதச் சிறுபான்மையைப் பற்றி அவர் ஒன்றும் பேசவில்லையாயினும் அவரது பார்ப்பனீய ஆதரவு, இந்து மத அடையாளத்திற்கான அழுத்தம் என்பன இயல்பாகவே மதச் சிறுபான்மையினரை ஒதுக்கின.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன் இந்த இரண்டாவது போக்கு இன்னொரு பரிமாணம் எடுத்தது. பெங்களூரு குணா என்பவர் 'திராவிடத்தால் வீழ்ந்தோம்' என்றொரு புத்தகம் எழுதினார். அப்பட்டமான வரலாற்றுப் புரட்டல்களுடன் கூடிய அந்தநூல் பார்ப்பனீயத்தை உயர்த்திப் பிடித்த கொடுமையான மன்னர் ஆட்சிகளை எல்லாம் பொற்காலம் என்றது.

இங்குள்ள மொழிச் சிறுபான்மையினர்தான் தமிழ் மக்களின் வீழ்ச்சிக்குக் காரணம் என்கிற ஓர் அப்பட்டமான பொய்யை முன்வைத்தது. அவர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கக் கூடாது என்றெல்லாம் வெறுப்பைக் கக்கியது.

பெரியார், அண்ணா பெயர்கள் மீண்டும் ஓங்கி ஒலிப்பதற்குக் காரணம் என்ன?

வெறும் இரண்டரை சதமாக இருந்து கொண்டு பல மடங்கு அதிகமான அரசுப் பணிகளை எல்லாம் ஆக்ரமித்துக் கொண்டிருந்த பார்ப்பனர்களையும் பிற உயர்சாதியினரின் ஆதிக்கத்தையும் அது விமர்சிக்கவே இல்லை. ஏனென்றால் அவர்கள்தான் உண்மையான தமிழர்களாம்.

இவர்கள் இலக்காக்கித் தாக்கியதெல்லாம் இந்த 30 சதம் அளவு உள்ள மொழிச் சிறுபான்மையினரைத்தான்.

சரி, யார் அந்த மொழிச் சிறுபான்மையினர்? தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலான மொழிகளைப் பேசுகிற சாதியினர்; உருது மொழி பேசும் முஸ்லிம்கள்; மார்வாரிகள் முதலானோரைத்தான் அவர்கள் தமிழர்களின் வீழ்ச்சிக்குக் காரணமான மொழிச் சிறுபான்மையினர் என்கின்றனர்..

இதில் ஒரு சிறு பகுதியாக உள்ள மார்வாரிகள் தவிர மற்றவர்கள் அவ்வளவு பேரும் தமிழகத்தையே பல காலமாகத் தாயகமாகக் கொண்டு இங்கு வாழ்ந்து வருகிற சாதாரண மக்கள். இவர்களில் பெரும்பாலோர் இப்போது தமிழையே தாய்மொழியாகக் கொண்டு, தங்கள் பிள்ளைகளைத் தமிழிலேயே படிக்க வைத்து வாழ்ந்து வருபவர்கள். அவர்களைத் திருப்பி அனுப்புவது என்றால் எங்கே போவார்கள்? நமது பண்பாட்டை ஏற்றுக் கொண்டு, நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அம்மக்களில் பெரும்பாலோர் கூலிகளாகவும், சாதாரண பணிகளிலும் இருப்போர்.

பிற தமிழ்ச் சாதிகளாக இவர்களால் அடையாளம் காட்டப்படுகிறவர்களைப் போலவே பொருளாதார நிலை உடையவர்கள். இந்த மொழிச் சிறுபான்மையினரை வெளியே துரத்தாவிட்டாலும் அவர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக்க வேண்டும், இட ஒதுக்கீடு போன்ற பலன்கள் இவர்களுக்குச் சென்று சேரக் கூடாது என்கிறார்கள்.

இங்கே நம்மோடு வாழ்ந்து நமது மலத்தை அள்ளி, இங்குள்ள சாக்கடைகளைச் சுத்தம் செய்து வாழ நேர்ந்த நம் அருந்ததியர் இனச் சகோதரர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கக் கூடாதென இவர்களின் ஆசான் குணா வெளிப்படையாகச் சொன்னார்.

அது மட்டுமல்ல தலித் மக்களின் விடுதலைக்காக முன்னின்று, உலக அளவில் போற்றப்படும் அண்ணல் அம்பேத்கருக்கு இங்கு ஊரெங்கும் சிலைகள் திறக்கப்படுவதை "அம்பேத்கராம் மராட்டியருக்கு" இங்கு சிலைகளை வைத்து சாதிச் சண்டைகளை ஏன் தூண்டவேண்டும் எனக் கேட்டவர்கள் இவர்கள்.




மார்வாரிகளிலும் கூட எல்லோரும் பெரிய வணிகர்களாக இருப்பதில்லை. அவர்களிலும் எளிய மக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். எனக்குத் தெரிந்து என்னுடைய நண்பர் ஒருவர் பி.எஸ்.என்.எல்.லில் வேலை செய்கிறார். அடித்தளச் சாதியைச் சேர்ந்தவர். அவர் மனைவி ஒரு மார்வாரி இனத்தைச் சேர்ந்தவர்.

கூலிகளாகவும் வணிகர்களாகவும் சென்று இலங்கை, மலேசியா, மொரிஷியஸ், சிங்கப்பூர் முதலான நாடுகளில் வசிக்கும் தமிழர்களை எல்லாம் அந்தந்த நாடுகள் திருப்பி அனுப்புவது என்பதை நாம் ஏற்றுக் கொள்வோமா? கி.ராஜநாராயணன் இப்படி ஒரு வந்தேறிதான். ஆனால் அவர் தமிழின் ஆக முக்கியமான எழுத்தாளர். நவீன தமிழுக்கு வளம் சேர்த்தவர். கரிசல் மண்ணில் புழங்கப்படும் தனித்துவமான தமிழ்ச் சொற்களுக்கு 'அகராதி' உருவாக்கிய தமிழறிஞர் அவர்.

அவருடைய மூதாதையர் எத்தனையோ தலைமுறைக்கு முன்னதாக இங்கு வந்தவர்கள். அவரை இன்று திருப்பி அனுப்புவது அல்லது அவரது குடும்பத்தாரை இரண்டாம் தர மக்களாக, உரிமையற்றவர்களாக நடத்துவது என்றால்... அத்தனை கொடூரமானவர்களா தமிழர்கள்?

தமிழ்நாட்டின் `தனித்தன்மையைக் காட்டும் திராவிட ஆட்சி சாதனைகள்`

இங்கு வாழும் பிற மொழியினர் எல்லோரும் தமிழகத்தைச் சுரண்டி வளம் கொழிப்பவர்கள் அல்ல. இவர்களால் ஒரிஜினல் தமிழர்கள் எனச் சொல்கிற எல்லோரும் இங்கு கூலி வேலை செய்து துன்புறுபவர்களும் அல்லர். எல்லா மக்களிலும் பணக்காரர்களும் உள்ளனர், ஏழை எளியோரும் உள்ளனர். குடந்தை, மதுரை போன்ற இடங்களில் சௌராஷ்டிரர்கள் உள்ளனர்.

மிகவும் அடித்தள நெசவாளிகள் அவர்கள். ஆம்பூர், வாணியம்பாடி முதலான பகுதிகளில் வசிக்கும் உருது முஸ்லிம்கள் எல்லோரும் தோல் தொழிற்சாலைகள் வைத்திருப்பவர்கள் அல்ல. தோல் தொழிற்சாலைகளில் பெரிய பதவிகளில் பெரும்பாலும் உயர்சாதி இந்துக்கள்தான் உள்ளனர்.

தோலைச் சுரண்டித் தூய்மைப்படுத்துவது முதலான, தூய்மைக் குறைவான வேலைகளில் எவ்வளவோ உருது பேசும் முஸ்லிம்கள் பணியில் உள்ளனர். இவர்களை எல்லாம் உருது பேசுபவர்கள் என்பதற்காகவே இரண்டாம் தரக் குடிமக்களாக ஆக்குதல் நியாயமா?

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். இப்படி மொழிவாரி தேசியம் பேசும் ம.பொ.சி, குணா, சீமான், மணியரசன் போன்றோர் தமிழ்நாட்டில் தற்போது வாழ்கிற மக்களில் இப்படியான "தமிழர்கள் அல்லாதவர்களை" அடையாளம் காண என்ன வழியைக் கையாள்கிறார்கள்?

சாதி அடிப்படையில் அவர்கள் ஒரிஜினல் தமிழர்களை இனம் காண்கிறார்களாம். எந்தச் சாதி முறை, தீண்டாமை ஆகியவற்றை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று நாம் நினைக்கிறோமோ அந்தச் சாதிமுறையை இவர்கள் இந்த நோக்கில் தூக்கிப் பிடிக்கிறார்கள்.

உன் சாதியைச் சொல் நீ தமிழனா, இல்லையா எனச் சொல்கிறேன் என்கிறார் சீமான். நீ ஒரு அருந்ததியன், சௌராஷ்டிர நெசவாளி, உருது பேசும் முஸ்லிம், என்றால் தமிழன் இல்லை. வீட்டில் தமிழ் மட்டுமே பேசினாலும் சாதியில் நீ நாயக்கராக இருந்தால் நீயும் தமிழன் இல்லை., மண்வெட்டிக் கூலி தின்னும் ஒட்டர்களாக இருந்தால் அவர்களும் தமிழர்கள் இல்லையாம். அவர்கள் எத்தனை ஏழைகளாக இருந்தாலும் அவர்களுக்கு இட ஒதுக்கீடு, இலவசக் கல்வி முதலியன கூடாதாம்.

மக்களை இப்படிச் சாதி அடிப்படையில் கூறு போடும் இவர்கள் மிகப் பெரிய வரலாற்றுப் புரட்டர்களாகவும் உள்ளனர். தமிழர்களின் பெருமிதம் எனச் சொல்லி இவர்கள் கொண்டாடுவது எல்லாம் காலங் காலமாகச் சாதிமுறையையும் பார்ப்பனீயத்தையும் முன்னிறுத்திய பழங்கால மன்னர்களைத்தான். இங்கு கொடுமையான நில உடைமை முறைகள், சமஸ்கிருதக் கல்வி, தேவதாசி முறை ஆகியவற்றை எல்லாம் புகுத்திய ராஜராஜ சோழன்தான் இவர்களின் திரு உரு. கொடும் ஏற்றத் தாழ்வுகளும், சாதிமுறையும், தீண்டாமையும் தலைவிரித்தாடிய சோழர் காலம் அவர்களைப் பொருத்த மட்டில் பொற்காலம்.

கூர்ந்து பார்த்தால் இவர்கள் தமிழுக்கும் உண்மையானவர்களாக இல்லை என்பது புலப்படும். எண்ணாயிரம் என்கிற இடத்தில் சோழர் காலத்தில் இருந்த கல்வி நிலையம் குறித்து எல்லோரும் பீற்றிக் கொள்வார்கள். அங்கு சொல்லிக் கொடுக்கப்பட்ட பாடத் திட்டம் எல்லாம் முழுக்க முழுக்க சமஸ்கிருதமாகவே இருந்தது.

தலித்துகளுக்கு நன்மை செய்தனவா திராவிட ஆட்சிகள்?

இவர்கள் இப்படி மொழி அடிப்படையில் தமிழர்களைக் கூறுபோடுவது ஒரு பக்கம் என்றால், இன்னொரு பக்கம் மத அடிப்படையிலும் இவர்கள் தமிழர்களைப் பிரித்து நிறுத்துகிறார்கள்.

பார்ப்பனீய ஒதுக்கல்களுக்கும், வருண சாதி ஏற்றத் தாழ்வுகளுக்கும் எதிரக மலர்ந்த சீர்திருத்த மதங்களான பௌத்தம், சமணம் ஆகியவற்றை இவர்கள் வட இந்திய மதங்கள் எனப் புறந் தள்ளுகின்றனர். அதன் மூலம் வருண சாதி அமைப்பை வலியுறுத்திய சனாதனப் பார்ப்பன மதத்தையே இவர்கள் தமிழர்களின் மதமாக முன் வைக்கிறார்கள். பார்ப்பனீயமும் வடநாட்டிலிருந்து இங்கு வந்ததுதான் என்பதைப் பற்றி இவர்கள் இம்மியும் கவலைப்படுவதில்லை.

`தலித்துகளை விலக்கி வைத்த திராவிட அரசியல்`

‘திராவிட இயக்கங்களின் வரலாற்றுத் தேவை முடியவில்லை’

இவர்களின் இந்தக் கணக்குப்படி இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியனவும் அந்நிய மதங்கள்தான். ஆனால் தமிழின் சிகரங்களாக உள்ள ஐம்பெரும் காப்பியங்கள் எனச் சொல்லப்படுபவையும், கிட்டத்தட்ட எல்லாத் தமிழ் இலக்கண நூல்களும் இவர்களால் வட இந்திய மதங்கள் எனச் சொல்லப்படக் கூடிய பௌத்த, சமணப் புலவர்களால் உருவாக்கப்பட்டவைதான். கிறிஸ்தவம் இங்கு அச்சைக் கொண்டு வந்தது. நம் மக்களுக்குக் கல்வியைத் தந்தது. முஸ்லிம்கள் தமிழுக்கு ஆற்றிய பங்களிப்புகள் குறித்து மதுரைப் பல்கலைக் கழகம் ஐந்து தொகுதிகளாக நூல்கள் வெளியிட்டுள்ளது.

இந்து மதம் தொன்மையான மதம் என்பது உண்மைதான். இஸ்லாம் ஆயிரத்தும் மேற்பட்ட ஆண்டுகளாக இங்கு நம்மோடு வாழும் மதம். கிறிஸ்தவம் ஐநூறு ஆண்டுகளாகத் தமிழிலிருந்தும் தமிழர்களிடத்திலிருந்தும் பிரிக்க இயலாமல் ஒன்று கலந்த மதம். இன்று தமிழகத்தில் தடம் இல்லாமற் போனாலும் பௌத்தம் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையும் செழித்திருந்த மண் இது.

இன்று தமிழ் பவுத்தம் என்றொரு ஆய்வுத்துறையே உருவாகியுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக சாதி மற்றும் தீண்டாமை ஒழிப்பின் குறியீடாக அண்ணல் அம்பேத்கரால் முன்மொழியப்பட்ட மதம் அது.

இத்தனையையும் ஒதுக்க வேண்டும் என்றால் இது தேசியமா இல்லை பாசிசமா?

பெரியாரை இவர்கள் ஏன் கரித்துக் கொட்டுகிறார்கள்? இவர்களால் கொண்டாடப்படும் பார்ப்பனீயத்திற்கு உறுதியான எதிரியாக அவர் இருந்தார் என்பதுதான் அவர்களின் எரிச்சல்.

இவர்கள் பேசுவது மக்களைச் சாதி, மதங்களுக்கு அப்பால் ஒன்றிணைக்கும் தமிழ்த் தேசியம் அல்ல. மாறாக மக்களைச் சாதி, மத அடிப்படையில் கூறு போடும் தமிழ்ப் பாசிசம்.


# புத்தக விமர்சனம்

## தமிழக நதிகளின் பின்னே...

**ஆசிரியர் : சி. மகேந்திரன்**

*(கட்டுரை தொகுப்பு)*

**விலை : ரூ. 15**




**வெளியீடு:**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்**

**பதிப்பகம்**

நீரின்றி அமையாது உலகு!' என்று உலகுக்கு பறைசாற்றியது தமிழரின் பெருமை! ஆனால் அதே தமிழ் நிலத்தில் இன்று நீரோடும் ஆறுகளுக்கு நிகழும் அவலங்கள் சொல்லி மாளாது! இந்நூலாசிரியர் சிறந்த சமூகப் போராளி என்பதால், ஆறோடும் மண்ணில் நிகழும் அவலங்களைப் பற்றி இந்நூலில் துல்லியமாகப் பேசுகிறார். தமிழகத்து நதிகளின் பின்புலம், அவற்றில் அணைக்கட்டுகள் கட்டப்பட்டு பாசனம் உருவான போக்கு,நதிநீர் இன்று தொழிற்சாலைகளால் மாசுபடுத்தப்படுவது,மணல் கொள்ளையடிக்கப்படுவது, இதனால் ஏற்படவிருக்கும் அபாயங்கள் ஆகியனவற்றைப் பற்றிப் பேசுவது இந்த நூல்.

சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை ஆற்றில் கலக்கிறது. இதனால் தண்ணீரில் நச்சுத் தன்மை ஏற்பட்டு விளைநிலங்கள் பாதிக்கப்படுகின்றன. பொது மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். கழிவுநீர் தண்ணீரில் நச்சுத்தன்மை உள்ளது தெரியவந்தது. இது, ஒரு மாநில மக்களையே ஸ்லோ பாய்சன் எனும் வகையில் மெள்ளக் கொல்லும் கொடிய குற்றச் செயல். இதை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாதுதான். ஒகேனக்கலுக்கு கீழே வந்துவிட்டால் கிட்டத்தட்ட பதினோரு மாவட்டங்களில் பாய்ந்தோடிக் கொண்டிருக்கும் காவிரி கரை நெடுக இருக்கும் எண்ணற்ற தொழிற்சாலைகள் கழிவுநீரைக் கலந்துவிட்டுக் கொண்டிருக்கின்றனவே.

தமிழக நதிகளுக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலைக்கு மூலகாரணமாக அமைந்துள்ள அரசியல், பொருளாதார சிக்கல்களை பேசுகிறது இந்நூல்.




செல்வராஜ் ஜகதீசன்

“**நம்**பிக்கையில்லேன்னா இதுங்கெல்லாம் ஏன் இங்க வருதுங்க?”

மூர்த்தி அந்தக் கட்டிடத்தின் உள்ளே நுழையும்போது, யாரோ யாரையோ சொல்லிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது. மூன்று நான்கு குடும்பங்கள் ஏற்கெனவே காத்திருந்தார்கள். வரிசையில் அடுத்திருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். என்ன ஏதென்று விசாரித்தார். கொஞ்சம் முன்னால் வந்து போன ஒருவன் இடக்கு மடக்காகக் குறுக்குக் கேள்விகள் கேட்டதால் பிரச்சினை என்று தெரிய வந்தது. அப்படி என்ன பிரச்சினைக்குரிய கேள்விகளை அவன் கேட்டிருப்பான் என்று தெரியவில்லை. எது எப்படியோ எல்லாவற்றுக்கும் அடிப்படை ஒரு நம்பிக்கைதானே.

மூர்த்திக்கும் நம்பிக்கை கொஞ்சம்தான் இருந்தது. மூர்த்தியின் மனைவி சுமதிக்கோ கொஞ்சமும் நம்பிக்கை இல்லை. நம்பிக்கையை விட பயம். வரமாட்டேன் என்று சொல்லி விட்டாள். முப்பது வருடத் தாம்பத்யத்தில் மூர்த்தி சுமதியிடம் சொல்லாததே இல்லை. மாலதி விஷயம் உட்பட. இத்தனை வருடங்களுக்கு பிறகும் எல்லாவற்றையும் நினைவில் வைத்திருக்கிறாள்.

மூர்த்தியும் கூட அங்கு வருவதாய் இல்லை. திருப்பித் திருப்பி கண்ணன் சொன்னதுதான் அவரை இங்கு வர வைத்திருக்கிறது.

கண்ணன் மூர்த்தியின் நெருங்கிய நண்பர். கண்ணன் குறித்து வந்திருந்தவர் சொன்ன நிறைய விஷயங்கள் மூர்த்திக்கு தெரியுமாதலால் அவருக்குமே போய்ப் பார்த்தாலென்ன என்று தோன்றியது.

அபுதாபியின் பனிக்காலம் ஒன்றில், ஆபீஸில் எல்லோரும் போய்விட்ட இரவு நேரத்தில் மூர்த்தி மட்டும் அன்றைக்கே போயாக வேண்டிய கடிதங்களை ஒவ்வொன்றாக ஈமெயிலில் அனுப்பிக் கொண்டிருந்தார். அவர்களுடையது மேன் பவர் சோர்ஸிங் கம்பெனி. பெரிய பெரிய ஆயில் கம்பெனிகள் கேட்கும் வேலைக்கு ஆட்களை தேடித் தருவது அவர்களின் பணி. தேர்ந்தெடுத்து தரும் ஒவ்வொரு நபருக்கும் ஒரு கமிசன் தொகை ஆயில் கம்பெனி கொடுக்கும். கடைசி ஈமெயிலை அனுப்பிவிட்டு, நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தபோது அலைபேசி ஒலித்தது. கண்ணன்.

கண்ணனும் மூர்த்தியும் ஒரு காலம் வரை, ஒரே ப்ளாட்டில் தங்கள் வசிப்பை பகிர்ந்து கொண்டவர்கள். அந்த ஒரு காலம், கண்ணன் திருமணம் முடித்த கையோடு, மனைவியை அழைத்து வந்த போது, முடிவுக்கு வந்தது. தனியே ஒரு பிளாட் எடுத்து கண்ணன் போன பின்னும், வாரம் ஒரு முறையாவது போனில் பேசிக் கொள்வார்கள்.



அன்றைக்கு தொலைபேசியில் பேசிய கண்ணனின் குரலில், வழக்கத்தை விட சற்று படபடப்பு.

தொலைபேசியில் கண்ணன் சொன்ன விஷயம் இதுதான். முருகவேள் என்று ஒருவர் அபுதாபிக்கு வந்திருக்கிறார். அனுக்கிரகம் பெற்றவர். எதிரில் வந்து அமர்பவர் பற்றிய விவரங்கள், அவர்களின் பிரச்சனைகளையும் சேர்த்து, புட்டுப் புட்டு வைக்கிறார். கண்ணன் நேற்றே போய் பார்த்து விட்டு வந்தாயிற்று. மூர்த்தியும் கண்டிப்பாகப் போய்ப் பார்க்க வேண்டும்.

மூர்த்தி எதுவும் சொல்லாமல் இந்தப் பக்கம் 'ம்' 'ம்' என்று மட்டும் சொல்லிக் கொண்டு கேட்டுக்கொண்டிருந்தார். போய்ப் பார்க்கலாமா என்று ஒரு சின்ன சலனம் தோன்றியது.

அதை வெளிக் காட்டாமல், "எல்லாம் சரி, கண்ணன்.. எந்த அளவுக்கு அவர் சொல்றதை நம்பறது, கூட, இவ்வளவு தூரம் பயணப்பட்டு வந்து, இப்படியெல்லாம் சொல்லவேண்டிய அவசியம் என்ன? தட்சணையா எவ்வளோ வாங்கறார்? அதை சொல்லு முதல்ல" என்றார்.

"தட்சணைன்னு அவரா எதுவும் கேட்கறது இல்ல மூர்த்தி. வர்றவங்களா பார்த்து ஏதாவது குடுத்தா அதையும் கைநீட்டி வாங்கறதில்ல. எதிர்ல இருக்கற தட்டுல வச்சுட்டு போறாங்க"

"சரி கண்ணன். இதெல்லாம் வெறும் பம்மாத்துனு சொல்லிட்டிருப்ப நீ எப்படி அங்க போன?"

"சும்மா, பார்க்கலாம்னுதான் போனேன் மூர்த்தி, ஆனா, போய் எதிர்ல உட்கார்ந்த உடனே, ஊர்ல இப்ப நடந்துட்டுருக்கிற சொத்துத் தகராறு பத்தி அவர் சொன்னதுல அப்படியே ஆடிப் போயிட்டேன்"

மூர்த்திக்கு அந்த சொத்துத் தகராறு விஷயம் தெரியும். போன வாரம்தான் போனில் அதைப் பற்றி விரிவாகப் பேசியிருந்தார்கள்.

"சரி, போய்ப் பார்க்கிறேன். இன்னும் எத்தனை நாள் இருப்பாராம்" என்று அவர் தங்கியிருக்கிற இடம், பார்க்கும் நேரம் எல்லாவற்றையும் கேட்டுக்

குறித்துக் கொண்டார்.

மூர்த்திக்கு கேட்கவென்று இருக்கும் ஒரே விஷயம், மகள் கீதா. ஊரில் பொறியியல் படித்து முடித்தவளை அபுதாபிக்கு அழைத்து



வந்து, ஒரு தனியார் கம்பெனியில் வேலையில் சேர்த்திருந்தார். இரண்டு வருடங்களாக வேலைக்குப் போய்க்கொண்டிருக்கிறாள்.

ஆபிசிலிருந்து திரும்பிய அவரைப் பார்த்தவுடன், யாரோடோ அலைபேசியில் பேசிக்கொண்டிருந்தவள், குரலைச் சற்று தாழ்த்தி பேச ஆரம்பித்தாள். இயல்பாகவே அப்படி நடந்திருக்கும் என்று நினைத்துக்கொண்ட மூர்த்தி, உள் அறையில் இருந்த சுமதியை நோக்கிப் போனார். கண்ணன் சொன்ன விஷயங்களை எல்லாம் சொல்லி, “நாளைக்கு போய்ப் பார்க்கலாமா?” என்றார்.

“இன்னும் இதெல்லாம் விடலியா நீங்க? மாலதி மேட்டர்லாம் மறந்து போச்சா?”

சுமதி என்னவோ சாதாரணமாகத்தான் அதைச் சொன்னாள். மூர்த்திக்குத்தான் அதைக் கேட்டவுடன் இத்தனை வருஷங்கள் ஆன பின்னும் இன்னமும் அதையெல்லாம் ஞாபகம் வைத்திருப்பவளை பார்க்க முடியாமல், வேறு பக்கம் திரும்பி பழசையெல்லாம் யோசிக்க ஆரம்பித்தார்.

மாலதி மூர்த்திக்கு ஒரு வகையில் முறைப்பெண். உறவினர்கள் எல்லார் மத்தியிலும் அவர்கள் இருவரும் திருமணம் பண்ணிக் கொள்ளப் போகிறார்கள் என்ற அளவில் பேச்சுகள் அடிபட்டுக்கொண்டிருந்தது. அப்படியே தான் நடந்தும் இருக்கும்.

வேண்டுதல் என்று இருவர் குடும்பத்தாரும், அந்தச் சிதம்பரம் கோவில் பயணம் போகாமல் இருந்திருந்தால். வெறும் சுவாமி தரிசனத்தோடு திரும்பியிருந்தால் கூட எதுவும் நடந்திருக்காது.

கோயிலை ஒட்டியிருந்த ஓர் இடத்தில், நாடி ஜோசியம் பார்க்கலாம் என்று முதலில் அபிப்பிராயப் பட்டது மாலதிதான். மூர்த்தி இருந்த மனநிலையில் அவளுக்காக எதையும் செய்ய தயாராக இருந்தான்(ர்).

“இந்த இரண்டு பேருக்கும் மணவாழ்க்கை பொருந்தி வராது. வேறு வேறு நபருடன் என்றால் எந்தக் குறைவும் வராது”

நாடி இப்படி சொல்லும் என்று சற்றும் எதிர்பார்த்திராத மூர்த்தி, மாலதியின் முகத்தைப் பார்த்தார். அவளும் ஒன்றும் பெரிதாய் பாதிக்கப்பட்ட மாதிரி தெரியவில்லை.

வீடு திரும்பும் வரை மாலதியிடம் எந்த

மாற்றமும் தெரியவில்லை. வழக்கம்போலத் தான் இருந்தாள்.

அதற்குப் பிறகு நடந்ததெல்லாம், இப்போது நடந்தது போல, ஒவ்வொன்றாக நினைவில் வந்து போனது. மாலதிக்கு வேறு இடத்தில் அவசரம் அவசரமாக மாப்பிளை பார்த்து திருமணம் முடிந்து அமெரிக்கா பறந்து போனது, மூர்த்தி கொஞ்ச நாட்கள் வாழ்க்கை வெறுத்துப்போய் திரிந்து கொண்டிருந்தது, பின் குடும்ப சூழ்நிலை நிர்பந்திக்க ஏஜென்ட் ஒருவனுக்குப் பணம் கொடுத்து, அபுதாபி வந்தது, இரண்டு மூன்று வருடங்களில் சுமதியோடு நடந்த திருமணம், திருமண வயதை நெருங்கும் ஒரு மகளோடு தற்போதைய அபுதாபி வாசம் எல்லாம்.

மறுநாள் சாயந்திரம் "போலாமா" என்று கேட்ட மூர்த்தியிடம் "எனக்குத் தலை வலிக்கிறது, நீங்க போய்ட்டு வாங்க" என்றாள் சுமதி.

அவள் வந்திருக்கலாம் என்ற நினைப்போடு பழைய நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருந்த மூர்த்தியின் தோளில் விழுந்த கை, "போங்க" என்றது. எழுந்து உள்ளே போனார்.



அது ஓர் பூஜை அறை. மெல்லிய விளக்கொளி. நிறைய சுவாமி படங்கள் இருந்த மாடத்திற்குப் பக்கத்தில், தரையில் சம்மணமிட்டு அமர்ந்திருந்தார் அவர்.

கைகளை குவித்து "வணக்கம்" என்றபடி எதிரில் அமர்ந்தார் மூர்த்தி. கைகளை நீட்ட வேண்டுமா அவர் பார்க்க என்று நினைத்துக் கொண்டிருந்தவரிடம்,

"என்ன வீட்ல தலைவலின்னு சொல்லி வரலன்ட்டாங்களா" என்றார் அவர்.

மூர்த்தி நிலை தடுமாறிப் போனவராய், "ஆமாம்" என்றார். கேட்க வந்த விஷயம் நினைவுக்கு வராமல் மௌனமாய் இருந்தார்.

"நடக்க வேண்டிய கல்யாண காரியம் பத்தி எந்த கவலையும் வேண்டாம். எல்லாம் மனசு போல நடக்கும்" என்றது அவரின் அடுத்த வாக்கு.

அதற்கு மேல் கேட்க எதுவும் இல்லை மூர்த்தியிடம்.

மேல் பாக்கெட்டில் இருந்து கையில் வந்ததை, எதிரில் இருந்த தட்டில் வைத்து விட்டு, வெளியே வந்தார் மூர்த்தி.

# அறிவோம் தமிழர்

## பாரதிதாசன்: சில நினைவுகள்...

புதுச்சேரி பெருமாள் கோவில் தெருவில் இன்று பாரதிதாசன் நினைவு இல்லமாகவும் அருங்காட்சியகமாகவும் மாறி நிற்கிறது அந்த வீடு. ஐம்பதுகளில் ஒருநாள் முதல் முறையாக பாரதிதாசனைச் சந்திக்கும் ஆர்வத்தோடு வேலூரிலிருந்து புதுவைக்குப் புறப்பட்டுப் போனேன்.

மட்ட மத்தியான நேரம். தெருவை அடைந்தபோது ஆள் நடமாட்டம் அதிகமில்லை. ஒரு வீட்டின் முன் நின்றிருந்த மூதாட்டியை நெருங்கி, "இங்கே பாரதிதாசன் ஐயா வீடு எதுனு தெரியுமா?" என்றேன். "தம்பிஞ் யாருப்பா நீ?" என்று எதிர் வீட்டிலிருந்து கேட்டது ஒரு கம்பீரமான குரல். கையில் ஒரு புத்தகத்தை ஏந்தியபடி நின்றிருந்தவர், அவரேதான்! "நான்தான் பாரதிதாசன்ஞ் இப்ப என்ன வேணும் உனக்கு?" என்றார் குறும்பாக.

அதுதான் அவருடன் முதல் சந்திப்பு. "ஐயாஞ் வேலூரிலிருந்து வர்றேங்கஞ் என் ஆசான் கோவேந்தன் சொல்லி வந்திருக்கேன்" என்றதுமே பாரதிதாசன் முகம் அகன்று மகிழ்ச்சியில் விரிந்தது. "அடடேஞ் அப்ப நீ ரொம்ப வேண்டப்பட்ட பையன். உள்ளே வா" என்று அழைத்துப் போனவர், என்னைப் பேசக்கூட விடாமல், வீட்டில் இருந்தவர்களை அழைத்து எனக்கு விருந்தோம்ப வைத்துத் திணறடித்தார். இத்தனைக்கும் அப்போது நான் இருபதுகளில் இருந்த சின்னப் பையன்! தன் அருமை நண்பர் கோவேந்தனின் பெயரைச் சொன்னதுக்கே இப்படி ஒரு உபசரிப்பு தந்தார் பாரதிதாசன்.

## பேதங்கள் இல்லாத நட்பு

நான் எழுதிச் சென்றிருந்த கவிதைகளை வாங்கி அக்கறையாகப் படித்துவிட்டு, அதில் சில இலக்கணத் திருத்தங்களை எளிமையாகச் சொல்லிப் புரியவைத்தார். முதல் சந்திப்பின்போதே, தன்னுடைய 'தேனருவி' பாடல்கள் சிலவற்றை உரக்கப் பாடிக் காட்டி, அதில் உள்ள இசை இலக்கண நுட்பங்களை எடுத்துச் சொன்னார். பாரதிதாசனுக்கு நன்கு அறிமுகமான வேலூர் கலைமாமணி கோவிந்தசாமியுடன் அடுத்தடுத்த புதுவைப் பயணங்கள் அமைந்தன. ஒருநாள் வெகு சுவாரஸ்யமாக சில பகுத்தறிவுக் கருத்துக்களை பாரதிதாசன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது கோவிந்தசாமி, "ஐயாஞ் இவனுக்கு அதெல்லாம் புரியுமா? இவன்..." என்று சொல்ல, எனக்கு திக்கென்று ஆகிவிட்டது. பாவேந்தரோ இடி இடி என்று சிரிக்கிறார். "ஐயாஞ் கவிஞர் சுரதாகூட என்னை அப்படித்தான் கூப்பிடுவாருங்க. ஆனா, உங்களை மாதிரியே பிரியமா நடத்துவாருங்க" என்று தயங்கித் தயங்கிச் சொன்னேன். மறுபடி இடிச் சிரிப்பு!

"ஏம்பா இவனேஞ். அப்படிப் பார்த்தா என் குருவே அய்யர்தானேஞ் தமிழ் வளர்க்குறதுக்கு உடன்பட்டு யார் வந்தாலும் எனக்கு அவங்க வேண்டியவங்கதான். நீ எப்பவும்போல வந்து போயிக்கிட்டு இரு" என்றார்.

## நிறைவேறாமல்போன திரைக்கனவு

நெடுஞ்சாலைத் துறையில் வேலையில் இருந்துகொண்டே, கவிதை, நாடகம் என்று நான் எழுதிக்கொண்டிருப்பதை பாரதிதாசன் தொடர்ந்து உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார். அவருடைய பேச்சின்போதெல்லாம், திரைப்படத் துறை மீது அவருக்கிருந்த ஆர்வம் அடிக்கடி வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும். 'வளையாபதி', 'பொன்முடி' என்று அவருடைய பங்களிப்பில் படங்கள் உருவானாலும், தனது 'பாண்டியன் பரிசு' இலக்கியத்தைத் தானே படமாக்கிவிட வேண்டும் என்று பேராவல் கொண்டிருந்தார் பாரதிதாசன். சிவாஜி கணேசன் அதன் நாயகனாக நடிக்க ஒப்புக் கொண்டபோது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

புதுவையிலிருந்து சென்னை தி.நகருக்குக் குடிபெயர்ந்தார் பட வேலைகளுக்காக. 'பாண்டியன் பரிசு'க்காக எடுக்கப்பட்ட கம்பீரமான சிவாஜி கணேசனின் படம் அவர் வீட்டில் நுழையும்போதே சிரித்து அழைக்கும்.

சினிமா உலகம் எத்தனை சிக்கல்கள் நிறைந்தது என்பதைப் பாரதிதாசன் சீக்கிரமே புரிந்துகொண்டார். படம் உருவாக முடியாமல் பல

# பெருமை

**வேலூர் இரா.நக்கீரன்**

தடைகள் ஏற்பட்டு, அந்தக் கனவுத் திட்டம் நின்றே போனது. அப்போதும்கூட, “போகட்டும்யாஞ். என் குருநாதர் வரலாற்றைப் படமாக எடுக்கும்விதமாக முழுப் பிரதியும் எழுதிவிட்டேன். அதற்கு ஒரு வாய்ப்பு வந்தால் அதுவே போதும்” என்று சொல்லி மனதை ஆற்றிக்கொள்வார் அவர்.

அதுவும் கடைசிவரை நிறைவேறாமல் போனாலும், ‘ஆயிரம் கவிஞர்கள் இணையும் ஏடு’ என்ற அறிமுகத்துடன் அவர் தொடங்கிய ‘குயில்’ பத்திரிக்கை அவருக்குப் பெரும் ஆறுதலாகவும் தேறுதலாகவும் இருந்தது. இதழ்களை ஒழுங்குபடுத்துவது, பிழை திருத்துவது உள்ளிட்ட விஷயங்களை நேரம் கிடைக்கும்போதெல்லாம் சென்னைக்கு வந்து செய்வதற்கு அவர் என்னை அனுமதித்தார். அப்படியே நான் எழுதும் கவிதைகளையும் அன்புடன் பிரசுரிக்க உற்சாகம் கூட்டினார்.




## திசை எட்டும் சேர்ப்போம்!

ஒருநாள், ‘குயில்’ இதழுக்கு மொழிபெயர்ப்பு தொடர்பாக வந்திருந்த படைப்பு பற்றி பேச்சு வந்தது. “தெரியுமாய்யாஞ். என் படைப்பை ‘செக்’ மொழியில் ஒரு பேராசிரியர் மொழிபெயர்த்து இருக்காரு. குருநாதர் சொல்ற மாதிரி, இங்குள்ள நல்ல கவிதைகள் எல்லாமே வெளி மொழிகளுக்குப் போகணும்யா. இல்லாட்டி, நம்மூர்க்காரனே நம்ம அருமையைப் புரிஞ்சுக்காமத்தான் இருப்பான்” என்று சொன்னபோது அவர் குரலில் ஒரு வேதனை இழையோடியது.

1964—ம் வருடம், ஏப்ரல் மாதம் 21—ம் நாள்ஞ் உடல்நலக் குறைவால் சென்னைப் பொது மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அவர் இன்னுயிர் பிரிந்தது. புதுவையில் அதே பெருமாள் கோவில் தெரு இல்லத்துக்கு அவர் உடல் வந்து சேர்ந்தது. எப்போதும் அவரை அகலாமல் இருந்த ஒரு சிறு கூட்டம்தான் அவருடைய இறுதி ஊர்வலத்திலும் கண்ணீருடன் முன்னால் நடந்தது. பாப்பாம்மாகோவில் மயானத்தை அடைந்தபோது, அதிலும் பலர் பாதியிலேயே திரும்பிவிட்டதைக் கண்டு என் நெஞ்சு பதைத்தது.

இறுதி வரை இருந்த அன்பர் கூட்டம் இடுகாட்டிலேயே நினைவுக் கூட்டம் நடத்திவிட்டுக் கலைந்தபோதுஞ் அந்த மாபெரும் ஆத்மாவின் தன்மானத்தையும் தமிழ்க் காதலையும் வாய்ப்பு வரும்போதெல்லாம் ஊருக்குச் சொல்வோம் என்ற உறுதிமொழியுடன்தான் அந்தக் கூட்டம் கலைந்தது.




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# வந்தான் குண்டோதரன் 19

படைகளின் முழக்கத்தைக் கேட்டதும் சற்றுப் பின்னால் வந்துகொண்டிருந்த ஆயனரும் புத்த பிக்ஷுவும் வேகமாக நடந்து வண்டியை நெருங்கி வந்தார்கள். முன்னணிப் படை கண்ணுக்குத் தெரிந்ததும், வண்டி சாலையில் ஒதுக்குப் புறமாக நின்றது. சிவகாமியும் அத்தையும் வண்டியிலிருந்து இறங்கி நின்றுகொண்டார்கள். படை வரும் முழக்கம் அத்தையின் காதில் விழாதபடியால், மற்றவர்களைப் போல் அவளிடம் பரபரப்பு இல்லை.




புத்த பிக்ஷு சாலை ஓரத்து மரத்தின் பின்னால் தெரிந்தும் தெரியாததுமாக நின்றுகொண்டார். அவர் இராஜ வம்சத்தினரைக் கண்ணாலும் பார்ப்பதில்லை என்பது போன்ற விரதங்கள் கொண்டவர் என்பது தெரியுமாதலால் அவர் மறைந்து நிற்பது பற்றி மற்றவர்களுக்கு வியப்பு ஏற்படவில்லை.

ஆனால், எல்லோருக்கும் மனம் ஒருவாறு கலக்கமடைந்து தான் இருந்தது. வருகிறது என்ன படை? எங்கே போகிறது? எதற்காக? தெற்கே இருந்து வருகிறபடியால் அது வாதாபிப் படையல்ல என்பது நிச்சயம், பின்னே யாருடைய படை?

காஞ்சியிலிருந்து கிளம்பி வருகிற வழியில் நம் பிரயாணிகள் பெரும்பாலும் யுத்தப் போக்கைப்பற்றியும், யுத்த முடிவு என்ன ஆகும் என்பதைப்பற்றியும் பேசிக்கொண்டு வந்தார்கள். யுத்தத்தை நினைவூட்டும் காட்சிகளே எங்கெங்கும் தோன்றி வந்தன.

சாலையில் ஜனநடமாட்டம் அதிகமாயிருந்தது. எல்லோரும் தெற்கு நோக்கிப் போகிறவர்களாகவே இருந்தார்கள். அநேகமாக அவர்கள் அனைவரும் காஞ்சி நகரிலிருந்தும் காஞ்சிக்குச் சுற்றிலுமுள்ள கிராமங்களிலிருந்தும் யுத்த நிலைமையை முன்னிட்டுப் புறப்பட்டவர்கள். அப்படிப் புறப்பட்டு வந்தவர்களிலே ஸ்திரீகள், குழந்தைகள், வயோதிகர்கள், ஆண்டிப் பரதேசிகள், கூனர், குருடர், காபாலிகர் முதலியோர் அதிகமாகக் காணப்பட்டார்கள்.

முக்கியமாகக் காபாலிகர்கள் வழியெல்லாம் பல்லவ இராஜ குலத்தைச் சபித்துக் கொண்டுபோனார்கள்.காஞ்சிநகரில் கள்ளுக் கடைகளை மூடித் தங்களை நகரைவிட்டுத் துரத்திய குமார சக்கரவர்த்தியின் பேரில் அவர்கள் தங்களுடைய சாபங்களுக்குள்ளே மிகக் கடுமையான சாபங்களைப் பொழிந்து கொண்டு போனார்கள். நராதமர்களுக்குள்ளே அதமனான மாமல்ல நரசிம்மன் என்னும் சண்டாளனை ரணபத்திர காளிக்குப் பலி கொடுத்து, தாங்கள் மதுபானம் செய்யும் மாட்டுக் கொம்பிலே அவனுடைய இரத்தத்தை ஏந்திக் குடித்துத் தங்களுடைய பயங்கரமான மரண தாகத்தைத் தணித்துக் கொள்ளப் போவதாக அவர்களில் பலர் உரத்த சத்தம் போட்டுச் சபதம் செய்தார்கள். இன்னும் சிலர், மாமல்ல நரசிம்மனையும் தளபதி பரஞ்சோதியையும் சேர்த்துக் கட்டி மயான ருத்திரனுக்குப் பிரீதியாக உயிரோடு கொளுத்தி அவர்களுடைய எலும்புச் சாம்பலைத் தங்கள் உடம்பெல்லாம் பூசிக்கொண்டு உஷ்ணம் தணியப் போவதாகச் சபதம் செய்தார்கள். இந்தச் சாபங்கள், சபதங்கள் எல்லாம் பிராகிருத பாஷையிலும் வேறு கலப்பு மொழிகளிலும் செய்யப்பட்டதானது, அந்தக் காபாலிகர்கள் வடதேசத்திலிருந்தும் மேற்குப் பிராந்தியத்திலிருந்தும் வந்தவர்கள் என்பதைத் தெரியப்படுத்தியது.

சிவகாமிக்கு ஆங்காங்கு வண்டியில் பிரயாணம்




செய்தபடியாலும் அவளுடைய உள்ளம் வேறு வேறு உலகங்களில் சஞ்சரித்துக் கொண்டிருந்தபடியாலும், அவளுடைய காதில் அந்தப் பயங்கர சாபங்கள் ஒன்றும் விழவில்லை. ஆனால் ஆயனருடைய காதில் அவை எல்லாம் கர்ண கடூரமாக விழுந்தன. அவற்றைக் கேட்கச் சகிக்காமல் அவர் காதைப் பொத்திக் கொண்டார்.

புத்த பிக்ஷுவின் செவிகளுக்கு மட்டும் அந்தச் சாபங்கள் எவ்வித அருவருப்பையும் அளித்ததாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக, அவருடைய முகத்தின் கடூரத்தை இன்னும் கடூரமாக்கிக் கொண்டு சில சமயம் புன்னகை தோன்றியது.

பிக்ஷு ஒரு தடவை காபாலிகர் கூட்டத்தில் புகுந்து பேசிக்கொண்டிருந்துவிட்டு, வெளிவந்து ஆயனரை அணுகியதும், "ஆயனரே! எப்போதாவது நான் புத்த சமயத்தைத் துறந்து சைவனாகும் பட்சத்தில், காபாலிகத்திலேயே சேர்வேன்!" என்றார்.

இதைக் கேட்டு ஆச்சரியமடைந்த ஆயனர்,



“சுவாமி! அத்தகைய எண்ணம் தங்களுக்கு ஏன் வரவேண்டும்? புத்த சமயத்தின் மீது தங்களுக்கு என்ன கோபம்? யுத்தங்களினால் ஏற்படும் சங்கடங்களையும் துன்பங்களையும் பார்க்கப் பார்க்க, புத்த பகவான் காட்டிய அஹிம்சா மார்க்கமே உத்தமமான மார்க்கம் என்றல்லவா எனக்கே இப்போது தோன்றி வருகிறது!” என்றார்.

“அதனாலேதான் நானும் சொல்லுகிறேன், நீங்கள் கால சம்ஹார மூர்த்தியைக் கைவிட்டுப் புத்த பகவானை அடைவதாயிருந்தால், அதற்குப் பிரதியாகக் காபால ருத்திரமூர்த்திக்கும் ஓர் அடியார் வேண்டுமல்லவா?” என்று நாகநந்தி கூறியது ஆயனருக்கு மேலும் மனக் குழப்பத்தை உண்டாக்கிற்று.

சாலைகளில் அபூர்வமாய்த் தெற்கேயிருந்து வரும் பிரயாணிகள் சிலர் காணப்பட்டபோது அவர்களைக் காஞ்சிக்குப் பக்கமிருந்து வருகிறவர்கள் நிறுத்தி “தெற்கே என்ன விசேஷம்?” என்று கேட்பார்கள். அவர்கள் மறுமொழி சொல்லி விட்டுக் காஞ்சி நிலைமையைப் பற்றி விசாரிப்பார்கள். இத்தகைய பேச்சுக்களையெல்லாம் நாகநந்தி ஆங்காங்கு நின்று வெகு சுவாரஸ்யமாகக் கவனிப்பார். இப்படி ஒரு தடவை கூட்டத்தில் நின்று பேச்சு கேட்ட பிறகு, நாகநந்தி, ஆயனர் சிவகாமி இருவர் காதிலும் விழும்படியாக, “நாம் ஒன்று நினைக்க யுத்ததேவன் வேறொன்று நினைக்கிறான் போலல்லவா தோன்றுகிறது? உத்தேசித்தபடி நமது பிரயாணம் நடைபெறாது போலிருக்கிறதே!” என்றார்.




“அப்படியா? புத்த தேவர் என்ன கருணை செய்கிறார்? அவருடைய திருவுள்ளம் என்ன?” என்றார் ஆயனர்.

“அத்தையைப் போல் அப்பாவுக்கும் காது மந்தமாகி வருகிறது!” என்று கூறிச் சிவகாமி புன்னகை புரிந்தாள்.

அந்த நகைச்சுவையை அனுபவித்த நாகநந்தி செவிடருடன் பேசுவது போன்ற உரத்த குரலில், “ஆயனரே! நான் புத்த தேவரைச் சொல்லவில்லை, யுத்த தேவனைச் சொல்கிறேன்” என்றார்.

“அப்படியா? யுத்த தேவன் என்ன சொல்கிறார்? நம்மை வழி மறிக்கப்போகிறாரா?”

“அப்படித்தான்!” என்று சொன்ன நாகநந்தி மறுபடியும் மெல்லிய குரலில் கூறினார்: “பல்லவ இராஜ்யத்துக்கு எதிர்பாராத ஆபத்துக்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. மேற்கே இருந்து கங்க நாட்டுச் சைனியம் படை எடுத்து வந்து எல்லைப் புறத்தில் நிற்கிறதாம். தெற்கே பாண்டிய மன்னர் பெரும்படை திரட்டிக் கொண்டு வருகிறாராம். பாண்டியர் சைனியம் கிழக்குச் சோழ நாட்டு எல்லைக்கே வந்துவிட்டதாம், வடதிசையிலிருந்து வரும் வாதாபி சைனியத்தைப் பற்றித்தான் உங்களுக்கே தெரியும். பல்லவ சைனியம் தப்பிப் பிழைப்பதற்கு இன்னும் ஒரே திசைதான் பாக்கியிருக்கிறது...!”

“எந்தத் திசையைச் சொல்லுகிறீர்கள்?” என்று ஆயனர் கேட்டார்.

“கிழக்குத் திசையைத்தான் சொல்லுகிறேன். கிழக்கே சமுத்திர ராஜனிடம் வேணுமானால் மகேந்திர பல்லவர் அடைக்கலம் புகலாம்.”


“சமுத்திரத்திலே விழுந்து சாகலாம் என்கிறீர்களா? அடிகளே! உங்களுடைய இருதயம் இப்படி ஈரப்பசையே இல்லாத பாலைவனமாக எப்போது ஆயிற்று?” என்று ஆயனர் கோபக்குரலில் கூறினார்.

“ஓ! மகா ஸ்தபதியே! என்னை அவ்வளவு நீச குணமுள்ளவன் என்று ஏன் தாங்கள் கருதவேண்டும்? பல்லவ குலம் கடல் தந்த குழந்தையிலிருந்து தோன்றியதாயிற்றே? இப்போது அந்த வம்சத்துக்கு ஆபத்து வந்திருக்கும் சமயத்தில் அந்தக் கடல் அடைக்கலம் தராதா என்று சொன்னேன். கடலில் அடைக்கலம் என்றால் கடலில் முழுகிவிடுதல் என்றுதான் பொருளா? கப்பல் ஏறி இலங்கைக்குப் போய்த் தப்பலாமல்லவா? ஆனால், அதற்கும் ஓர் ஆபத்து இருக்கிறது. இலங்கையில் இப்போதுள்ள அரசன் மகேந்திர பல்லவரின் அருமைச் சிநேகிதன்தான். ஆனால், அவனை இலங்கைச் சிம்மாசனத்திலிருந்து தள்ளிவிட ஒரு பெருங்கலகம் அங்கே நடக்கிறதாம். பாவம்! பல்லவர்களுக்கு வந்திருக்கும் கஷ்ட காலம் அவர்களுடைய சிநேகிதர்களைக் கூடப் பீடிக்கிறதே” என்று கூறிவிட்டுப் புத்த பிக்ஷு ஒரு கோரச் சிரிப்புச் சிரித்தார்.

ஆயனர் அப்போதும்

(சபதம் தொடரும்)

விட்டுக்கொடுக்காமல், “எதற்காக மகேந்திர பல்லவர் இலங்கைக்கு ஓட வேண்டும்? காஞ்சிக் கோட்டை இருக்கிறதல்லவா?” என்றார்.



“ஆமாம்; காஞ்சிக் கோட்டை இருக்கிறது. அதில் எட்டு மாதத்துக்கு முன்பு பயங்கொள்ளிப் பல்லவன் ஒளிந்து கொண்டதுபோல் இப்போது அவனுடைய தந்தையும் ஒளிந்து கொள்ளலாம். வாதாபிப் படை வழி தங்காமல் வந்திருந்தால் கோட்டை ஒரு நொடியில் தகர்ந்து போயிருக்கும். இப்போது கோட்டை பலப்பட்டுவிட்டது. ஆகையால், சில காலம் கோட்டைக்குள் பத்திரமாயிருக்கலாம். வாதாபிப் படை ஆறு மாதமாக வட பெண்ணைக் கரையில் என்ன செய்து கொண்டிருந்தது என்றுதான் தெரியவில்லை!” என்றார் புத்த பிக்ஷு.

இந்த வார்த்தைகள் எல்லாம் சிவகாமியின் செவிகளில் புண்ணில் கோல் இடுவதுபோல் விழுந்தன. ‘கடவுளே! நாக்கிலே விஷமுள்ள இந்த நாகநந்தியின் கர்வத்தை அடக்கமாட்டாயா?’ என்று வேண்டிக் கொண்டாள்.

புத்த பிக்ஷுவின் விஷயத்தில் சிவகாமியின் மனநிலை சஞ்சலமுள்ளதாயிருந்தது. அவரிடம் காரணமில்லாத அருவருப்பும் இன்னதென்று தெரியாத பயமும் அவள் மனத்தின் ஆழத்தில் குடிகொண்டிருந்தன. மாமல்லரைப்பற்றி அவர் கூறிய செய்திகளைக் கேட்டபின் அவரிடம் அவளுடைய அருவருப்பு அதிகமாயிற்று.

இன்னொரு பக்கம் புத்த பிக்ஷுவின் விசாலமான உலக அனுபவமும், ஆழ்ந்த கலைஞானமும் அவரிடம் அவளுக்குப் பக்தியையும் மரியாதையையும் உண்டு பண்ணியிருந்தன. மேலும், தூர தூர தேசங்களெல்லாம் சென்று அங்கங்கே மகாசபைகளில் நாட்டியம் ஆடி, ‘பரத கண்டத்தின் ஒப்பற்ற நடன ராணி’ என்று பெயரும் புகழும் பெறுவதுபற்றிப் பிக்ஷு அடிக்கடி கூறி அவளுடைய உள்ளத்தில் திக்விஜயப் பகற் கனவுகளை உண்டு பண்ணியிருந்தார். அதெல்லாம் அவருடைய உதவியினாலேதான் சாத்தியமாகக் கூடும் என்பதும் உலகமறியாத சாதுவான தன் தந்தையினால் ஆகாது என்பதும் அவளுக்குத் தெரிந்திருந்தன. எனவே புத்த பிக்ஷுவிடம் தன்

மனத்தில் குடிகொண்டிருந்த அருவருப்பைப் போக்கிக்கொண்டு அவரிடம் சிநேகபாவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று அவள் முடிவு செய்திருந்தாள்.

ஆனாலும், புத்த பிக்ஷு பல்லவ குலத்தைப் பற்றியும் மாமல்லரைப் பற்றியும் அடிக்கடி கூறிய வசைமொழிகள் அவளுடைய சிநேக முயற்சிக்குக் குறுக்கே நின்று அருவருப்பை வளர்த்து வந்தன.

வாதாபிப் படை வடபெண்ணைக் கரையில் ஆறு மாதமாக இருந்ததுபற்றிப் புத்த பிக்ஷு குறிப்பிட்டதும் சிவகாமி ஆத்திரமான குரலில், “சுவாமி! வடபெண்ணைக்குப்போய் வாதாபிப் படைகளை நீங்களே கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வந்து விடுவீர்கள் போலிருக்கிறதே! பல்லவ குலத்தின் மேல் உங்களுக்கு என்ன அவ்வளவு கோபம்?” என்று கேட்டாள்.




பிக்ஷு சாந்தமான குரலில், “பல்லவ குலத்தின் மேல் எனக்கு என்னத்திற்கு அம்மா கோபம்? அவர்களுடைய கையாலாகாத்தனத்தினால் இப்போது நாம் நினைத்து வந்தபடி பிரயாணம் செய்ய முடியாமலிருக்கிறதே என்றுதான் வருத்தமாயிருக்கிறது. சிதம்பரத்துக்குப்போய் அங்கிருந்து கீழைச் சோழ நாட்டு ஸ்தலங்களைத் தரிசனம் செய்து கொண்டு நாகப்பட்டினத்தில் நடக்கப்போகும் மகா புத்த சங்கத்துக்கு உங்களை அழைத்துப் போவதாகச் சொன்னேனல்லவா? இப்போது பாண்டிய சைனியம் கீழைச் சோழ நாட்டில் படையெடுத்து வருவதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட சமயத்தில் நாம் சோழ நாட்டுக்குப் போவது உசிதமா என்றுதான் யோசிக்கிறேன்” என்று கூறினார்.

“பின்னே, நாம் என்னதான் செய்யலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?” என்று ஆயனர் கேட்டார்.

“கெடில நதிக்கரையில் ஒரு அமைதியான இடம் இருக்கிறது. தங்களுடைய சிற்பவேலைகளை நடத்துவதற்கும் அங்கே நிறைய வசதி உண்டு. குன்றுகளும் பாறைகளும் ஏராளமாய் இருக்கின்றன. இந்த யுத்தக் குழப்பமெல்லாம் முடியும் வரையில் நீங்கள் அங்கே இருக்கலாமென்று நினைக்கிறேன்” என்றார் பிக்ஷு.

பிக்ஷுவிடம் வரவரச் சந்தேகம் அதிகம் கொண்டுவந்த ஆயனர் “போகப் போகப் பார்த்துக் கொள்ளலாம், சுவாமி!” என்றார்.

இப்படியெல்லாம் அவர்களுக்குள் இரண்டு தினங்களாகச் சம்பாஷணை நடந்திருந்தபடியால், எதிரே படைவரும் சத்தம் கேட்டதும் ஒருவேளை படையெடுத்து வரும் பாண்டிய சைனியந்தானோ அது என்று ஆயனரும் சிவகாமியும் ஐயுற்றார்கள். ஆனால் முன்னணியில் பறந்த கொடியில் ரிஷபத்தைப் பார்த்ததும் பல்லவர் படை என்று எல்லாருக்கும் தெரிந்துவிட்டது. படை வீரர்கள் எழுப்பிய கோஷங்கள் இதை உறுதிப்படுத்தின. “வாதாபி அழிக!” “தலைக்காடு வாழ்க!” “புலிகேசிக்கு நாசம்!” “துர்விநீதனுக்குத் துர்மரணம்!” என்னும் கோஷங்களையும், “காஞ்சி வாழ்க!” “மகேந்திர பல்லவர் வாழ்க!” “மாமல்லரின் வீரத் தோள் வெல்க!” என்னும் முழக்கங்களையும் மாற்றி மாற்றி அந்த வீரர்கள் எழுப்பிக் கொண்டு கம்பீரமாக நடந்தார்கள்.

இந்தக் குரல் ஒலிகளுக்கு இடை இடையே பேரிகை முதலிய யுத்த வாத்தியங்கள் எட்டுத் திக்கும் எதிரொலி எழும்படி ஆர்த்தன. மேற்படி கோஷங்கள் எழுந்தபோது மரத்தின் பின்னால் மறைந்திருந்த நாகநந்தியடிகளின் முகத்தை யாரும் பார்க்கவில்லை. பார்த்திருந்தால், படமெடுத்து ஆடும் நாக சர்ப்பத்தின் தீக்ஷண்யமான கண்களிலிருந்து தீப்பொறி கிளம்புவதுபோல் அவருடைய கண்களிலிருந்தும் பொறி கிளம்பிக் கொண்டிருந்ததைக் கவனித்திருக்கலாம்.

படை சின்னப் படைதான். நாற்பது ஐம்பது குதிரைகளும் இரண்டாயிரம் காலாட்களும் இருக்கலாம். எனவே, அரை நாழிகைக்குள் நமது பிரயாணிகள் நின்றிருந்த இடத்தைத் தாண்டி படை சென்றுவிட்டது. சற்று முன் கலகலப்பாக இருந்த சாலையில் நிசப்தம் குடிகொண்டது. பெரிய நகரத்திலிருந்து திடீரென்று நிர்மானுஷ்யமான காட்டுக்குள் வந்துவிட்டதுபோல் தோன்றியது.


படைவீரர்கள் எழுப்பிய கோஷங்களில் “மாமல்லர்

வாழ்க!" "மாமல்லரின் வீரத் தோள் வெல்க!" என்னும் கோஷங்கள் சிவகாமியின் உள்ளத்தில் பெருங்கிளர்ச்சியை உண்டு பண்ணியிருந்தன. மாமல்லர் பயங் கொள்ளியாயிருந்தால் பல்லவ வீரர்கள் அவரைப்பற்றி இம்மாதிரி வீர கோஷங்களைச் சொல்வார்களா?

"ஆயனரே போகலாமா? அசோகபுரம் இன்னும் ஒரு நாழிகை தூரம் இருக்கிறது!" என்று நாகநந்தியின் குரல் கேட்டது.

"ஆகா! போகலாமே! சிவகாமி! வண்டியில் ஏறிக்கொள், அத்தையையும் ஏறச்சொல்" என்றார் ஆயனர்.

சிவகாமி வண்டியில் ஏறாமலே, "அப்பா! இந்தப் படை வீரர்கள் எங்கே போகிறார்கள்?" என்று கேட்டாள்.



"எனக்குத் தெரியவில்லை, அம்மா! பார்த்தால், யுத்தத்துக்குப் போகும் படையாகத் தோன்றுகிறது. அந்த வீரர்கள் செய்த யுத்த கோஷங்களைக் கேட்டபோது எனக்குக்கூடக் கல்லுளியைப் போட்டு விட்டுக் கத்தியை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தோன்றியது. எதற்காக இப்படிப் பயந்து ஊரைவிட்டு ஓடுகிறோம் என்று வெட்கமாயிருக்கிறது" என்றார் ஆயனர்.

"ஆயனரே! இத்தகைய சஞ்சலம் உமக்கு எப்போது வந்தது? சற்று முன்னால் அஹிம்சா மூர்த்தியான புத்த பகவானிடம் உமது அபார பக்தியைத் தெரிவித்துக் கொண்டீரே?" என்றார் புத்த பிக்ஷு.

அந்தச் சமயத்தில் சாலையில் படை மறைந்த திக்கிலிருந்து ஒரு தனிக்குதிரை வரும் சத்தம் 'டக்டக்' 'டக்டக்' என்று கேட்டது வர வர அது சமீபித்து வந்தது. வருகிறது யார் என்று தெரிந்துகொள்வதில் அவர்கள் எல்லாருக்குமே ஆவல் இருந்தபடியால் நின்ற இடத்திலேயே நின்றார்கள்.

குதிரை அவர்களுடைய அருகில் வந்தது. குதிரையின் மேல் இருந்தது இன்னார் என்று தெரிய வந்தபோது ஆயனருக்கும் சிவகாமிக்கும் உண்டான வியப்புக்கு அளவேயில்லை. ஏனெனில், குதிரைமேல் இருந்தவன், அவர்களுடைய அரண்ய வீட்டிற்குப் பரஞ்சோதி வந்த தினத்தில் அவர்களிடம் சொல்லிக் கொள்ளாமலே மாயமாய் மறைந்த குண்டோதரன்தான்.

"குருவே! நான் என்ன தவறு செய்தேன்! என்னை இப்படி அநாதையாய்க் கைவிட்டு விட்டுச் சொல்லாமல் புறப்பட்டு வந்து விட்டீர்களே!" என்று அலறினான் குண்டோதரன்.

(சபதம் தொடரும்)



# தலைமுறை

## சுற்றுச்சூழல் பிரச்சினைகள்: சரியாகத்தான் பேசுகிறோமா?

உலகில் சுற்றுச்சூழல் நெருக்கடிகள் சமீபகாலமாக பெருமளவில் அதிகரித்திருக்கின்றன. இந்தியா உள்ளிட்ட மூன்றாம் உலக நாடுகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சார்ந்த போராட்டங்களும் கணிசமாக அதிகரித்திருக்கின்றன. சுற்றுச்சூழல், இயற்கை ஆர்வலர்களைத் தாண்டி மக்களும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு எதிராக சமீபத்திய ஆண்டுகளில் போராடத் தொடங்கிவிட்டார்கள்.




அவர்களுடைய வாழ்க்கை நேரடியாக பாதிக்கப்படவும் வாழ்வாதாரம் பறிக்கப்படவும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதன் வெளிப்பாடு இது.

நிலம், நீர், காற்று, வானம் ஆகியவை எந்த ஒரு மனிதரின் வாழ்க்கைக்கும் அடிப்படையாக இருப்பவை. சுற்றுச்சூழல் சீர்கேட்டால் இந்த நான்கும் ஏதோ ஒரு வகையில் சீர்கெடும்போது, மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்கு உள்ளாக்கப்படுகிறது. தங்கள் வாழ்க்கையைக் காப்பாற்றிக்கொள்ள மக்கள் களத்தில் இறங்க ஆரம்பிக்கிறார்கள்.

### எஞ்சியதைக் காப்பாற்ற...

நிலம், நீர், காற்று உள்ளிட்ட அனைத்துமே செலவில்லாத இயற்கைச் சொத்தாக, மக்களின் பொதுச் சொத்தாகத் திகழ்கின்றன. ஏற்கெனவே பெருநிறுவனங்கள், தொழிற்சாலைகளால் அவற்றில் பெருமளவு சுரண்டப்பட்டுவிட்டது. அதைத் தடுப்பதற்கோ பாதுகாப்பதற்கோ அரசு உரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எஞ்சியுள்ள மிகக் குறைந்த இயற்கைச் சொத்தும் பறிபோகக்கூடிய நிலையில் மக்கள் விழித்துக்கொள்கிறார்கள். பழங்குடிகளைத் தாண்டி சமீபகாலத்தில் கிராம, நகர மக்கள் சுற்றுச்சூழல் போராட்டங்களில் களம் காணுவதற்கான அடிப்படை இதுவே.

இந்தப் போராட்டங்கள் நீடிக்கின்றனவா, எப்படி மாறுகின்றன என்பது வாழ்வாதாரம் மீது மக்களுக்கு உள்ள தீவிரப் பிடிப்பையும் அரசு அடக்குமுறையையும் சார்ந்ததாக இருக்கிறது. ஒரு பிரச்சினை சார்ந்த புரிதலும் தங்கள் வாழ்வாதாரத்தை இழக்கக் கூடாது என்ற



# மறந்த சூழல்

தீர்மான உணர்வும் அறிவியல் அடிப்படையிலும் தர்க்கபூர்வமாகவும் அமையும்போதே மக்களின் பிடிப்பு நீடிக்கும். போராட்டங்களில் பங்கேற்கும் பல்வேறு தரப்பினரின் தாக்குப்பிடிக்கும் தன்மை இந்த அஸ்திவாரத்தின் மீது உறுதியாக எழும். தங்கள் எல்லையைத் தாண்டியும் போராட்டத்துக்கான ஆதரவை மக்கள் விரிப்பதற்கும் இது ஆதாரமாகத் திகழும்.

**ஆதி வள்ளியப்பன்**

பிரச்சினைகள் சார்ந்து அரசியல்வாதிகள், ஆர்வலர்களின் பேச்சும் தர்க்கமும் எப்படி அமைந்திருக்கின்றன என்பது இதன் துணைக் கேள்வி.




சுற்றுச்சூழல் பிரச்சினை மட்டுமல்ல, சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள் எதுவானாலும் அறிவியல்பூர்வ அணுகுமுறையுடன் தர்க்கப்பூர்வமாக முன்வைக்கப்படும் வாதமும், அது சார்ந்து மக்களை ஒன்றுதிரட்டுவதும் நாளடைவில் உறுதிப்படும்—சாத்தியப்படும்.

உணர்ச்சிவசப்பட்ட வாதங்கள்

தமிழகத்தில் சமீபகாலமாக நடைபெற்று வரும் சில சுற்றுச்சூழல் போராட்டங்கள் சார்ந்த வாதப் பிரதிவாதங்களும் பார்வைகளும், அறிவியல்பூர்வமாகவும் தர்க்கபூர்வமாகவும் உள்ளனவா என்கிற கேள்வி எழுகிறது. சுற்றுச்சூழல்

இவ்வளவு காலம் நம்மை பாதித்து வந்த பொதுப் பிரச்சினைகள், வாழ்வாதாரத்துக்கே பாதிப்பை ஏற்படுத்தும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளைப் பற்றிய பேச்சுகள், விவாதங்கள், கருத்துப் பகிர்வுகள் நிகழ்கின்றன. ஆனால், இந்த விஷயங்கள் பேசப்பட ஆரம்பித்திருப்பதே வெற்றியாகக் கருதப்படும் ஆபத்தை நோக்கிச் செல்கிறோமோ என்கிற சந்தேகம் எழுகிறது. உணர்ச்சிவசப்பட்ட பேச்சும் அறிவியல்பூர்வமற்ற வாதங்களும் சில போராட்டங்களை வழிநடத்துகின்றன. தொடர்ச்சியாக தொலைக்காட்சி 'விவாத நிபுணர்கள்', சமூகஊடகப் 'போராளி'கள், சில அரசியல்வாதிகள் சுற்றுச்சூழல் அறிஞர்களாகவே

உருமாறிவருகிறார்கள்.

மேம்போக்கான புரிதல், சமூக ஊடகத் தகவல்கள், கூகுள் போன்ற தேடுபொறிகளின் வழிகாட்டுதல் போன்றவற்றை வைத்துக்கொண்டு உணர்ச்சிபூர்மாகப் பேசுவது போராட்டம் சார்ந்து தற்காலிக ஆள்சேர்ப்புக்கு உதவலாம். ஆனால், ஒரு பிரச்சினையின் தீர்வை நோக்கிய பயணத்தில் பிரச்சினையில்லை, மரம் நட்டால் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தீர்ந்துவிடும்', 'ஆற்றுநீர் வீணாகக் கடலில் கலக்கிறது. அணைகட்டி அதை பயன்படுத்தலாமே' என்பது போன்ற அரைகுறை வாதங்களுக்கும் சில சுற்றுச்சூழல் போராட்டங்கள் சார்ந்து முன்வைக்கப்படும் வாதங்களுக்கும் இடையே அடிப்படை வேறுபாடு தேவைப்படுகிறது.




பாதையைத் தவறவிடுவதற்கான சாத்தியம் இதில் அதிகம்.

அறிவியல் பார்வை அவசியம்

யார் வேண்டுமானாலும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குக் குரல் கொடுக்கலாம். அதேநேரம் அவர்களது குரல் கல்விப்புலம் சார்ந்தோ சாராமலோ புலமையும் நிபுணத்துவமும் பெற்றவர்கள் முன்வைக்கும் வாதங்களின் அடிப்படையில் எழுந்ததா? காரணம், பல துறைகளைப் போலவே 'ஆர்வலர்கள்' என்ற பெயரில் நாளும் புதிய 'நிபுணர்'களும் சமூக ஊடகப் 'போராளி'களும் இத்துறையில் முளைத்துக்கொண்டிருப்பது பிரச்சினையைத் திசைதிருப்புவதற்குப் போதுமான சாத்தியங்களைக் கொண்டிருக்கிறது. இன்னும் சில இடங்களில் சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் கவனப்படுத்துபவர்கள் சார்ந்து அவதூறுப் பிரச்சாரங்களும் ஒரு போக்காக மாறிவருகின்றன.

'சிட்டுக்குருவி அழிந்துவருகிறது' என்கிற போலிக் கூப்பாட்டில் ஆரம்பித்து, 'காடுகள் அழிவது

பூச்சிக்கொல்லிகளால் சுற்றுச்சூழல் சீர்கெடுவது பற்றி முதன்முதலில் உலகுக்கு அறிவித்த அமெரிக்க அறிவியலாளர் ரேச்சல் கார்சன் தன் வாதங்களை முன்வைத்தபோது, தன் நாடெங்கும் தூற்றப்பட்டார். பூச்சிக்கொல்லித் தொழிற்சாலைகளும் நவீன அறிவியலின் ஆராதகர்களும் 'கம்யூனிஸ்ட்', 'போலியானவர்' என்று அவரைக் குற்றஞ் சாட்டினார்கள். ஆனால், அவருடைய ஆய்வுகள் அறிவியல்பூர்வமாக இருந்ததால் அவரது வாதம் சரியென்று நிரூபிக்கப்பட்டது. சுற்றுச்சூழல் சீர்கேடுகளைக் கண்டறிந்து தடுக்க அமெரிக்காவில் அரசு அமைப்பு உருவாக்கப்பட்டது, டி.டி.டி. பூச்சிக்கொல்லியும் பின்னர் தடை செய்யப்பட்டது.

இது நமக்குச் சிறந்ததொரு வரலாற்று ஆதாரமாக இருக்கிறது. இதுபோல சுற்றுச்சூழல் சீர்கேடுகளுக்கான தீர்வு அறிவியல்பூர்வமான வாதங்களில் இருந்தே சூல் கொள்கிறது. சுற்றுச்சூழல் தொடர்பான உரையாடல்களில் நாம் இன்னும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய தருணம் இது!

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



தொடர்புகளுக்கு

*editor@ithamil.com*




## உடல்பருமனுக்கு எளிய சித்த மருத்துவம்

கொழுப்புகள் கல்லீரலில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அளவுக்கு அதிகமான கொழுப்பு உடலில் சேர்வதால் உடல்பருமன் ஏற்படுகிறது.

உடல் உழைப்புக் குறைந்துவிட்ட இந்தக் காலக்கட்டத்தில், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சந்திக்கும் மிகப்பெரிய பிரச்னையாக உருவெடுத்து வருகிறது உடல்பருமன். குட்டித் தொந்தியும் தொப்பையுமாக இருந்தால்தான் குழந்தை சமத்து. `போஷாக்கா இருக்கானே குழந்தை!' என்று கொஞ்சிய காலம் போய், `டாக்டர்! பையனோட பி.எம்.ஐ கூடியிருக்குமோ' என விசாரிக்கும் பெற்றோர்களே அதிகமாகி உள்ளனர். தெருவுக்கு மூன்று ஜிம்கள் முளைக்கவும் உடல்பருமன் முக்கியக் காரணம்.

அழகும் ஆரோக்கியமும் ஒன்றையொன்று சார்ந்திருப்பவை. ஆரோக்கியம் இல்லாத அழகு, அஸ்திவாரம் இல்லாத அரண்மனை மாதிரி. அழகு, ஆரோக்கியம் இரண்டும் சம்பந்தப்பட்ட முக்கியப் பிரச்னை உடல்பருமன்; பல நாள்பட்ட நோய்களை அழைத்து வரும் ஒன்று. சர்க்கரைநோய், உயர் ரத்த அழுத்தம், மூட்டுவலி, நரம்புத்தளர்ச்சி எனத் தொடரும் இந்தப் பட்டியலால்தான் வீட்டுச் செலவும் பன்மடங்கு அதிகரிக்கிறது.

உடல்பருமன் தடாலடியாகத் தோன்றுவது அல்ல. கொழுப்பு என்பது உடலுக்கு ஆற்றல் தேவைப்படும்போது எடுத்துக்கொள்ள வைத்திருக்கும் தேக்கம். பெண்ணுக்கு 20 — 25 சதவிகிதமும், ஆணுக்கு 12 — 15 சதவிகிதமும் உடல் கொழுப்பு இருக்கும். பெண்களுக்கு அவர்களது மகப்பேறு பணிக்குத் துணையாக மார்பகம், கூபகம், தொடைப் பகுதியில் 12 சத—விகிதம் கூடுதலாக அத்தியாவசியக் கொழுப்பு (Essential Fat) உள்ளது. ஆண்களுக்கு இது 3 சதவிகிதம்தான். உடல் எடை அதிகரிப்பது, தேக்கி வைத்துள்ள கொழுப்பு அதிகரிப்பதால் மட்டுமே உருவாகிறது. உடல் மற்றும் தோலுக்கு அடியில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் இந்தக் கொழுப்புதான் கூடுதல் தீனி, குறைந்த உடல் உழைப்பு, சில நேரங்களில் பாரம்பர்யம் மற்றும் ஹார்மோன் குறைவு, அதிகம் போன்ற காரணங்களால் அதிகமாகி உடல்பருமன் நோயை உருவாக்குகிறது. மருத்துவ அறிவியல், உடல் முழுவதும் ஒட்டுமொத்தமாகப் பருத்து







இருப்பதை ஒவாய்டு (Ovoid) அமைப்பு என்றும், பருத்த தொப்பையுடன் இருப்பதை ஆப்பிள் அமைப்பு என்றும், தொடை, அடிவயிறு, பிட்டம் மட்டும் பருத்து இருப்பதை கைனாய்டு (Gynoid) அமைப்பு என்றும் வகைப்படுத்தி இருக்கிறது. இதன் அடிப்படையில் ஒவ்வொருவரும் எந்தப் பிரிவு என்பதைப் பொறுத்து அவரவர்களுக்கான சிகிச்சையும், உணவுக் கட்டுப்பாடும், உடற்பயிற்சியும் மாறுபடும்.

இஞ்சியைத் தோல் சீவி அரைத்து, ஒரு டேபிள் ஸ்பூன் சாறு எடுத்து, அதனுடன் சம அளவு தேன் சேர்த்து ஒரு டம்ளர் இளம் சூடான நீரில் கலந்து, காலையில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இஞ்சியில் உள்ள ஜின்ஜெரால் (நிவீஸீரீமீக்ஷீஷீறீ)

ஜின்ஜிபெரின் (ஞ்வீஸீரீவீதீமீக்ஷீவீஸீமீ) மற்றும் தேன் ஆகியவை செரிமானத்தைத் தூண்டுவதுடன் தேவையற்ற கொழுப்பையும் எரிக்கும்.




## உடல் பருமனுக்கான காரணங்கள்:

அதிக அளவு உணவு எடுத்துக்கொள்ளல், குறைவான சக்தியைச் செலவிடல், அதிக சக்தி தரும் உணவுகளை உட்கொள்ளல் (இனிப்புகள்/ ஐஸ்—கிரீம்/ குளிர்பானங்கள்), மதுப் பழக்கம் போன்றவற்றால் கூடுதல் பருமன் ஏற்படுகிறது. வயது மற்றும் பரம்பரைக் காரணிகளும்கூட உடல்பருமனுக்குக் காரணங்கள். தைராய்டு சுரப்புக் குறைவதாலும், அட்ரீனல் சுரப்பு அதிகரிப்பதாலும் உடல் பருமன் அதிகரிக்கும். கூடுதல் உடல்பருமனால் உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், மூட்டு வாதம், மன அழுத்தம் போன்றவை ஏற்படுகின்றன.

உடல்பருமனுக்கு எளிய சித்த மருத்துவம்:

கீழாநெல்லி, வெந்தயம், மஞ்சள், கறிவேப்பிலை, நெல்லிக்காய் சம அளவு எடுத்துப் பொடித்து, காலை, மாலை அரை ஸ்பூன் நீரில் கலந்து உண்ண, உடலின் கொழுப்பு குறைந்து, எடையும் சீராகும்.

சிறுகுறிஞ்சான், நெருஞ்சில், மூக்கிரட்டை, சீரகம், திப்பிலி, மிளகு, ஓரெடை எடுத்துப் பொடித்து, காலை, மாலை அரை ஸ்பூன் தேனில் உண்ண உடல் எடை குறையும்.

பெருஞ்சீரகத்தைப் பொடித்து, காலை, மாலை அரை ஸ்பூன் தண்ணீர் சேர்த்து அருந்த, உடல் எடை குறையும்.

எலுமிச்சைச் சாறு ஒரு டேபிள் ஸ்பூனுடன் சம அளவு தேன் சேர்த்து ஒரு டம்ளர் நீரில் கலந்து




பருக வேண்டும். இதில் உள்ள வைட்டமின் சி ரத்தத்தைச் சுத்திகரிப்பதுடன் கொழுப்பைக் குறைத்து உடலின் எடையையும் குறைக்கிறது.

சேர்க்க வேண்டிய உணவுப் பொருட்கள்:

தக்காளி, கோஸ், பப்பாளி, வெள்ளரி, தர்பூசணி, புரூகோலி, ஆப்பிள், ஓட்ஸ், வால்நட், பாதாம், பருப்பு வகைகள், மோர்.

தவிர்க்க வேண்டிய உணவுப் பொருட்கள்:

இனிப்புகள், வெள்ளை ரொட்டி, பட்டை தீட்டப்பட்ட தானியங்கள், துரித வகை உணவுகள், எண்ணெய் மற்றும் கொழுப்பு மிகுந்த உணவு வகைகள்.

தினமும் இரண்டு லிட்டர் தண்ணீர் அருந்த வேண்டும். நடைப்பயிற்சி, நீச்சல் பயிற்சி, சைக்கிள் ஓட்டுதல், யோகா, தியானம், முதலியவற்றை மேற்கொண்டால் உடல்பருமன் நிச்சயம் குறையும்.

உடல்பருமன் குறைக்க உதவும் உணவுகள்...

* உடல்பருமனை குறைக்க பட்டினி வழியல்ல. முதலில் அளவான சாப்பாடு எடுத்துக்கொள்ள வேண்டும். குறைந்த கலோரியில் நிறைந்த நார்ச்சத்துகொண்ட உணவை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டும்.

* ஒரு கப் சாதத்தை மூன்று பங்காகப் பிரித்து, கீரை, காய்களுடன் பிசைந்து ஒரு பங்காகச் சாப்பிட வேண்டும். (இப்படிச் செய்வதால், அரிசியில் உள்ள கார்போஹைட்ரேட், மெதுவாக குளூக்கோஸாக மாற்றப்பட்டு ரத்தத்தில் மெதுவாகச் சேரும்). அடுத்த பங்கு ரசம். கடைசிக் கவளம் மோர் எனப் பிரித்துச் சாப்பிடுவது நல்லது.

இதில் மிக முக்கியமான விஷயம், ஒரு கப் என்பது 150 கிராம்தான் இருக்க வேண்டும்.

* உடல் எடைக் குறைப்புக்கு உதவும் பூண்டு, வெந்தயம், லவங்கப் பட்டை, நாருள்ள கீரை, லோ கிளைசெமிக் உணவுகளை தினமும் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

* சர்க்கரை, எண்ணெயில் பொரித்த உணவுகளை முழுமையாகத் தவிர்க்க வேண்டும்.

* அரிசிக்கு பதிலாக வாரம் நான்கு நாட்கள் கம்பு, தினை, சிறுசோளம் என சிறுதானியங்களை சேர்த்துக்கொள்ளலாம்.

* `கார்சீனியா’ எனப்படும் குடம் புளி, உடல் எடையைக் குறைக்க உதவுவதை பல அறிவியல் ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. `கோக்கம் புளி’ எனப்படும் இந்த மலபார் புளியில் சமைக்கலாம்.

* `இளைத்தவனுக்கு எள்ளு கொடு; கொழுத்தவனுக்கு கொள்ளு கொடு’ என்பது பழமொழி. உடல் எடை கூடியவர்கள் கொள்ளுரசம், கொள்ளு சுண்டல் ஆகியவற்றை அடிக்கடி சாப்பிடலாம்.

* சமீபமாக பேலியோ டயட், ஜி.எம். டயட் முதலிய உணவு வழிமுறைகள் உடல் எடைக் குறைப்பில் பிரசித்துபெற்று வருகின்றன. ஆனால், அவற்றைப் பின்பற்றும் முன்னர் மருத்துவரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது நல்லது.

* உடல் எடை போதுமான அளவு குறைந்த பின்னர், நமது மரபு உணவுகளை, தானியங்களை, புலால்களை சரிவிகித சம அளவில் எடுத்துக்கொள்வது நல்லது.

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப் பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும் சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!

வியந்து போவீர்கள் ! ! !




# SWATHI CASH & CARRY


306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648

# பிள்ளையைத் தோழராய்

## என் பையன் கிட்ட இதையெல்லாம் நான் பேசக் கூடாதா?

என் 13 வயது மகனிடம் சில நாட்களாகவே ஒரு விஷயத்தைப் பற்றி பேச வேண்டும் என நினைத்துக் கொண்டிருந்தேன். ஏற்கனவே பாலியல் சமத்துவத்தைப் பற்றி அவனுக்குப் புரியும்படியாக கதைகள் சொல்லி அவ்வப்போது அவனது மனத்துக்குள் பதிந்து வைத்திருந்தபடியால் அவன் குழந்தைகளும் டீச்சர் என்ன திட்டுவார்களோ என்று பயப்படும் சமயத்தில், ‘அம்மா தயவு செய்து டீச்சரைப் பத்தியோ ஸ்கூலைப் பத்தியோ உன்னோட கருத்தையெல்லாம் சொல்லிவிடாதே’ என்பான்.

தற்போது பதின்வயதை நெருங்கும் அவனுடைய குரல் லேசாக மாறிக் கொண்டிருக்கிறது. என் கால் முட்டிக்கும் குறைவான உயரத்தில் துப்பட்டாவை




பெண்களை தன் சக ஜீவியாக உணர்கிறான் என்பது எனக்குத் தெரியும். இருபாலினரும் படிக்கும அவன் பள்ளியில் எல்லா தேர்வுகளிலும் முதல் இடத்தில் இருப்பது பெண்களே. அவனுக்கு அவர்களிடத்தே போட்டி மனப்பான்மை உள்ளதும் எனக்குத் தெரியும். வகுப்பில் நடக்கும் முக்கியமான விஷயங்களையும், சுவாரஸ்யமான சம்பவங்களையும் பகிர்ந்து கொள்வான். பெரும்பாலும் பள்ளியில் நடக்கும் பெற்றோர் ஆசிரியர் மீட்டிங்குக்கு நான் தான் செல்வேன்.எல்லா

இழுத்து விளையாடிக் கொண்டிருந்தவனை நான் அண்ணாந்துதான் பார்க்க வேண்டியிருக்கிறது. எப்படி பிள்ளைகள் இத்தனை விரைவில், இவ்வளவு உயரமாக வளர்ந்துவிடுகிறார்கள்! நம் கண்களுக்கு முன்னாலே கண்ணுக்குத் தெரியாமல் வளரும் மாயஜாலம் பிள்ளைகளால் தான் ஏற்படும் போலும். இந்நிலையில்தான் சில விஷயங்களை அவனுக்குச் சொல்ல வேண்டும் என எண்ணியிருந்தேன். அவன் அப்பா, அல்லது தாத்தா அல்லது நண்பர்கள் சொல்வதை விட ஒரு



# வளர்ப்போம்

உமா

பெண்ணாக ஒரு தாயாக ஒரு சக உயிராக நான் அவனுக்கு சொல்வதுதான் அவனது பாதுகாப்புக்கு சிறந்தது என்று நினைத்து கடைசியில் அவனிடம் பேசிவிட்டேன்.

'நீ பாத்ரூம்ல அதிக நேரம் டைம் எடுத்துக்கறே ஏன்?' என்று என்றேன். என்னிடமிருந்து இப்படியொரு கேள்வியை எதிர்பார்க்காததால் சற்று தயங்கினான். அவன் கையில் இருந்த செல்ஃபோனை அவசரமாக பாக்கெட்டில் வைத்தான். சிலர் டாய்லெட்டுக்கு புத்தகம் எடுத்துச் சென்று படிப்பார்கள். அந்த வழித்தோன்றலின் நவீன மயம் செல்ஃபோன் போலும். தோழமையோடு அவனை அணுகி அவன் தயக்கத்தைக் களைத்தேன். 'எதுக்குடா கண்ணா ஃபோனை எடுத்துட்டுப் போனே?' என்று குரல் உயர்த்தாமல் கேட்டேன். கேம்ஸ் பாத்திட்டு இருந்தேன் என்றான்.

அவனது போனை வாங்கி (பாஸ்வேர்ட் எனக்குத் தெரியும்) இணையத்தில் ஹிஸ்டரியைப் பார்த்தேன். அவனுக்கு லேசான கோபமும் அவமான உணர்வும் ஏற்பட்டது, ஆனால் எதுவும் சொல்லாமல் என்னையே பார்த்தான். எங்கள் உரையாடல் தொடர்ந்தது. இந்த வயதில் மனத்தில் தோன்றும் சில விஷயங்களுக்கு உடனடியாக பரபரப்பாக வேண்டியதில்லை. வாழ்க்கை மிக நீண்டது. மெதுவாக அழகாக ரசித்து போகிற போக்கில் சில விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம் என்றேன். வாட்ஸப்பில் உன் நண்பர்கள் விடியோ எதாவது அனுப்புகிறார்களா என்றதற்கு அப்படியெல்லாம் இல்லைம்மா என்றான். நான் என்ன விடியோவைப் பற்றிக் கேட்கிறேன் என்று திரும்பக் கேட்காமல், நான் என்ன கேட்டிருப்பேன் என்பதை புரிந்து கொண்டு பதில் அளித்தான். இதிலிருந்து அவனுக்கு


## HERE'S A THOUGHT

Instead of teaching women not to dress provocatively, be passive, to take up less space, don't be dominant. watch where you walk, watch when you walk, don't lead men on, don't walk alone, don't drink too much, don't invite attention, don't sleep with too many people, be careful who you talk to, carry pepper spray, take self defense classes, never walk home alone, carry a rape whistle, don't wear your hair in a pony tail, it's easier for an attacker to grab, don't walk through the short cut, carry your keys between your fingers, don't leave your open drink anywhere, don't go into public bathrooms alone, don't do drugs, get a guard dog, don't let strangers into your home, don't go out at night, carry a mobile phone with you always..

## TEACH MEN NOT TO RAPE

Rape is never the fault of the survivor.
END RAPE CULTURE

சில விஷயங்கள் தெரிகிறது என்பதை நான் தெரிந்து கொண்டேன். குழந்தைகள் எப்போதும் குழந்தைகளாகவே இருந்துவிடுவார்களா என்ன? தகவல் தொழில்நுட்பம் நம்மைவிட அதிவிரைவாக நம் பிள்ளைகளை வந்தடையும் என்பதை கண்கூடாக பார்த்துக் கொண்டிருப்பதன் பிரச்னை இது.




ஏன் ஃபோன் வாங்கித் தருகிறீர்கள் என்கிறார்கள் பள்ளி நிர்வாகிகள். இவர்களிடமிருந்து எதை மறைத்து வைத்தாலும், ஃபோனை மறைத்து வைக்கவே முடியாது என்று அவர்களுக்குத் தெரியாது. ப்ராஜெக்ட் செய்யணும் என்று ஐஃபேட் வாங்கித் தரச் சொன்னபோது, தயக்கத்துடன் தான் வாங்கித் தந்தேன். என்னுடைய முழு கண்காணிப்பில் அது இருந்தாலும், கண்கொத்திப் பாம்பு போல சதா சர்வ காலம் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதே உண்மை. ஆனால் தற்போது அவன் இருக்கும் வயதில், அவனுக்கு சில புரிதல்கள் தேவை என்றபடியால் அவனுக்கு சுவாரஸ்யமான விஷயங்களைப் பேசிக் கொண்டிருக்கும்போது, இடையிடையே சில விஷயங்களில் தெளிவு பெற சில கேள்விகளை கேட்டு வைப்பேன். அதற்கு அவனது உடல்மொழியையும், கண் அசைவையும் பொருத்து அவனது பதிலை நான் உள்வாங்கிக் கொள்வேன்.

கொடூரமாக மாறிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் பெண் குழந்தைகள் மட்டுமல்ல, ஆண் குழந்தைகளும் பாலியல் சீண்டலுக்கு ஆளாக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். இது குறித்தும் அவனிடம் கடந்த வருடம் பேசியிருக்கிறேன். குட் டச் பேட் டச் பற்றி அவனுக்கு நன்றாகத் தெரியும். அப்போது அவன் சற்று பயந்தாலும் பள்ளியில் அல்லது வேனில் யாரும் அவனை தொட அனுமதிப்பதில்லை. எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதை இயல்பாகவே ஆக்கிக் கொண்டான். பள்ளியில் சில சமயம் பாத்ரூமில் பெரிய பையன்கள் சிலர் முறைத்துப் பார்க்கிறார்கள் என்று கூறுவான். அதற்கெல்லாம் பயப்படக் கூடாது தப்பாக ஒரு செய்கை இருந்தால் கூட நீ பயப்படாமல் யாராக இருந்தாலும் அவனைப் பற்றி புகார் தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். ஆண், பெண் என இருபாலருக்கும் இது குறித்த விழிப்புணர்வு கட்டாயம் வேண்டும். தங்களைத் தேவையில்லாமல் சீண்டும் யவரையும் அவர்கள் விலக்கி வைக்க வேண்டும். அவர்களைப் பற்றி பெற்றோர்களிடம் பயப்படாமல் சொல்ல நாம் தான் பழக்கப் படுத்த வேண்டும்.

பெண்கள் பெரியவளாகிறார்கள். சடங்கு செய்கிறோம். விழா எடுக்கிறோம். ஆனால் சத்தமே இல்லாமல், நாம் பெற்ற பிள்ளைகள், நம்

கைக்குள் விளையாடிய குழந்தைகள் திடீரென ஒரு நாள் தாடி மீசையுடன் நம்முன் வந்து முளைக்கிறது, என்பன போன்ற பாலுறவு சார்ந்த கேள்விகளும் மனக் குழப்பங்களும் அவனுக்குள்




ஆச்சரியப்படுத்துகிறார்கள். முந்தைய இரவில் தூங்கி மறுநாள் காலை விழிக்கும் போது அவர்களுக்கு இந்த மாற்றம் நிகழ்வதில்லை. ஆனாலும் அவர்களின் இந்த மறைமுக வளர்ச்சி பற்றிய தெளிவு தாய்க்கு இருப்பதில்லை. தன் மகன் பருவ வயதை எய்திவிட்டான் என குத்துமதிப்பாகத் தான் தாய் தெரிந்து கொள்ள முடியும். மகனுக்குக் கூட தனக்கு என்ன மாறுதல் ஏற்படுகிறது என்பது பற்றிய புரிதல் பெரும்பாலும் இருப்பதில்லை.

ஹார்மோன்கள் வளர்ச்சி எதனால் என்பதை அலசி ஆராய அவர்களுக்கு நேரம் இருப்பதில்லை. இது குறித்த உருப்படியான வழிகாட்டலும் இன்றளவும் வளர் இளம் ஆணுக்கு இருப்பதில்லை. வீட்டினர் முதல் ஊடகம் வரை பெண்களை மையப்படுத்தியே எல்லா அறிவுரைகளும் இருப்பதால், ஒரு சிறிய இளைஞனின் மன ஊசலாட்டங்கள் யாருக்கும் தெரியாமல் போகிறது. ஆனால் இந்த காலகட்டத்தில் தான் அவர்களுக்கு மிகப் பெரிய ஆறுதலும், அரவணைப்பும் தேவைப்படும். அவன் திசைமாறிப் போய்விடாமல், நல்வழிப்படுத்ததல் நம் கையில் தான் இருக்கிறது.

தான் யார், திடீரென்று ஏன் உடலில் முடி ஏற்படும். அப்போது அதற்கு தெளிவான பதில்களை சொல்பவர்கள் அருகில் இருப்பதில்லை. அல்லது அவனது கேள்விகளுக்கு விடை கிடைப்பதில்லை. அதைத் தேடிக் கண்டடைய தற்காலிக நிவாரணி இணையம். அது ஆபத்து என்று அவனுக்குத் தெரியவில்லை. ஒன்றைக் கேட்டால் இலவச இணைப்பாக தேவையற்றதை எல்லாம் கொட்டித் தரும் இணையம் என்பதைப் புரிந்து கொள்ளும் வயது அவனுக்கில்லை.

செக்ஸ் கல்வி என்றால் அய்யோ, நமது கலாசாரத்துக்கு இது தேவையில்லை என்று பயப்படும் சமூகம் நம்முடையது. ஆனால் உண்மையில் இது போன்ற அடிப்படை கேள்விகளுக்கான பதில்களை அருவெறுப்பு இல்லாமல் கற்றுக் கொள்வது நல்லதுதானே? பிள்ளைகளின் தந்தைகளுக்கு அவர்களிடம் பேசப் பொறுமை இருப்பதில்லை. இதைப் போய் பையன்கிட்ட பேசலாமா இதெல்லாம் அசிங்கம் ச்சீ என்றெல்லாம் நினைக்காமல் நம் குழந்தையிடம் நல்லது கெட்டதைப் பற்றி பெற்றோரில் ஒருவரேனும் பேசத் தயக்கம் காட்டக் கூடாது. என் மகன் என்னிடம் வந்து பயாலஜி பாடத்தில் டீச்சர் சில பகுதிகளை வேகமாக கடந்துவிட்டார்கள் என்று போன வருடம் சொன்னபோது, அதை வாங்கிப்

பார்த்தேன். உடலியல் சார்ந்த விஷயங்கள், பெண்களின் மாதவிடாய் மற்றும் கரு உருவாகக் கூடிய சில அடிப்படை தகவல்களை பாடமாகத் தந்திருந்தார்கள்.

பாடத் திட்டத்தில் உடலியல் சார்ந்த தகவல்கள் இருந்தாலும் ஆசிரியர் உட்பட பல பள்ளிகளில் குழந்தைக்கும் தெரிந்தால்தான், தன் தாயின், தன் சகோதரியின் உடல்நிலை குறித்த அக்கறை பெண்களின் மீதான மரியாதையாக மாறும் என்பது என்னுடைய நம்பிக்கை.

தற்காலத்தில் லவ் என்ற வார்த்தை தான் பள்ளியில் அதிகம் கூறப்படும் சொல் என்பதை




தெளிவாக அவ்விஷயங்களை ஏற்படுத்தும்படியான பாடத்தை நடத்துவதில்லை. அந்தப் பாடத்தை மிகவும் நிதானமாக விளக்கினேன். இப்போது அவனுக்கு பீரியட்ஸ் என்றால் என்னவென்றுத் தெரியும். ஒரு பேப்பரில் சானிடரி நாப்கினின் பெயரை எழுதி மருந்துக் கடையில் வாங்கி வா என்று சொன்ன போது, பேப்பரைக் கிழித்துவிட்டு, அவனே கேட்டு வாங்கி வந்தான்.

இது முந்தைய காலங்களில், அவன் தந்தை கூட முதலில் செய்யத் தயங்கிய விஷயம். இதெல்லாம் ரொம்ப ஓவர் அவனைப் போய் எதுக்கு வாங்கி வரச் சொன்னே என்று வீட்டினர் கேட்டாலும், இந்த வயதில் அவனுக்கு ஒரு பெண்ணின் வலி புரியவில்லை என்றால், எந்த வயதிலும் புரியாது. வலி என்பதைவிட அது இயற்கை அதுவே பிறப்பின் இயல்பு என்ற தெளிவு ஒவ்வொரு ஆண் ஒவ்வொரு பெற்றோரும் அறிவார்கள். என்னிடமே தன் வகுப்பில் நான்கைந்து பேர் டீப் லவ்வில் இருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறான். நீ எப்படிடா என்று விளையாட்டாகக் கேட்டால், என் க்ளாஸ் கேர்ள்ஸ் எல்லாம் ரொம்ப பொல்லாதவங்க, அதோட எனக்கு யாரையும் பிடிக்கலை என்றான். ஏன் இத்தனை வெறுப்பு என்று கேட்டு அது வெறுப்பு இல்லை பயம் தயக்கம் என்பதைப் புரிந்து கொண்டு, அவனிடம், நீ ஸ்கூலுக்கு எதுக்கு போறே படிக்கறதுக்கு, அதை மட்டும் கவனமா செய் என்றேன்.

தவிர லவ் பண்றாங்கன்னு சொன்னே இல்லை அவங்க அதுக்கான அர்த்தத்தைக் கூட தெரிஞ்சுக்காதவங்க. அதனால அதை நீ கவனத்துல வைச்சுக்க வேண்டாம். காதல் அதன் உண்மையான அர்த்தத்தில் உனக்கு என்னிக்காவது புரியும்.

அப்போ நீ அதை பத்தி யோசி என்றேன். அவனுக்கு தலை சுற்றிய மாதிரி இருந்ததால் டாபிக்கை மாற்றி பேசத் தொடங்கினான். தற்போதெல்லாம் கல்லூரி காதல்கள் மாறி, பள்ளியில், தெருக்களில், ரயில் நிலையங்களில் என காதல் இளம் வயதினரைப் படுத்தும் பாடு சொல்லில் அடங்காது. அந்தக் காதலுக்காக அந்த இளம் வயதினர் கொலை, தற்கொலை என தவறான முடிவை நோக்கித் திரும்புகிறார்கள் என்பது சோகம்.

பெற்றோர்கள் இது குறித்த விழிப்புணர்வை தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தவில்லை என்றால் பாதிப்பு அதிகமாகும். ஒரு ஸ்கேல் எடுத்து வகுப்பு நடத்தாமல் தோழமையுடன் பேசினால் போதும் பிள்ளைகள் கெட்டிக்காரர்கள். அதையும் மீறி அவர்கள் ஹார்மோன்கள் சேட்டை செய்தால், உடனே ரியாக்ட் செய்யாமல் விட்டுப் பிடியுங்கள். இந்த வயதில் எதைவிடவும் படிப்பு ஒன்றே முக்கியம் என்பதை உங்கள் சொல்லில், செயலில் மிகுந்த அக்கறை மற்றும் பொறுமையுடன் சொல்லுங்கள். நிச்சயம் கேட்பார்கள்.

என்ன விஷயமாக இருந்தாலும் மகனிடம் பேசுங்கள். உங்கள் குழந்தைகளிடம் மனம் விட்டுப் பேசுங்கள். உங்கள் குழந்தைகள் உங்களிலிருந்து உருவானவர்கள் தான். யாரையும் விட அவர்களை நம்புங்கள். அவர்கள் நீங்கள் பெரிதும் மதிக்கும் யாரைப் பற்றியாவது குறை கூறினால், அதை காது கொடுத்துக் கேளுங்கள். அவர்களது குரல் சன்னமாக ஒலித்தாலும் அதில் உண்மை இருக்கும். நம் குழந்தைகள் நம்மை மட்டும் நம்பி தான் இந்த உலகிற்கு வந்துள்ளார்கள்.

அவர்கள் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளும்படியாக வளரும் வரை, நூறு சதவிகிதம் நாம் தான் பொறுப்பு. நம்முடைய பொறுப்பு என்பது சமைப்பது, உடைகள் வாங்கித் தருவது, படிக்க வைப்பது உள்ளிட்ட விஷயங்களில் முடிந்து போவதில்லை. அவர்களின் உலகில் நடப்பவற்றை அவதானித்து, அவர்களுடன் அந்தச் சின்னஞ்சிறு உலகத்தில் நிகழும் பிரச்னைகள், வன்முறைகளை எதிர்த்துப் போராடி, அவர்களை ஜெயிக்க வைப்பதுதான் பெற்றோர்களாகிய நம் முக்கிய கடமை. மாறாக அவர்களை மிரட்டி, நீ தான் தப்பு செய்திருப்பாய் என்று பாதிக்கப்பட்டிருக்கும் அவர்களையே குற்றம் சுமத்தும் பெற்றோர் இருப்பதால்தான் மனச் சிக்கல்களுடன் குழந்தைகள் வளர்கிறார்கள்.




நாளைய இளைய சமூகம் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்றால் இன்று குழந்தைகள் தம் மனத்தை திறந்து பேச வேண்டும். நாமும் அவர்களுடன் சாப்பிடு, படி, தூங்கு என்பது போன்ற ரொட்டீன் உரையாடல்களை எல்லாம் விடுத்து இன்னிக்கு நாள் எப்படி இருந்தது. புதுசா என்ன செஞ்சே, யார் மனசையாவது காயப்படுத்திட்டியா அல்லது ஏதாவது உனக்கு பிரச்னையா?

ஒவ்வொரு நாளும் வெவ்வேறு விதமாகப் பேசுங்கள். அந்தப் பேச்சு தான் உங்கள் பிள்ளைகளை சிந்திக்க வைக்கும், தைரியம் கொடுக்கும், நமக்கு அம்மா இருக்கிறாள் என்ற ஆழமான நம்பிக்கையை வேறூன்றச் செய்யும். நம் பிள்ளைகளின் பாதுகாப்பில் தான் நமது மகிழ்ச்சி உள்ளடங்கியிருக்கிறது. காலத்துக்கு ஏற்ப நவீன அம்மாக்களாக நாம் உருமாறுவதுதான் சரி. ஒப்புக் கொள்வீர்கள்தானே?



# தமிழ்

## நற்றமிழரின் நாடித்துடிப்பு


# 2018 CALENDAR

# 2018


### JANUARY





### FEBRUARY




### MARCH




### APRIL




### MAY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

### JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### AUGUST

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

### OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




editor@ithamil.com

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा